பக்கங்கள் : பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 23 சனிக்கிழமை (08.11.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 345

# தமிழர்களைக் கொல்ல அரசு தினமும் ரூ.46 கோடி செலவு!

## நாடாளுமன்றத்தில் சுரேஷ் எம்.பி.காட்டம்

கொழும்பு, நவம்பர் 8

இலங்கை அரசு தமிழர்களைக் கொலை செய்வதற்காக ஒரு நாளைக்கு 45 கோடி ரூபா 60 லட்சம் ரூபாவைச் செலவு செய்கிறது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று நாடாளுமன்றில் சாடியது.

"தமிழினத்தைப் பூண்டோடு அழித்தொழித்து கிளிநொச்சியைக் கைப்பற்றித் தனது சிங்கக் கொடியை ஏற்றுவது தான் மஹிந்த ராஜபக்ஷவின் திட்டம். அங்கு இதற்காக எதை வேண்டுமானாலும் செய்வதற்கு மஹிந்த ராஜபக்ஷ தயங்கமாட்டார்" என்றும் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி. சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

## பலத்த ஷெல் வீச்சு; அடிக்கடி ஹெலி ரோந்து!

யாழ்ப்பாணம், நவ.8

குடாநாட்டில் நேற்றிரவு சுமார் 9.30 மணியளவில் ஹெலிகளின் ரோந்து தொடர்ந்து நடத்தப்பட்ட பலத்த ஷெல் வீச்சுக்கள் காரணமாக மக்கள் பதற்றத்துக்கு ஆளாகினார்கள்.

ஹெலிகள் கடற்கரை ஓரமாக அடிக்கடி வட்டமிட்டு நோட்டமிட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் நகரப்பகுதியை அண்டிய பகுதிகளில் இருந்து ஏவப்பட்ட ஷெல்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் கட்டணம் குறையுமா?

கொழும்பு, நவ.8

ஆகக் குறைந்தளவு தூரத்துக்கான பஸ் கட்டணங்கள் எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் ஒரு ரூபாவால் குறைக்கப்படவிருக்கின்றன என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நேற்று அறிவித்தது.

இதேவேளை-

வரவு - செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை போன்று பஸ் கட்டணங்களை 25 வீதத்தால் குறைக்க முடியாதென இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரி

(18 ஆம் பக்கம் பார்க்க)

## முதல்வர் கருணாநிதி ஜனநாயக வழிகளில் ஈழத்தமிழருக்கு நிச்சயமாக உதவி செய்வார்

### 'குமுதம்' இதழுக்கு வழங்கிய பேட்டியில் நடேசன் நம்பிக்கை



சென்னை,நவ.8

ஈழத் தமிழர்களுக்கு இன்னல்கள் ஏற்பட்ட போதெல்லாம் என்னென்ன செய்ய வேண்டுமோ அத்தனை பணிகளையும் ஜனநாயக வழியில் தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி செய்து வருகின்றார் - என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்திலிருந்து வெளிவரும் 'குமுதம்' வார இதழுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் அதனைத் தெரிவித்தார்.

அந்தப் பேட்டியின் முழுவிவரம் வருமாறு-

கே - இலங்கை இராணுவம் முன்னேறி வரும் நிலையிலும், விடுதலைப் புலிகள் முற்று முழுதாக இன்னும் யுத்தத்தில் குதிக்கவில்லையென்று சொல்லப்படுகிறது. இந்தப் பின்வாங்கலுக்கு என்ன காரணம்?



ப - எமது மக்களைப் பாதுகாப்பதற்காக(18 ஆம் பக்கம் பார்க்க)

## வீட்டுக்காரர்களை அறைகளுக்குள் பூட்டிவைத்து காத்திருந்த ஆயுததாரிகள் இளைஞர்களைக் கடத்தினர்

### குப்பிளான் தெற்கில் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ.8

அருகருகே உள்ள வீடுகளுக்குச் சென்ற ஆயுததாரிகள், அங்கிருந்தவர்களை அறைகளுக்குள் பூட்டி வைத்து விட்டு, இரண்டு வீடுகளையும் சேர்ந்த இளைஞர்கள் திரும்பும் வரை காத்திருந்து அவர்கள் வந்ததும் கடத்திச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் குப்பிளான் தெற்கில் நடைபெற்றுள்ளது.

அருகருகே உள்ள வீடுகளைச் சேர்ந்த எம். நிமலராஜன் (வயது -27), ஆர். ஞானராசா ஆகியோர் வழமைபோல் தொழிலின் நிமித்தம் வெளியே சென்றனர். அதன் பின்னர் அவர்களின் வீடுகளுக்கு வந்த இரு ஆயுததாரர் குழுக்கள் அங்கு சென்று விசாரித்து விட்டு, இரண்டு வீட்டுக்காரர்களையும் அறைகளில் பூட்டி வைத்து விட்டு காத்திருந்தனர்.(18 ஆம் பக்கம் பார்க்க)

## தொடர் போராட்டத்தில் குதிக்கிறார் வைகோ

மதுரை, நவ.8

ஈழத் தமிழர்களுக்கு எதிராகச் செயற்படும் மத்திய, மாநில அரசுகளைக் கண்டித்து தொடர் போராட்டங்கள் நடத்தப்படும் - என்று ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ தெரிவித்துள்ளார்.

மதுரையில் நேற்றுச் செய்தியாளர்களிடம்

(18 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே கல்விச்சுடர் →
★ க.பொ.த.ப. (சா) - விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் -II

## அரசின் வரவு – செலவுத் திட்டத்தை கடுமையாக எதிர்க்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, நவ. 08

2009ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நாட்டு மக்களுக்குப் பாதகமாக அமைந்திருப்பதால் இந்த வரவு - செலவுத் திட்டத்தைக் கடுமையாக எதிர்ப்பதாக நேற்று ஜே.வி.பி. நாடாளுமன்றில் தெரிவித்தது.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற(18 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் பூநகரி நோக்கி முன்னேற விமானப்படை உதவுவதாகத் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 08

ஏ- 32 பாதை ஊடாக பூநகரியை நோக்கி முன்னேறும் படையினருக்கு விமானப் படையினர் உதவுகின்றனர் என்று விமானப்படைப் பேச்சாளர் ஜானக நாணயக்கார தெரிவித்தார்.

நாச்சிக்குடாவுக்கு வடக்கே (18 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் புலிகள் தாக்கியதில் பொலிஸ் மற்றும் ஊர்காவலர்கள் பலி

அம்பாறை, நவ. 08

அம்பாறை அம்பிட்டிய கோகிலஎல பகுதியில் நேற்றுப் பிற்பகல் 1.40 மணியளவில் விடுதலைப் புலிகளின் அணியொன்று மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஊர்காவற்படையைச் சேர்ந்த இருவரும், பொலிஸார் ஒருவரும் உயிரிழந்தனர்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தின் உதவிப் பொருள்களில் ஒரு தொகுதி இன்று அல்லது நாளை கொழும்பு வந்து சேரும்

### செஞ்சிலுவைக் குழு ஊடாக வன்னிக்கு அனுப்ப ஏற்பாடு

கொழும்பு, நவ. 08

வன்னியில் இடம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்காக தமிழகத்தில் சேகரிக்கப்பட்ட உதவிப் பொருள்களின் ஒரு தொகுதி இன்று அல்லது நாளை கொழும்புத் துறைமுகத்தை வந்தடையும் என்று தமிழகத்திலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

சுமார் 2 ஆயிரம் தொன் நிறையுடைய உணவுப் பொருள்கள் 80 ஆயிரம் பொதிகளாக்கப்பட்டு சென்னைத் துறைமுகத்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கு மருந்து ஏற்றிச்சென்ற லொறிகள் ஓமந்தையில் மறிப்பு

முல்லைத்தீவு, நவ. 08

வன்னியில் உள்ள மக்களுக்கான மருந்துப் பொருள்கள் மற்றும் சிறுவர்களுக்கான ஊட்டச்சத்துள்ள உணவுப் பொருள்களை ஏற்றிச்சென்ற லொறிகளை ஓமந்தை சோதனைச்சாவடியிலுள்ள இராணுவத்தினர் கடந்த இரு தினங்களாகத் தடுத்துவைத்துள்ளனர் என்று முல்லைத்தீவுப் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த லொறிகளில் முல்லைத்தீவு வைத்தியசாலைக்குத் தேவையான இவ்வருட காலாண்டுக்குரிய பொருள்களே உள்ளன என்றும், ஒரு லொறியினுள் மலேரியா, தொய்வு மற்றும் நீரிழிவு நோய்களுக்கான தடுப்பு மருந்துகள் உள்ளன என்றும் கூறப்பட்டது.

கடந்த ஜூலை மாதம் தொடர் இராணு

(18 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலையில் ஆய்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 08

யாழ்ப்பாண பொருளியலாளர் சங்கத்தி னால் நடாத்தப்படும் ஆய்வுக் கருத்தரங்கு தொடர்-01 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி முதல் 11மணிவரை யாழ்ப் பாண பல்கலைக்கழக பொருளியல்த் துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வினை யாழ்ப்பாண பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் ஆரம்பித்து வைப்பார். (01)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 24 ★ 04 ★ 1932



உதிர்வு 09 ★ 10 ★ 2008

## அமரர் சின்னக்குட்டி மார்க்கண்டு

மாதம் ஒன்று சென்றாலும் ஆறாது எம் துயர்
தந்தையாய் ஆசானாய் இவ்வுலகில் அமர்ந்து
அறிவு பல புகட்டி எமை வளர்த்த தெய்வமே
நீ எங்கு எமை விட்டு சென்றாயோ...?
உன் நினைவுகள் என்றும் எம் இதயத்தில்
நிலைத்திருக்கும்

அன்னாரின் மறைவை அறிந்து எமக்கு ஆறுதல் கூறியவர்கள், சகல வழிகளிலும் துயர் பகிர்ந்தவர்கள், இறுதி நிகழ்வுகளில் பல உதவி புரிந்தவர்கள் அனைவருக்கும் நன்றி அறிதலைத் தெரிவிப்பதோடு எமது இல்லத்தில் இன்று (08.11.2008) சனிக்கிழமை இடம்பெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பழைய பொலிஸ் நிலைய வீதி,
கோப்பாய் தெற்கு. (79716)

என்றும் நினைவுகளுடன்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி சதாசிவம் (சங்கானை)

குளத்தடி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவராகிய சின்னத்தம்பி சதாசிவம் நேற்று (07.11.2008) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் புஸ்பகாதேவி, சிறிஸ்கந்தராசா (லண்டன்), நிர்மலாதேவி, யோகேஸ்வரன் (லீலா வெதுப்பகம், சங்கானை), புஸ்பமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபோதினி (லண்டன்), அருளம்பலம் (அருளானந்தம் பிடைவை நிலையம், சங்கானை), சகுந்தலாதேவி (லண்டன்), துரைசிங்கம் (காசிப்பிள்ளை அன் சன்ஸ், சங்கானை), பத்மாவதி, ஸ்கந்தராசா (பொறுப்பதிகாரி, வலி.மேற்குப் பிரதேசசபை உப அலுவலகம், வட்டுக்கோட்டை) ஆகியோரின் அருமை மாமனாரும், பிறேம்நாத் (லண்டன்), விஜிதா (வலி.மேற்குப் பிரதேசசபை உப அலுவலகம், சங்கானை), கீர்த்திகா, குணநாத் (லண்டன்), கஜலாணி (லண்டன்), கயல்விழி (லண்டன்), ரமேஸ் (ஆசிரியர், கலைமகள் வித்தியாலயம், பிரான்பற்று, பண்டத்தரிப்பு) சுபாஸ், ராதிகா, (யாழ்.பல்கலைக்கழக நுண்கலை பீடம், மருதனார்மடம்) பிரதாமினி (யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி), பிரசாந்தன் (சாயி பாடசாலை, மானிப்பாய்), அச்சுதன் (யா/வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), அஸ்வினி (யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டு) ஆகியோரின் பேரனும், மதுரங்கா, கஜேந்திகா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2008) சனிக்கிழமை ந.ப. 12 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குளத்தடி வீதி,
சங்கானை.

தகவல்:
ஸ்கந்தராசா (மருமகன்)

# 16ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் வேலுப்பிள்ளை ஜெகதீசன்

(ஓய்வுபெற்ற கணக்காளர், நல்லூர், கமைச்சி தெற்கு, கிளிநொச்சி, சங்கானை ப.நோ.கூ.சங்கம்)

உருவாய் 06★03★1938

அருவாய் 24★10★2008

24.10.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் பிரிவுச்செய்தி கேட்டவுடன் ஓடிவந்து பல வழிகளில் உதவிபுரிந்த அயலவர்களுக்கும், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளை (09.11.2008) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் மு.ப 10 மணியளவில் நடைபெற்று தொடர்ந்து மதியபோசனமும் இடம்பெறும்.

"குஹவாசம்"
செட்டிய குறிச்சி,
பண்டத்தரிப்பு.
தொ.பே.இல: 071 3496 991, 077 9383 290 (79708)

[illegible] (மனைவி),
குஹசொருபன் (மகன்).

# பிரத்தியேக வகுப்புக்கள்

ஆண்டு - 5 புலமைப்பரிசில்,
A/L - தமிழ்
வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு: அ.றொனிராஜன்
இல.271/1A, நாவலர் லேன், ஆனைப்பந்தி.
T.P: 0779361486

# இறைச்சிக் கோழி விற்பனைக்கு

நிறை கூடிய தரமான புறொயிலர் இறைச்சிக் கோழி, முட்டை என்பன விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

செம்மணி பாம்,
77/3, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு.

# விற்பனைக்கு

டாக்டர் பாவனையில் உள்ள திறம் நிலையில் Nissan Vanette டீசல் வான் விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் காலை 6 - 8 மணி, மாலை 4 - 6 மணி
41, ஈச்சமோட்டை வீதி,
சுண்டுக்குளி.

# கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAKA புறொயிலர்
குஞ்சுகள் 10.11.2008
விநியோகிக்கப்படும்.
பதிவுகளை மேற்கொள்ளவும்.
★ ராஜீவ் - நவாலி வீதி,
ஆனைக்கோட்டை

# வான் விற்பனைக்கு

NP JF xxxx தொடரிலக்க
GL42 மொடல் TOYOTA
TOWN ACE பெற்றோல்
வான் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 021 222 2333
(காலை 9 மணி - பி.ப. 4 மணி வரை)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 08

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் ஈ.எஸ்.பேரம்பலம் சக நிறுவனத்தின் அனுசரணையுடன் இன்று நடத்தும் சுற்றுப் போட்டியில் பங்குபற்றவிருக்கும் அணிகள் வருமாறு:

13 வயதுப் பிரிவு

யாழ். மத்திய கல்லூரி மைதானம் -

* சண்டிலிப்பாய் இந்து எதிர் நெல்லியடி ம.ம.வி
* சென்.ஜேம்ஸ் ம.வி எதிர் சென். ஜோன்ஸ் 'பி'.
* அராலி சரஸ்வதி எதிர் நாவாந்துறை றோ.க.
* மகாஜனா எதிர் யாழ். சென்றல் 'பி'
* சென். ஜோன்ஸ் 'ஏ' எதிர் சென். அன்ரனீஸ்.
* சென். பற்றிக்ஸ் எதிர் யாழ். சென்றல் 'ஏ'
* தேவரையாளி இந்து எதிர் தீவகம் 11
* மானிப்பாய் இந்து எதிர் அருணோதயா.

15 வயதுப் பிரிவு

யாழ். சென்றல் மைதானம் -

* சென். அன்ரனீஸ் எதிர் இமையாளன் ஏ.ரி.எம்.எஸ்.
* யாழ். சென்றல் எதிர் தேவரையாளி இந்து.
* நாவாந்துறை றோ.க எதிர் ஹாட்லி.
* அராலி சரஸ்வதி எதிர் புங்குடுதீவு ம.வி.

சென்பற்றிக்ஸ் மைதானம் -

* அருணோதயா, மகாஜனா, வேலணை சென்றல்.
* மானிப்பாய் இந்து எதிர் நயினா தீவு கணேசா
* சென். சாள்ஸ் ம.வி, சென்.ஜேம்ஸ், நெல்லியடி சென்றல்.
* சென்.ஜோன்ஸ் எதிர் சண்டிலிப்பாய் இந்து.

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சாந்தநாயகி பவளகுமாரன்
அவர்களது அன்புச் சகோதரன்

## திரு.இலங்கையர் குகநாதன்

05.11.2008 அன்று இறைபதம் அடைந்தார். இவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை நலன்புரிக்கழகம்,
யா/கைதடி விக்கினேஸ்வர வித்., கைதடி.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கனகரத்தினம் அருள்மலர் (பொன்னுக் குஞ்சு)



சின்னப்பா வீதி, நவாலி கிழக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகரத்தினம் அருள்மலர் 06.11.08 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளம்பூரணம் - பரிமளம் தம்பதிகளின் மூத்த புதல்வியும் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அருள்சோதிரத்தினம் (விஜயன்), சிவசோதிரத்னம் (பவா), விஸ்வசோதிரத்தினம் (இன்பம்) மற்றும் இரத்தினராணி (லலி), இரத்தினமலர் (ஜீவா, லண்டன்), இரத்தினறூபி (றூபி, லண்டன்) ஆகியோரது அன்புத் தாயாரும் தேவராணி, ரவீனா காலஞ்சென்ற மாணிக்கவாசகர் மற்றும் நற்குணராசா (லண்டன்), சுரேஸ்குமார் (லண்டன்), ஆகியோரின் அன்பு மாமியாரும் செல்வரத்தினம் (பவளம்) அன்புச் சகோதரியும், வினோபா (மலேசியா), ராதிகா (கனடா), ராகுலன் (கனடா), குணாளன் (கனடா), பகீரதன், ஷர்மிலா (லண்டன்), மெலோ (லண்டன்), தர்ஷினி (லண்டன்), நிரோஜினி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேத்தியும் பிரியங்கா, ஜீவேஸ், மதுசன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.11.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்துக்கட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சின்னப்பா வீதி,
நவாலி கிழக்கு,
மானிப்பாய். (79720)

தகவல்:
அ.தேவராணி
(மருமகள்).

## வேலுப்பிள்ளை பொன்னுத்துரை



சண்டிலிப்பாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பொன்னுத்துரை நேற்று (07.11.2008) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - ஆச்சிமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும், இராசம்மாவின் பாசமிகு கணவரும், சின்னம்மா, காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, தம்பிராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சிவபாக்கியம், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை மற்றும் துரைராஜா மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், நேசமலர், அமிர்தலிங்கம் (கீஜமுகன் ஸ்ரோர்ஸ், சண்டிலிப்பாய்), இராசமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வநாயகம் (கடல் கடந்த தந்தி தொடர்பாளர், SLT, கொழும்பு), ரஞ்சினி, யோகேஸ்வரன் (கிராம அலுவலர், கொக்குவில்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சசிகரன் (கொழும்பு), சர்மிளா (கொழும்பு), சசிதன் (M.P.C.S, மானிப்பாய்), சுதர்சன் (தாதியர் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்), சர்மினி (ஆசிரியர், யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), மதுரா (வவுனியா பல்கலைக்கழக வளாகம்), யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவிகளான மதுமியா, மயூரா மற்றும் பிரிந்தா (மாணவி, யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.11.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சிவானந்தம் பூரணம்



மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவானந்தம் பூரணம் நேற்று (07.11.200) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவானந்தம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கைதடித் தவில் வித்துவான் பழனிமலையின் அன்பு மாமியாரும் திருவாதவூர், சண்முகம் (மெக்கானிக்), அம்பிகையம்மா, திலகவதி ஆகியோரின் அருமைத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் மேற்கு, இணுவில்.

தகவல்: திலகவதி (மகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## சர்வதேசக் கண்காணிப்பாளர்களை அடுத்து வெளியேறும் சிவில் சமூகப் பிரதிநிதிகள்

மிக மோசமான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வரும் நாடுகளின் வரிசையில் இலங்கைக்கு உயர்ந்த இடம் கிடைத்திருப்பது உண்மை.

சட்ட விரோதப் படுகொலைகள், படைத்தரப்பின் அட்டகாசங்கள், அட்டூழியங்கள், ஆள்களைக் கடத்தல், பின்னர் காணாமற் போகச் செய்தல், கடத்திக் கப்பம் பெறல், பணயம் வைத்தல், அச்சுறுத்திக் காரியம் செய்வித்தல், ஊடகங்களுக்கு எதிரான கொடூர அடக்குமுறை என்று மனித உரிமை மீறல்கள் கொடிகட்டிப் பறக்கும் தேசமாக இலங்கை விளங்குகின்றது.

தன்னை சட்ட ரீதியான - இறைமையுள்ள - அரசு என்று பிரகடனப்படுத்திக் கொள்ளும் இலங்கை ஆட்சித் தரப்பினாலும், அதன் முகவர்களான படைத்தரப்பினாலும் இழைக்கப்படுபவை எனக் கூறப்படும் மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்தே சர்வதேச மட்டத்தில் இப்போது அதிக சிரத்தையும், கவலையும், விசனமும் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

திருகோணமலையில் ஐந்து தமிழ் மாணவர்கள் படுகொலை, மூதூரில் மனித நேயத் தொண்டுப் பணியாளர்களான 17 பேர் கொடூரமாகக் கூண்டோடு படுகொலை செய்யப்பட்டமை என்று இந்த ஆட்சித்தரப்பின் அதிகாரம் ஆரம்பித்த காலம் தொட்டே கட்டவிழ்ந்த கோரச் செயற்பாடுகளின் உச்சத்தை அடுத்து -

சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தைச் சமாளித்து, அந்த சமூகத்தை ஏய்க்காட்டும் நோக்கோடு, புதிய இலங்கை அரசுத் தலைவர், அத்தகைய மோசமான சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தும் நடவடிக்கை என்ற பெயரில் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை அமைக்கும் கண்கட்டுவித்தைச் செயற்பாட்டை அரங்கேற்றினார்.

படைத்தரப்பின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருக்கும் வடக்கு - கிழக்குப் பிரதேசமான தமிழர் தாயகத்திலும், இலங்கைத் தீவின் ஏனைய பிரதேசங்களிலும் தினசரி தமிழர்களுக்கு எதிராக வகைதொகையின்றி மனித உரிமை மீறல்கள் அரங்கேறுகின்றன. இந்த அராஜகங்களுக்காக ஒரு சிப்பாயுக்கு எதிராகக் கூட ஏதொரு நடவடிக்கையும் எடுத்ததாகத் தகவல் இல்லை.

இந்தப் பின்புலத்தில்தான் மிக மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்கள் என்று தான் கருதிய பதினாறு விடயங்கள் குறித்து விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக எட்டு ஆணையாளர்களைக் கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு நியமனம் என்ற நாடகத்தை அரங்கேற்றினார் ஜனாதிபதி ராஜபக்ஷ.

அத்தோடு அந்த விசாரணைகள் பக்கச் சார்பின்றி நியாயமாக நடக்கின்றனவா என்பதை நேரில் பிரசன்னமாகியிருந்து கண்டறிவதற்காக சர்வதேச பிரமுகர்களைக் கொண்ட கண்காணிப்புக் குழு ஒன்றையும் கூடக் கண்துடைப்புக்காக அழைத்தார் - அனுமதித்தார் - அவர்.

ஆனால் இரண்டு வருடங்கள் வெறுமனே கழிந்தது தான் மிச்சம். ஆக்கபூர்வமாக எதுவுமே நடக்கவேயில்லை. காலத்தை இழுத்தடித்து காரியத்தை நீர்த்துப்போக வைக்கும் கைங்கரியத்தையே ஆணைக்குழு மேற்கொண்டு வந்திருக்கிறது.

தவிரவும், இந்த விசாரணைகளில், பல சம்பவங்கள் தொடர்பில் - அரசுத்தரப்பின் மீது குற்றம் சுமத்தப்படுகின்றது.

இந்நிலையில் அரசுத் தரப்புக்காக நீதிமன்றில் ஆஜராவதோடு, அத்தரப்பின் சட்ட முகவர் அமைப்பாகவும் விளங்கும் சட்டமா அதிபர் திணைக்களமே மேற்படி ஆணைக்குழு விசாரணைகளை ஒழுங்குபடுத்தும் - ஆணைக்குழுவின் - சட்ட ஆலோசகராகவும், அந்த ஆணைக்குழுவின் சட்டத்தரணியாகவும் வெளிப்படுத்தப்பட்டது.

இவ்வாறு ஒரு விசாரணையில் அரசுத் தரப்பின் மீது குற்றச்சாட்டும் குற்றப் பொறுப்பும் சுமத்தப்படும் போது அந்த வழக்கில் அந்தத் தரப்பின் சட்டத்தரணியாக இருப்பவரே, வழக்குத் தொடுநராகவும் - அல்லது ஆலோசனைக் குழுவின் சட்டத்தரணியாகவும் - செயற்படுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று சர்வதேச கண்காணிப்பாளர்கள் திரும்பத் திரும்ப வலியுறுத்தினர். ஆனால் அந்த வலியுறுத்தல் அரசின் காதில் விழவில்லை. அந்த வாதத்தை அரசுத் தரப்பு ஏற்கவேயில்லை.

இதனாலும், மேற்படி ஆணைக்குழு விடயங்களை வீணே இழுத்தடித்து, இரண்டு வருடங்களைக் கடந்த பின்னரும் ஒன்றும் சாதிக்காமல் இருப்பதையும் கண்டு வியப்பும், விசனமும் அடைந்த சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் தமது அந்தப் பொறுப்பைக் கைவிட்டு, தமது நிலைப்பாட்டை அம்பலப்படுத்தும் பகிரங்க அறிக்கை ஒன்று வெளியிட்ட பின்னர் நாட்டை விட்டு வெளியேறினர்.

இப்போது அந்த விசாரணைகளைக் கவனித்து வந்த இலங்கை சிவில் சமூகப் பிரதிநிதிகளும் அந்தப் பொறுப்பிலிருந்து தாங்களும் வெளியேறுகின்றனர் என்று அறிவித்திருக்கின்றனர்.

ஆணைக்குழுவின் செயற்பாட்டில் அரசுத் தரப்பின் நேர்மையற்ற தலையீடு, விசாரணை நடைமுறைகளுக்கு முடக்குப் போடும் செயற்பாடு, சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான சட்ட ஏற்பாடுகளைச் செய்யத் தவறியமை, ஆணையாளர்களைத் தம் இஷ்டப்படி வெளியேற்றி நீக்கவும், புதியவர்களை அப்பதவியில் அமர்த்துவதற்கும் ஜனாதிபதி எடுத்துவரும் நடவடிக்கைகள் என்று பல அதிருப்திகளைச் சுட்டிக்காட்டி சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் அந்தக் கண்காணிப்புப் பொறுப்பில் இருந்து தாங்களும் வெளியேறுகின்றார்கள் என அறிவித்துவிட்டனர்.

இனி என்ன? சர்வதேச, உள்ளூர் பார்வையாளர்களையும், கண்காணிப்பாளர்களையும் அகற்றி விட்டாயிற்று. தன் விருப்பப்படி - தன் இசைவுப்படி - தன் இஷ்டப்படி - இந்த விசாரணைகளை ஒப்பேற்றி, அதன் மூலம் சர்வதேசத்தின் கண்ணில் மண் தூவுவது அரசுத் தரப்புக்கு இன்னும் சுலபமாகப் போய்விடும்.

## தென்மராட்சிப் பகுதியில் கொள்ளை, திருட்டு அதிகரிப்பதால் மக்கள் மத்தியில் அச்சம்

யாழ்ப்பாணம்,நவ.8

தென்மராட்சிப் பகுதியில் கொள்ளை, திருட்டுச் சம்பவங்கள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. இதனால் பொதுமக்கள் அச்சத்துடன் தமது அன்றாடப் பொழுதைக் கழிக்கின்றனர்.

இரவு, பகல் என்று பாராது ஆயுதங்களுடன் வீடுகளுக்குள் நுழையும் கொள்ளைக் கோஷ்டியினர் வீட்டில் இருப்போரை ஆயுதமுனையில் அச்சுறுத்தி பெறுமதிமிக்கப் பொருள்களையும், பணத்தையும் களவாடிச் செல்கின்றனர்.

கடந்த 3ஆம் திகதி இரு மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் தம்மை ஆயுதக்குழுவினர் என்று தெரிவித்து பட்டப்பகலில் வீட்டுக்குள் நுழைந்து வீட்டிலிருந்தோரை ஆயுதங்களைக் காட்டிப் பயமுறுத்தி அறையொன்றில் அடைத்துவிட்டு 5 லட்சத்து 17 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் பெறுமதிமிக்க பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் மீசாலை மேற்கு, பங்களா வீதியில் சுந்தரலிங்கம் என்பவரது வீட்டில் இடம்பெற்றது.

வீட்டுக்காரப் பெண்ணின் கழுத்தினை நசித்து அவர் அணிந்திருந்த தாலிக்கொடி, சங்கிலி, காப்பு, தோடு, மோதிரம் ஆகியவற்றையும் பறித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்திருட்டுத் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கடந்த 4ஆம் திகதி சூரன்போர் உற்சவத்திற்காக வீட்டுக்காரர் ஆலயத்திற்குச் சென்றிருந்த வேளையில் வீட்டின் கூரைத் தகட்டினைக் கழற்றி உள்ளிறங்கிய திருடர்கள் அங்கிருந்து தங்க நகைகள், ரி.வி., டெக், கையடக்கத் தொலைபேசி உட்படப் பெறுமதிமிக்க பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் சாவகச்சேரி, கெருடாவில் சந்தியில் உள்ள மணியம் என்பவரது வீட்டில் இடம்பெற்றது.

சூரன்போர் முடித்து வீடு திரும்பியபோதே திருட்டுப்போன விடயம் தெரிந்ததாகக் கூறப்பட்டது.

மேலும் மீசாலை மேற்கில் வீடொன்றில் திருடர்கள் ஏறி ஓடுகளை அகற்றிய வேளையில் அயல்வீட்டுக்காரர் கூக்குரலிடவே அவர்கள் தப்பியோடிய மற்றொரு சம்பவமும் இடம்பெற்றுள்ளது. இதனால் இப்பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவுகின்றது. (50-207)

## நீதிபதி அரியநாயகம் அவர்கள் முதலாம் தரத்துக்குப் பதவியுயர்வு



மந்திகை,நவ.8

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கந்தையா அரியநாயகம் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் தரம் ஒன்றுக்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

01.11.2008 தொடக்கம் இந்தப் பதவி உயர்வு நடைமுறைக்கு வருகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் தொடர்ந்தும் பருத்தித்துறை மாவட்ட நீதிபதியாகவே பணியாற்றுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (202-236)

## ஊர்காவற்றுறைக்கான பஸ் சேவையை சீராக நடத்துமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.8

ஊர்காவற்றுறைப் பிரதேசத்துக்கு நடத்தப்படும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்சேவையைச் சீராக நடத்துமாறு பிரதேச மக்கள் கோண்டாவில்சாலை பொதுமுகாமையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாகப் பிரதேச மக்கள் அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில், போக்குவரத்துச்சபையின் 777, 780 எனும் இலக்க வழிப் பாதையூடாகப் போக்குவரத்துச் சேவைகள் நடைபெற்று வருகின்றன. இச்சேவையில் கடந்த சில மாதங்களாகப் பழுதடைந்த பஸ் ஒன்றே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் பிரயாணம் செய்யும் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். குறிப்பாக,

* பஸ் இயங்கும்போது பாரிய இயந்திர இரைச்சல்.
* பஸ்ஸினைத் தள்ளி இயக்கத்தை ஆரம்பிக்கவேண்டிய நிலை.
* பஸ்ஸின் வேகம் குறைத்து அதிகரிக்கப்படும்போது கியர் போடமுடியாத நிலை.
* பஸ் இயங்கும்போது பஸ் உதைப்பினால் பயணிகளுக்கு ஏற்படும் உடல் வலி.

போன்று பல அசௌகரியங்கள் இப்பஸ்ஸில் காணப்படுகின்றன.

மேலும் இந்த பஸ் மாலை சென்று தங்கி காலை பயணிகளை ஏற்றி வருவதால் இவ்வேளைகளில் அதிகம் பயணம் செய்யும் அலுவலக ஊழியர்கள், தொழிலாளர்கள், தாமதமாதல், மன உளைச்சல் போன்ற பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். 777 வழி இலக்கப் பாதையூடாக இடைப்பட்ட வேளைகளில் எந்த சேவையும் இடம்பெறாத காரணத்தினால் அதிக பயணிகள் பயணம் செய்வதுடன் தாமதமாக இருள் சூழ்ந்தவேளைகளில் வீடுகளைச் சென்றடைய வேண்டிய நிலையும் காணப்படுகின்றது.

எனவே, இச்சேவையில் நல்ல நிலையில் இயங்கக்கூடிய பஸ் ஒன்றை ஒழுங்குபடுத்துவதுடன், இடைப்பட்ட நேரத்தில் பஸ் சேவை ஒன்றினையும் தந்து மக்கள் சேவையினை இலகுபடுத்த உதவி புரியுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது. (202)

### நாளை

| | |
|---|---|
| ஐப்பசி 24 | 09.11.2008 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | ஏகாதசி |
| | மு.இ.06.42 வரை |
| நட்சத்திரம்: | பூரட்டாதி |
| | பி.ப.03.10 வரை |
| [illegible] | [illegible] |
| சுபநேரம்: | 09.05 - 10.35 |
| ராகுகாலம்: | 04.35 - 06.05 |

## சாவகச்சேரியில் விழிப்புணர்வுச் செயற்பாடுகள்

யாழ்ப்பாணம்,நவ.8

சர்வதேச லயன்ஸ் கழகத்தினர் நவம்பர் மாதத்தினை நீரழிவு ஒழிப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

இதையொட்டி கழகத்தினர் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்களுடன் இணைந்து விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட நிலையங்களில் நீரழிவுப் பரிசோதனைகள் மேற்கொள்வதுடன் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும் நடத்தி வருகின்றனர்.

பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்றவற்றில் கழக உறுப்பினர்களும் சுகாதார உத்தியோகத்தர்களும் இப்பணியில் ஈடுபட்டு வருவதாகக் கழகச் செயலாளர் லயன் எஸ்.கே.நவரத்தினம் தெரிவித்தார். (202-207)

## புலமைப் பரிசில் பரீட்சையில் துன்னாலை மேற்கு மெ.மி.த.க.முதலிடம்

கட்டைவேலி,நவ.8

இவ்வாண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் துன்னாலை மேற்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை வடமராட்சி வலய மட்டத்தில் முதலாம் இடத்தையும், யாழ்.மாவட்ட மட்டத்தில் 5ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளது.

வடமராட்சி வலய மட்டப் பெறுபேறுகளில் துன்னாலை மேற்கு மெ.மி.த.க. பாடசாலை 42.95 வீதத்தைப் பெற்று முதலாம் இடத்தையும், நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை 35.38 வீதத்தைப் பெற்று இரண்டாம் இடத்தையும், துன்னாலை காசிநாதர் வித்தியாலயம் 34.78 வீதத்தைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளன.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் புலமைப்பரிசில் பரீட்சை நடைபெற்ற 382 பாடசாலைகளில் துன்னாலை மேற்கு மெ.மி.த.க. பாடசாலை 5ஆம் இடத்தைப் பிடித்துள்ளது. (202-236)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.8

பண்டத்தரிப்பு குடும்பப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. சாதாரண தரம் கற்கும் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கும் செயலமர்வும் நேற்று ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை காலை 8.30 மணிக்குப் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் இக்கருத்தரங்கு நடைபெறும்.

இன்று சனிக்கிழமை கணிதம், தமிழ் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆங்கிலம், கணிதம். திங்கட்கிழமை விஞ்ஞானம், ஆங்கிலம். செவ்வாய்க்கிழமை வரலாறு, தமிழ் ஆகிய பாடங்களுக்குக் கருத்தரங்கு நடைபெறும்.

இயேசு சபை அகதிப் பணி நிறுவனத்தின் அனுசரணையுடன் இக்கருத்தரங்கு நடத்தப்படுகின்றது. (202)

* * *

யாழ்ப்பாணம்,நவ.8

சாவகச்சேரி அன்பொளி கல்வி நிலையத்தில் கற்றுத் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (202)

* * *

யாழ்ப்பாணம்,நவ.8

யாழ்.அன்பொளி கல்வியகத்தின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகக் கல்வியியற்றுறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ஜெயலட்சுமி இராசநாயகம் கலந்துகொள்வார். (202)

* * *

வலி.வடக்கு,நவ.8

தமிழ் பணியாற்றிய மூதறிஞர் தமிழ் வேள் இ.க.கந்தசாமி ஆசிரியரின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் அதிபர் அ.சதானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இணுவில் கல்விச் சமூகமும் பொது மக்களும் இணைந்து நடத்தும் இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத்தலைவர் பெ.கனகசபாபதி, யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி க.தேவராஜா, உடுவில் பிரதேச செயலாளர் திருமதி ச.மஞ்சுளா தேவி, யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் உட்பட பலர் உரையாற்றுவர். (202-86)

* * *

வலி.வடக்கு,நவ.8

ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் 120 ஆவது ஆண்டு சிறப்புமலர் வெளியீடும் பரிசளிப்பு விழாவும் அதிபர் த.வாமதேவன் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் ஆசியுரையைத் தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்.பேராயர் அதி.வண.கலாநிதி டானியல் எஸ்.தியாகராசா நிகழ்த்துவார். நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக பீடாதிபதி க.தேவராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன், ஓய்வு பெற்ற அதிபர் பொ.கமலநாதன் ஆகியோரும் கலந்துகொள்வர். (202-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின், கங்குலியின் நிதானத்தால் வலுவான நிலையில் இந்திய அணி

## ஆஸி. வீரர் கிரெஜ்சா 8 விக்கெட்டுக்களை சாய்த்தார்



கங்குலியின் விக்கெட்டை வீழ்த்திய மகிழ்ச்சியில் ஆஸி.யின் கிரெஜ்சா.

இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் நாக்பூரில் நடைபெற்றுவரும் 4ஆவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 2ஆம் நாளான நேற்றைய தினம் இந்திய அணி தனது முதலாவது இன்னிங்ஸை தொடர்ந்தது.

நேற்றைய ஆட்டம் ஆரம்பிக்கும்போது இந்திய அணி 5 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 311 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் அணித் தலைவர் டோனி 4 ஓட்டங்களுடனும், கங்குலி 27 ஓட்டங்களுடனும் தமது ஆட்டத்தைத் தொடர்ந்தனர்.

நேற்றைய தினம் இருவரும் தமக்கிடையே மேலதிகமாக 111 ஓட்டங்களைச் சேர்த்திருந்த போது 56 ஓட்டங்களைப் பெற்றிருந்த அணித் தலைவர் டோனி கிறெஜ்சாவின் பந்துவீச்சில் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்தவர் ஹர்பஜன்சிங். எனினும் இந்த இணையும் நிலைக்கவில்லை. டோனியின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து கங்குலி 85 ஓட்டங்களைப் பெற்று கிறெஜ்சாவின் பந்தில் கிளார்க்கிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

தொடர்ந்து சகீர்கான் களமிறங்கினார். இவரும் ஓர் ஓட்டத்துடன் கிறெஜ்சாவின் சுழலில் சிக்கி போல்ட் செய்யப்பட்டு பெவிலியன் திரும்பினார். பின்னர் வந்தவர் மிஷ்ரா. அவரும் ஓட்டம் எதுவும் பெறாத நிலையில் கிறெஜ்சாவினால் போல்ட் செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

இறுதியாக இசாந்த் சர்மா களமிறங்கினார். இவரும் கிறெஜ்சாவின் சுழலைத் தாக்குப் பிடிக்க இயலாமல் ஓட்டமெதுவும் பெறாமல் கடிச்சிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இவரது ஆட்டமிழப்பைத் தொடர்ந்து இந்திய அணியின் முதலாவது இன்னிங்ஸ் 441 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. ஹர்பஜன் சிங் ஆட்டமிழக்காது 18 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

ஆஸி. அணி சார்பாக அபாரமாகப் பந்து வீசிய கிரெஜ்சா 8 விக்கெட்டுக்களைச் சாய்த்தார். ஜோண்சன், வட்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸி. அணியின் ஆரம்ப வீரர்களாக ஹைடன், கடிச் ஆகியோர் களமிறங்கினர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 32 ஆக இருக்கும்போது 16 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஹைடன் ரண் அவுட் முறையில், தமிழக வீரர் விஜயினால் ஆட்டமிழக்கச் செய்யப்பட்டார்.

பின்னர் வந்தார் ஆஸி. அணியின் தலைவர் ரிக்கி பொண்டிங். இவர் 24 ஓட்டங்களைப் பெற்று ஹர்பஜன்சிங்கின் பந்துவீச்சில் போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து கடிச்சுடன் இணைந்து கொண்டார் மைக்கல் ஹஸி.

2 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 189 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய 2ஆம் நாள் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்டம் முடிவடையும்போது கடிச் 92 ஓட்டங்களுடனும், ஹஸி 45 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

ஆட்டத்தின் 3ஆம் நாள் இன்று தொடரும்.

## நாக்பூர் டெஸ்ட் துளிகள்...

*நாக்பூர் ஜம்தாவில் அமைந்துள்ள புதிய விளையாட்டரங்கில் இந்திய- ஆஸி. அணிகளுக்கிடையில் தற்போது நடைபெறுவதே முதல் டெஸ்டாகும். உலக அளவில் இது 99ஆவது டெஸ்ட் மைதானமாகும்.

*அவுஸ்திரேலியாவுக்கு இது 700ஆவது டெஸ்டாகும். அதிக டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றுள்ள 2ஆவது அணி அவுஸ்திரேலியா. இதற்கு முன்பாக இங்கிலாந்து 877 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி இருக்கிறது.

*சிறப்புமிக்க டெஸ்ட் போட்டிகளில் அவுஸ்திரேலியா தோல்வியோ, சமநிலையோ கண்டதில்லை. அதாவது தனது 1ஆவது, 100ஆவது, 200ஆவது, 300ஆவது, 400ஆவது, 500ஆவது, 600ஆவது டெஸ்ட் போட்டிகளில் வெற்றியையே கண்டிருக்கிறது. ஆனால் 700ஆவது டெஸ்ட் அவர்களுக்கு எப்படி அமையும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

*100ஆவது டெஸ்ட் விளையாடிய 8ஆவது இந்திய வீரர் வி.வி.எஸ்.லட்சுமண் ஆவார். இதற்கு முன்பாக டெண்டுல்கர் (154 டெஸ்ட்), கும்ப்ளே (132), கபில்தேவ் (131), டிராவிட் (129), கவாஸ்கர் (125), வெங்சர்க்கார் (116), கங்குலி (113) ஆகிய இந்திய வீரர்கள் நூறு டெஸ்டில் ஆடி இருக்கிறார்கள். அதே சமயம் தலைமைப் பொறுப்பு இல்லாமல் இச்சிறப்பை பெறும் முதல் இந்திய வீரர் லட்சுமண் தான்.

*ஜேசன் கிரெஜ்சா, அவுஸ்திரேலியா சார்பில் களமிறங்கிய 403ஆவது டெஸ்ட் வீரர்? எம்.விஜய் இந்தியா சார்பில் அறிமுகமான 260ஆவது டெஸ்ட் வீரர் ஆவார்.

*தமிழகத்தில் இருந்து சர்வதேச டெஸ்டில் களமிறங்கிய 24ஆவது வீரர் எம்.விஜய் ஆவார். கடைசியாக தமிழகத்தில் இருந்து தினேஷ் கார்த்திக் ஆடியிருக்கிறார்.

*100ஆவது டெஸ்டில் அதிக ஓட்டங்கள் (64 ஓட்டங்கள்) சேர்த்த இந்திய வீரர் என்ற பெருமையை லட்சுமண் பெற்றுள்ளார். இதற்கு முன்பாக கபில்தேவ் தனது 100ஆவது டெஸ்டில் 55 ஓட்டங்கள் (பாகிஸ்தான் எதிராக, 1990ஆம் ஆண்டு) எடுத்ததே அதிகபட்சமாக இருந்தது.

## சச்சினின் 40ஆவது சதம்

* டெஸ்டில் 40-வது சதத்தை அடித்த முதல் வீரர் டெண்டுல்கர். அவருக்கு அடுத்தபடியாக அதிகபட்சமாக அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கிபொண்டிங் 36 சதங்கள் அடித்திருக்கிறார்.

* டெண்டுல்கர் முதல் இன்னிங்ஸில் மட்டும் 31 சதங்களை விளாசி உள்ளார்.

* சொந்த மண்ணில் டெண்டுல்கருக்கு இது 17ஆவது சதமாகும். இதன் மூலம் இந்திய மண்ணில் அதிக சதங்கள் அடித்திருந்த கவாஸ்கரின் (16 சதம்) சாதனையை முந்தினார்.

* டெஸ்டில் டெண்டுல்கர் 50 ஓட்டங்கள் மற்றும் அதற்கு மேல் 91 முறை (40 சதம், 51 அரைசதம்) எடுத்து புதிய சாதனை படைத்துள்ளார். இதற்கு முன்பு இந்தச் சாதனைப் பட்டியலில் அவுஸ்திரேலியாவின் அலன் போர்டர் (சதம்-27, அரை சதம்-63) முதலிடத்தில் இருந்தார்.

**சதங்கள் விவரம்**

ஒவ்வொரு அணிக்கு எதிராக டெண்டுல்கர் அடித்த சதங்கள் எண்ணிக்கை விவரம் வருமாறு:-

| நாடு | டெஸ்ட் | சதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியா | 29 | 10 |
| பங்களாதேஷ் | 5 | 3 |
| இங்கிலாந்து | 22 | 6 |
| நியூஸிலாந்து | 16 | 3 |
| பாகிஸ்தான் | 18 | 2 |
| தென்னாபிரிக்கா | 20 | 3 |
| இலங்கை | 19 | 7 |
| மேற்கிந்தியதீவுகள் | 16 | 3 |
| சிம்பாப்வே | 9 | 3 |
| மொத்தம் | 154 | 40 |






100வது டெஸ்டில் விளையாடும் லக்ஷ்மண், சமீபத்தில் ஓய்வு பெற்ற அனில் கும்ளே, இந்த டெஸ்டுடன் ஓய்வு பெறும் கங்குலி, டெஸ்ட் ஓட்டங்கள் குவிப்பில் முதலிடம் பிடித்த சச்சின் ஆகியோருக்கு நாக்பூரில் பாராட்டு விழா நடந்தது. நினைவுப் பரிசுடன் சாதனை வீரர்கள் காணப்படுகின்றனர்.

## டெஸ்ட் போட்டிகளை இரவில் நடத்த அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை திட்டம்

மெல்போர்ன், நவ. 08

டெஸ்ட் போட்டிகளுக்கு ரசிகர்கள் குறைந்து வருகின்றமையைக் கருத்தில் கொண்டு, பகலிரவாக போட்டிகளை நடத்தத் திட்டமிட்டுவருகிறது அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை.

இந்திய, அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையே இந்தியாவில் நடைபெற்றுவரும் டெஸ்ட் போட்டிகளைக் காண குறைந்த அளவாகவே ரசிகர்கள் வருகின்றனர். மற்றைய நாடுகளில் இது மேலும் மோசமாகியுள்ளது.

இதனால் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை மிகவும் கவலையடைந்து, புதிய மாற்றம் கொண்டு வர முயற்சி மேற்கொண்டுள்ளதாக சபையின் முதன்மைச் செயல் அதிகாரி ஜேம்ஸ் சுதர்லாண்ட் தெரிவித்துள்ளார்.

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளைப் போன்று பகலிரவாக டெஸ்ட் போட்டிகளையும் நடத்துவது ஒன்றே அதற்கு தீர்வு எனவும் அவர் கூறியுள்ளார்.

"டெஸ்ட் போட்டிகள், அதன் வழியிலிருந்து விலகிச் செல்வதை யாரும் விரும்பவில்லை.

அதே சமயம், தற்போதைய ரசிப்புத் தன்மைக்கேற்றவாறு அதை மாற்றியாக வேண்டியது அவசியம். அதற்காக கிரிக்கெட் வல்லுநர்களுடன் சேர்ந்து அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை ஆலோசனை நடத்திவருகிறது.

டெஸ்ட் போட்டியை இரவில் நடத்தும் போது, பனியால் பந்துகள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும். அது, இரவில் வீரர்களுக்கு நன்றாகத் தெரியும்படியாகவும் தயார் செய்ய ஆய்வு செய்து வருகிறோம்" எனத் தெரிவித்துள்ளார் சுதர்லாண்ட்.

## 20 ஓவர் போட்டியில் பங்களாதேஷ் தென்னாபிரிக்காவிடம் தோல்வி

ஜோகன்னஸ்பர்க், நவ. 08

பங்களாதேஷுக்கு எதிரான 'ருவென்ரி-20' போட்டியில் தென்னாபிரிக்கா 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி ஒரு 'ருவென்ரி-20', மூன்று ஒரு நாள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

முதல் 'ருவென்ரி-20' போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. தென்னாபிரிக்காவுக்கு போஸ்மேன் 28 (4 பவுண்டரி, ஒரு சிக்ஸர்), கிப்ஸ் 18 சுமாரான துவக்கம் தந்தனர். அதிரடியாக விளையாடிய டிவிலியர்ஸ் ஒரு சிக்சர், 2 பவுண்டரி உட்பட 26 பந்தில் 36 ஓட்டங்கள் எடுத்தார். தென்னாபிரிக்கா 14 ஓவரில் 7 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 118 ஓட்டங்கள் எடுத்தது.

இந்நிலையில் திடீரென மழை வந்ததால் ஆட்டம் 14 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது. இதையடுத்து களமிறங்கிய பங்களாதேஷுக்கு 'டக்வொர்த்-லூவிஸ்' முறைப்படி 14 ஓவரில் 122 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற புதிய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ரமீம் இக்பால் 25 ஓட்டங்கள் எடுத்தார். அதிரடியாக விளையாடிய அணித் தலைவர் அஷ்ரபுல் 5 பவுண்டரிகள் உட்பட 10 பந்தில் 21 ஓட்டங்கள் எடுத்தார். மற்ற வீரர்கள் விரைவில் வெளியேற, பங்களாதேஷ் 14 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 109 ஓட்டங்கள் எடுத்தது. 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

## ஆஸி. அணிக்காக மீண்டும் விளையாடும் எண்ணமில்லை!

### ஷேன் வோர்ன்



லண்டன், நவ. 08

அவுஸ்திரேலிய அணியில் இருந்த வோர்ன், மெக்ராத், கில்கிறிஸ்ட், மார்ட்டின் போன்ற வீரர்கள் ஓய்வு பெற்று விட்டமையால் அவுஸ்திரேலிய அணி பலவீனமாகிவிட்டது. இந்திய அணியுடன் டெஸ்ட் போட்டியில் ஆடி வரும் அந்த அணி மிக மோசமாக ஆடி வருகிறது.

எனவே முன்னணி பந்துவீச்சாளரான வோர்ன் தனது ஓய்வு முடிவை கைவிட்டு மீண்டும் அணிக்குத் திரும்ப வேண்டும் என்று அவுஸ்திரேலிய ரசிகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி வோர்னிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:-

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். இப்போது எனது குழந்தைகளுடன் சந்தோஷமாக பொழுதைக் கழிக்கிறேன். எனது அறக்கட்டளை மூலம் ஏராளமான சமூகப் பணிகளைச் செய்கிறேன். எனது வியாபாரப் பணிகளை சிறப்பாகக் கவனித்து வருகிறேன்.

எனவே ஓய்வு முடிவை கைவிட்டு என்னால் மீண்டும் அணிக்குத் திரும்ப முடியாது.

அதேநேரத்தில் எனக்கு கிரிக்கெட் மீதுள்ள ஆர்வம் குறையவில்லை. எனவேதான் இந்திய பிரிமியர் லீக் 20 ஓவர் போட்டியில் ராஜஸ்தான் ரோயல் அணிக்காக ஆடிவருகிறேன். இதற்காக இந்த மாதம் இந்தியா செல்ல இருக்கிறேன்.

ஆனாலும் நான் அணிக்குத் திரும்ப வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்த ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் நியமனத்தை விரைவுபடுத்துமாறு தெரிவுசெய்யப்பட்ட பட்டதாரிகள் தந்தி

யாழ்ப்பாணம்,நவ.8

ஆசிரியர் நியமனங்களுக்கென தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கு விரைவாக நியமனத்தை வழங்குமாறு தந்திகள் மூலம் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர், வட பிரதம செயலாளர் ஆகியோரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.பிரதம தபாலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கூடிய நூற்றுக்கணக்கான பட்டதாரிகள் இந்தத் தந்திகளை அனுப்பி வைத்துள்ளனர்.

சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண பிரதம செயலாளர், வட மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர், வட மாகாண கல்வியமைச்சின் செயலாளர், யாழ்.மாவட்ட அரச அதிபர், யாழ்.பிராந்திய ஆணையாளர், யாழ்.மேலதிக கல்விப்பணிப்பாளர் ஆகியோருக்கு மகஜர்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நீண்டகாலம் வேலையற்றிருந்த பட்டதாரிகளுக்கு கடந்த ஜூலை மாதம் முதல் நியமனம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும் இதுவரை நியமனம் வழங்கப்படவில்லை.

பட்டதாரிகளின் பரிதாப நிலையையும் அசாதாரண சூழ்நிலையையும் உணர்ந்து நியமனத்தை இம் மாதமளவில் விரைந்து வழங்க ஆவன செய்யுமாறு பாதிக்கப்பட்டவர்கள் கோரியுள்ளனர். (202)

### கந்தபுராணப் படிப்பு

சுழிபுரம் மேற்கு பெரியதம்பிரான் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயிலில் இன்று சனிக்கிழமை தொடக்கம் தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு கந்தபுராணப் படிப்பு நடைபெறவுள்ளது.

தினமும் காலை 8 மணிக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று பிற்பகல் 2 மணிக்கு படிப்பு ஆரம்பமாகி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (204-28)

## சண்டிலிப்பாய் பிரதேச முன்பள்ளிச் சிறார்களுக்கு பால் வழங்கும் திட்டம்

நவாலி, நவ.8

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் முன்பள்ளி பிள்ளைகளுக்கு பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கத்தினால் பால் வழங்கும் திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சிறுவர் அபிவிருத்தி பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் சண்டிலிப்பாய் பிரிவைச் சேர்ந்த சகல முன்பள்ளிகளுக்கும் பால் பைக்கற்றுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(202-100)

## குறிகாட்டுவான் இறங்குதுறை புனரமைப்பு

யாழ்ப்பாணம், நவ.6

நீண்டகாலமாகச் சேதமடைந்து காணப்பட்ட குறிகாட்டுவான் இறங்குதுறை புனரமைக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளரின் முயற்சியினால் 'சிரப்' திட்டத்தின் கீழ் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இத்துறைமுகம் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாததால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். நெடுந்தீவு, நயினாதீவு ஆகிய இடங்களுக்கு செல்வதற்கான பிரதான போக்குவரத்துக்கு இந்தத் துறைமுகம் பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (202)

## 2007ஆம் ஆண்டில் வலி.தென்மேற்குப் பிரதேச செயலகத்தில் 5749 பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகள்

வலி.தென்மேற்கு,நவ.8

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கடந்த ஆண்டு 5 ஆயிரத்து 749 பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலக மே[illegible]மாவட்டப் பதிவாளர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இப்பிரதேசத்தில் 373 விவாகங்களும், 97 பிறப்புகளும், 223 இறப்புகளும் கடந்த ஆண்டு பதிவு செய்யப்பட்[illegible]ளன.

25 பேருக்கு காலங்கடந்த [illegible]ணப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்[illegible] எனப் பதிவாளர் மேலும் தெரிவித்தார். (202-100)

## இசை நடன நிகழ்வும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம்,நவ.8

மீசாலை சிவசக்தி சங்கீத நர்த்தனாலயத்தின் இசை நடன சங்கமமும் நூல் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி சிவன்கோயில் வீதியில் உள்ள தென்மராட்சிக் கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

தென்மராட்சிக் கலைமன்ற அனுசரணையுடன் தலைவர் க.மோகனராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் கலந்துகொள்வார்.

சங்கீதபூசணம் அ.கி.ஏரம்பமூர்த்தியினால் ஆக்கப்பட்ட நூலின் வெயீட்டுரையை சங்கீதவித்துவான் பொன்.ஸ்ரீவாசுதேவனும் மதிப்புரையை யாழ்.பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் வி.சிவசாமியும் நிகழ்த்துவர்.

நூலின் முதற்பிரதியை உரும்பிராய் இந்துக்கல்லூரி அதிபர் அ.ஈஸ்வரநாதன் பெற்றுக்கொள்வார்.

திருமதி புனிதகுமாரி ஈழநேசன், திருமதி விமலகுமாரி ஸ்ரீரவிகுலன் ஆகியோரின் நெறியாள்கையில் சிவசக்தி சங்கீத நர்த்தனாலய மாணவிகளின் இசை மற்றும் நடன நிகழ்வுகளும் இடம்பெறும்.

(202-207)

## நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 3000 பிள்ளைகளுக்குப் பசுப் பால்

நல்லூர், நவ.8

நல்லூர் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 3 ஆயிரம் குழந்தைகளுக்குப் பசுப்பால் வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தை நேற்று வெள்ளிக்கிழமை திருநெல்வேலி கம்பன் சனசமூக நிலையத்தில் யாழ். மேலதிக அதிபர் ஆ.சிவசுவாமி ஆரம்பித்து வைத்தார்.

ஒரு வாரத்தில் 3 நாள்களுக்குக் குழந்தைகளுக்கான பால் விநியோகம் நடைபெறும். ஒரு குழந்தைக்கு 200 மில்லி லீற்றர் பால் வழங்கப்படவுள்ளது.

திருநெல்வேலி பாற்பண்ணைப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட பால் விநியோகம் பிரதேசத்திற்கு உட்பட்ட அனைத்துப் பிரிவுகளுக்கும் செயற்படுத்தப்படவுள்ளது. வேறுபாடுகளின்றி 2 வயது முதல் 5 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களுக்கு அவர்களின் போஷாக்குக்கென பால் வழங்கும் திட்டம் சம்பந்தப்பட்ட அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் தெரிவித்தார்.(202-111)

## மாதர் அபிவிருத்திச் சங்கத்திற்கு இலங்கை வங்கி கடன் உதவி

இலங்கை வங்கி மானிப்பாய் கிளையினால் பண்ணாகம் கிராம மாதர் அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்த 16 அங்கத்தவர்களுக்குத் தலா 50 ஆயிரம் ரூபா நிதி கடனாக வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கடனை மாதம்தோறும் பிரித்துக் கட்டுவதற்கு வங்கி ஏற்பாடு செய்துள்ளது.

## கல்வித்தின நிகழ்வுகள்

கரவெட்டி, நவ.8

'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் வடமராட்சி கல்வி வலயத்தின் உடுப்பிட்டி, வல்வெட்டித்துறைப் பிரதேச பிள்ளைநேயப் பாடசாலைகள் இணைந்து நடத்தும் கல்வித்துறை நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பிரதான மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கு.றஞ்சிதம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணமும் சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா, யாழ்.மாவட்ட யுனிசெவ் இணைப்பாளர் செல்வி வே.ராதிகா ஆகியோரும் கலந்துகொள்வர். (202-70)

* * *

யாழ்ப்பாணம், நவ.8

ஊர்காவற்றுறைப் பிரதேச பாடசாலைகள் இணைந்து நடத்தும் கல்வித்தின நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக 'யுனிசெப்' நிறுவன இணைப்பாளர் செல்வி டயானி ஆர்க்கியும், சிறப்பு விருந்தினர்களாக ஊர்காவற்றுறைப் பங்குத்தந்தை அருட்திரு. எக்ஸ்.டபிள்யூ.ஜேம்ஸ், கணபதீஸ்வரம் சிவன் ஆலயக் குருக்கள் பிரம்மஸ்ரீ விமலராஜக்குருக்கள் ஆகியோர் கலந்துகொள்வர்.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்கும் கரம்பொன் சிறிய புஷ்பமகளிர் வித்தியாலயத்துக்கும் இடையிலான பட்டிமன்றம் உட்படக் பல கலை நிகழ்வுகள் இடம்பெறும். (202-325)

* * *

கரவெட்டி, நவ.8

'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் வழிகாட்டலின் கீழ் பாடசாலைகள் ஒன்றிணைந்து நடத்தும் கல்வித் தினம் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி ம.ம.வி. ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நெல்லியடி ம.ம.வி அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில நடைபெறும் இவ் விழாவிற்கு பிரதமவிருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா, யாழ்.மாவட்ட யுனிசெவ் இணைப்பாளர் செல்வி வே.ராதிகா ஆகியோரும் கலந்துகொள்வர்.

வாழ்த்துரையைக் கரவெட்டிப் பிரதேசசெயலர் சி.சத்தியசீலன் நிகழ்த்துவார். (202-70)

## சமூக முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு யாழ்.மாவட்டத்தில் 25 கிராமங்கள் தெரிவு

யாழ்ப்பாணம், நவ.8

சமூக முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் யாழ்.மாவட்டத்தில் 25 கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

உலக வங்கியின் நிதியுதவியுடன் தேச நிர்மாணம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் இந்தக் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இக்கிராமங்களின் அபிவிருத்தி புனரமைப்புக்கென கிராம அபிவிருத்தி அமைப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த அமைப்புகளின் இயல் அளவை விருத்தி செய்வதற்கென நிதி வழங்கப்பட்டுள்ளது.

முதல் கட்ட நிதி நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது. (202)




## உடுவில் பிரதேச செயலகத்தில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், நவ.8

வலி.தெற்கு, உடுவில் பிரதேச செயலகத்தில் பிறப்பு, இறப்புத் தொடர்பான சான்றிதழ்களை வழங்கும் பொருட்டு நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

இந்தச் சேவை எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

இந்தச் சேவை தொடர்பில் மேலதிக தகவல்களை அறிந்துகொள்ள விரும்புபவர்கள் பிரதேச செயலக மேலதிக மாவட்டப் பதிவாளருடன் தொடர்புகொள்ளுமாறுஅறிவிக்கப்பட்டுள்ளது. (204)

## நவாலி கிழக்கில் முதியோர் சங்கம் அங்குரார்ப்பணம்

நவாலி, நவ.8

நவாலி கிழக்கு (ஜே/135) கிராம சேவையாளர் பிரிவில் முதியோர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

பிரிவு கிராம சேவையாளர் ரி.நித்தியானந்தன் தலைமையில் அண்மையில் இந்த அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது.

சங்கத்தின் தலைவராக செ.மகேந்திரனும் உபதலைவராக தா.நடேசனும் செயலாளராக ஞா.சத்தியாப்பிள்ளையும் உபசெயலாளராக க.தர்மகுலசிங்கமும் தனாதிகாரியாக ந.புவனேஸ்வரியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

(202-100)



யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளில் கடந்த ஒக்ரோபர் மாதத்தில் அதிக விற்பனையை மேற்கொண்ட கிளை முகாமையாளர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை சங்கக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட பணியாளர்களில் ஒரு பகுதியினரை முதலாவது படத்தில் காணலாம். முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட கிளைமுகாமையாளர் எஸ். கரீந்திரனுக்கு சங்கத் தலைவர் ப.கிரி[illegible] முகாமையாளர் து.மனோகரன், சங்க உறுப்பினர் ச.டோமினிக், கூட்டுறவு அபிவிருத்தி உ[illegible] சங்க கூட்டுறவுக் கணக்காளர் என்.குமணதாஸ் ஆகியோர் அமர்ந்திருப்பதை இரண்டாவது காணலாம். (படங்கள் : குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தென்மராட்சிப் பிரதேச மகளிர் விவகார அமைப்புகளுக்கிடையிலான சுயதொழில் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சி அண்மையில் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட கைத்தொழில் அபிவிருத்திச்சபை பதில் பிரதிப்பணிப்பாளர் ஆர்.ஜெயமனோ கண்காட்சியினை நாடாவெட்டி ஆரம்பித்து வைப்பதையும் அருகில் உதவிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தரூபன் நிற்பதையும் முதலாவது படத்திலும் விருந்தினர்களும் பொதுமக்களும் கண்காட்சியினைப் பார்வையிடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

கண்காட்சியில் தெரிவுசெய்யப்பட்ட பொருளின் உற்பத்தியாளருக்கு உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.இரகுநாதன் பரிசில் வழங்குவதை மூன்றாவது படத்தில் காணலாம். (207)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
சின்னத்தம்பி சுப்பிரமணியம்



பிறப்பு
03✱08✱1951

இறப்பு
21✱10✱2007

திதி: 08.11.2008
தசமி

ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
உங்கள் அன்புக்கு ஈடாகுமா?

நிரந்தர முகவரி:
கைதடி கிழக்கு, கைதடி.
தற்காலிக முகவரி:
154/8 B, அத்தியடி வீதி, கந்தர்மடம்.

உங்கள் பிரிவால்
துயருறும்:
மனைவி.

(79575)


### இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர். (79655)

### மங்களகரமான வைபவங்களுக்கு ஏற்ற பலகார வகைகள்

சுத்தமாகவும் ருசியாகவும்
தயாரிக்கப்பட்ட பயற்றம் உருண்டை,
இனிப்பு முறுக்கு, சீனி அரியதரம், முறுக்கு,
மைசூர்ப் பாகு, மஸ்கற், பூந்தி, லட்டு
இன்னும் பலவகை பலகாரங்களையும்
முன் கூட்டியே ஓடர்செய்து
குறித்த நேரத்தில் பெற்றிட
**வேல் மிக்சர்**
இல.57, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.
தொ.பே.: 0776701461
(இ/555218)


## விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம்,நவ.8

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு முன்பாக இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளோட்டியின் கால்விரல் முறிந்தது.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை காலை இடம்பெற்றது.

சாவகச்சேரி, கயிலாயபிள்ளை வீதியைச் சேர்ந்த யோகரத்தினம் நிரோஜன் (வயது 25) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (202-207)

## தேவாரப் பண்ணிசைப் பயிற்சி

யாழ்ப்பாணம்,நவ.8

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்பை நடத்தி வருகின்றனர்.

இந்தப் பயிற்சி வகுப்பு நல்லூர் கந்தசுவாமி ஆலயத் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் நினைவாலய மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கும், புதன்கிழமை மாலை 4.30 மணிக்கும் நடைபெற்று வருகின்றது. (204)


**மதுரம் இன்ஸ்ரிரியூட்**
(பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய்)
A/L - 2009
Day Class
ஆரம்பம்:
10.11.2008
திங்கள் - 6.am


## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு:
25.08.1943



உதிர்வு:
31.10.2006

### அமரர் சுப்பிரமணியம் சவுந்தரநாயகி

திதி: தசமி

ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
ஆறவில்லை எம் துயர்
ஆயிரம் உறவுகள் இங்கிருந்தும்
அன்னையவளுக்கு ஈடாகுமா?
அவனியில் நாம் சிறப்புடன் வாழ
அன்புடன் வழிகாட்டி நின்றாய்
அம்மா உன் இனிய நினைவுகள்
ஆண்டுகள் பல கடந்தாலும் நீங்காது.

பன்னாலை,
தெல்லிப்பழை.

உங்கள் பிரிவால் வாடும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் (டென்மார்க்).

(79653)

## முகிழ்த்து எழுந்திடும் மூவாண்டு நினைவலைகள்



அன்னையவள் மடியில்:
01✱07✱1949

பூமித்தாய் மடியில்:
11✱11✱2005

### அமரர் ஞானப்பிரகாசம் ஜெயராஜா பிலேந்திரராஜா (பொன்ராசா)

திதி: தசமி (08.11.2008)

நாளும் கோளும் சூழ்ந்திடவே
ஆண்டுகள் மூன்று ஆனதையா நீர் எனைப் பிரிந்து
கழிகின்ற பொழுதெல்லாம் விழிகளிலே நீர் சுமந்து
கலங்கியே தவிக்கின்றேன் நான் இங்கு தனிமரமாய்

காலனவன் கண்ணுற்றுக் கணக்கினை முடித்து விட்டான்
காலங்கள் மூவாண்டு கணக்கின்றிக் கடந்தன
காலத்தால் அழியாது காவலனே உன் நினைவு

உதிர்ந்து விட்ட பூவாக நீங்கள்
மண்ணிலே மறைந்துவிட்ட போதிலும்
நெஞ்சிலே எழுதி வைத்த நினைவுகள்
என் உயிர் உள்ளவரை வாழும் ஐயா.

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு.


தினம் தினம் உங்கள் நினைவில் வாழும்:
மனைவி - திருமதி ச.பி.ஜெயராஜா.

(79609)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
25.09.1925

உதிர்வு
08.11.2006



### அமரர் சூசைப்பிள்ளை அல்போன்சஸ்

அன்பின் உறைவிடமாக குடும்ப
அச்சாணியாக வழி நடத்திய ஐயாவே!
எம்மைப் பிரிந்து இரண்டாண்டுகள்
ஆனாலும்
எம் உள்ளத்திலும் உறைந்துள்ளீர்
படைத்தவன் பாதத்தில் உம் ஆன்மா
பரிவு பெற வேண்டுகின்றோம்.

பொந்தி ஒழுங்கை,
பண்டத்தரிப்பு.

நீங்கா நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள்.

(79652)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வங்கி வடமாகாணத்தின் இரு செம்மல்கள்

## விடைகொடுக்கின்றோம்



### பி.ஏ.அருமைநாயகம்

வங்கிச் சேவையை மகேசன் சேவையாக
நீ நினைத்து எம்மை உயர்த்தினாய் -
வங்கியை உயர்த்தினாய். பணியாளர்களை
உயர்த்தினாய். சமூகத்துக்கே ஓர் ஏற்றம்
கொடுத்தாய். வங்கிச் சரித்திரத்திலே
உனக்கு ஒரு தனியிடம் உண்டு.
எம் மனதிலும் அழியாத இடமுண்டு. இன்று
பணியிலிருந்து ஓய்வுபெற்றாலும் உன் பணி
எமக்கு என்றும் கிடைக்கும் என நம்புகிறோம்.
ஓய்வில்லாமல் குடும்பத்தையும் மறந்து
எமக்காக உழைத்தாய். இனி உன் மனைவி,
பிள்ளைகளுடன் இனிமையான
பொழுதுபோக்கி, சகல செல்வங்களும்
பெற்று, நீண்ட ஆயுளும்
பெற்று எம்மையும் மறக்காமல் இருக்க
வேண்டுமென இறைவனை இறைஞ்சுகிறோம்.

## வரவேற்கின்றோம்



### என்.சிவரட்ணம்

'அருமை' வழியில் அருமையாக வருவோனே,
உன்னை வரவேற்பதில் பெருமைப்படுகின்றோம்.
எமக்கு வங்கி வாழ்க்கையை
அறிமுகப்படுத்தினாய். இன்று இந்த நிலைமைக்கு
நாம் வர உத்வேகத்தோடு எம்மை வளர்த்தாய்.
எமது மூச்சிலும் இருக்கிறாய்; நெஞ்சிலும்
இருக்கின்றாய். இனி எல்லோர் மனதிலும்
நிலைக்கப்போகிறாய். கல்விக்கு முடிவில்லை என்று
உணர்த்தி இன்னும் கற்றுக்கொண்டிருக்கிறாய்;
பட்டங்களும் பெற்றுக்கொண்டிருக்கிறாய்.
இந்தப் படிப்பும், பட்டமும் எங்களுக்கு எத்தனை
விதத்தில் பயன்படப் போகின்றன என எண்ணி
வியக்கின்றோம். வடமாகாணம் கைகூப்பி
வரவேற்கின்றது. எதிர்பார்ப்புகள் எண்ணற்றவை.
அதை நிறைவேற்ற நீ பின் நிற்கமாட்டாய்.
என்றும் வாழியவே! இலங்கை வங்கிக்கு வாய்த்த
செம்மலே வாழ்க! வருக!!




PC Park (Pvt) Ltd.
PCP
the path to computer paradigm

LCC
LANKA COMMERCIAL CONSTRUCTION




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிவிழா நாயகன் உயர்திரு
## (ஓய்வுபெற்ற உதவிப் பொதுமுகாமையாளர், இ
# சேவை நலன் பாராட்டு விழா



### கடின உழைப்பாளி



திரு.அருமைநாயகம் அவர்களைக் கடந்த சில வருடங்களாக நான் நன்கு அறிவேன். இவர் கடின உழைப்பாளியாகவும், அக்கறையுடனும், சரளமாகப் பழகுபவராகவும் விளங்கியமையைக் கண்டேன். இடர் நிறைந்த கால கட்டத்தில் வட பிராந்தியத்தைக் கையாண்ட விதம் அவருடைய தலைமைத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது. இவரது தலைமைத்துவத்துடன், ஊழியர்களின் ஒத்துழைப்பும், விடா முயற்சியும், கடின உழைப்பும், குறைந்த ஆளணித்துவத்துடன் வங்கிக் கிளைகளைக் கணனிமயப்படுத்தியமை பாராட்டத்தக்கதாகும்.

ஓய்வுபெற்றுச் செல்லும் இவ்வேளையில் இவற்றை நினைவிற்கொள்வது எனது கடமையாகும். இவரது நற்செயல்களை நினைவில்கொண்டு திரு.அருமைநாயகம் அவர்களுடைய ஓய்வூதிய காலம் மனைவி, மக்களுடன் இன்புற்று விளங்க வாழ்த்துகின்றேன்.

**திரு.B.A.C.பெர்னாண்டோ,**
பொதுமுகாமையாளர், இலங்கை வங்கி.

### எங்கள் அருமை அருமையேதான்!



மனிதன் பிறப்பதும் வாழ்வதும் இவ்வுலகில் வழமையாக நடக்கும் விஷயங்கள்தான். ஆனால் அப்படிப் பிறப்பவர்கள் எப்படி வாழ்கிறார்கள், அவர்களால் மற்றவர்களுக்கு என்ன நன்மை விளைகிறது என்பதைப் பொறுத்துத்தான் அவரது புகழ், பெயர் என்பன இவ்வுலகில் நிலைத்து நிற்கின்றன. அந்த வகையில் காலத் துக்குக் காலம் தோன்றும் சில செம்மல்கள் மனித குலத்துக்குச் செய்த சேவைகளால் அவர்கள் மறக்கப்படாதவர்களாக இருப்பதை யாவரும் அறிவர்.

மிகப்பெரும் சேவை செய்தவர்களின் வரிசையில் எல்லோரும் இணைய முடியாது தான். ஆனால் தன்னால் மற்றவர்களுக்கு ஏதும் நன்மை கிடைக்கும் வகையில் ஒருவர் வாழ்ந்து காட்டினாலே அது ஒரு சாதனைதான்.

சாதனைகள், சேவைகள் ஒப்பீட்டளவில் சிறியதாயிருக்கலாம். ஆனால் 'மனிதம்' என்ற பண்பை அந்த சாதனையாளரிடமும் சேவையாளரிடமும் நாம் காணலாம். அந்த வகையில் வடமாகாண வங்கிகளுக்கும் அதன் பணியாளர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் சூழ்ந்துள்ள சமூகத்துக்கும் ஒரு மகத்தான சேவையை அர்ப்பணிப்போடு செய்து தன்னுடைய முத்திரையைப் பதித்து விட்டு வங்கி வாழ்க்கைக்கு விடைகொடுக்கும் இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப்பொது முகாமையாளர் திரு. B.A.அருமைநாயகத்தை "எங்கள் அருமை அருமையேதான்" என்று உரிமையுடன் விளித்து வாழ்த்துகிறோம்.

ஏதோ பதவி கிடைத்தது, வந்தோம், கதிரையை அலங்கரித்தோம், ஊதியத்தைப் பெற்றோம் என்று சிலர் போவார்கள். யாராவது அப்படிப் போனாலும், இருக்கவே இருக்கிறது கைகொடுக்க ஒரு காரணம் இன்றைய யுத்த நிலைமையும் அசாதாரண சூழ்நிலையும்.

ஆனால் சூழ்நிலை ஒரு பக்கம் கிடக்கட்டும், என் கடன்பணி செய்து கிடப்பதே என்று மெய் வருந்தி இந்த வடமாகாணத்துக்கு எங்கள் "அருமை" செய்த சேவைகளைப் பட்டியலிட்டால் இருபக்கங்கள் போதாது.சுருக்கமாகச் சொன்னால் சகல வசதிகளும் வாய்ப்புக்களும் உள்ள ஒரு மாகாணத்தில் இவர் தரத்திலுள்ள இன்னோர் உத்தியோகத்தர் செய்வதைவிட இந்தச் சூழலில் போக்குவரத்தும் மற்றைய வசதிகளும் இல்லாத இந்த நிலையில் இலங்கை வங்கியை இந்தளவுக்கு இன்று இவர் உயர்த்தி, உத்தியோகத்தர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் இவர் செய்த பணி எண்ணிலடங்காது.

வங்கிச் சரித்திரம் எழுதப்படும்போது வடமாகாணத்தில் இவரது பணி நிச்சயம் பொன் னெழுத்துக்களில் பொறிக்கப்படும்.பணிவிலகிய காலத்தில் தன்மனைவி, பிள்ளைகளோடு சகல சௌபாக்கியங்களும் பெற்று அவர் நீடூழி வாழ்ந்து வருங்கால வங்கிச் சந்ததிக்கும் வழிகாட்ட வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**திரு.க.பாலசுப்பிரமணியம்,**
வடபிராந்திய முன்னாள் உதவிப் பொது முகாமையாளர்,
இலங்கை வங்கி.

### அன்பும் தியாக சிந்தையும் பணிவான. நடத்தையும் கொண்டவர்



உயர்திரு.அருமைநாயகம் அவர்கள் ஊர்காவற்றுறை முகாமையாளராக இருந்த காலத்தில் நான் ஸ்ரான்லி வீதிக்கிளையில் பிரதம எழுதுவினைஞராகக் கடமையாற்றினேன். அப்போதுதான் அவர் எனக்கு அறிமுகமானார். அன்றுமுதல் இன்றுவரை அவரிடம் நான் கண்டவை அன்பு, தியாகசிந்தை, பணிவான நடத்தை இவ்வாறு சொல்லிக்கொண்டே போகலாம். சிலருக்கு பெயர் மிகப்பொருத்தமாக அமைவதுண்டு. அந்த வகையில் எமது மணிவிழா நாயகனுக்கு அமைந்த பெயர் மிகமிகப் பொருத்தமானது. அவர் என்றும் அருமையான நாயகம்தான். இவர் வங்கியில் 1970 இல் இணைந்தார், 2008 இல் ஓய்வுபெறுகின்றார். அன்றுமுதல் இன்றுவரை வங்கிக்காகவும் வாடிக்கையாளர்களுக்காகவும் வங்கி ஊழியர்களுக்காகவும் செய்த சேவைகள் இலங்கை வங்கியுள்ளவரை நிலைத்திருக்கும் என்றால் அது மிகையாகாது. இவர் மாவட்ட முகாமையாளராக, செயற்பாட்டு முகாமையாளராக, உதவிப்பொது முகாமையாளராகக் கடமையாற்றிய காலங்கள் எல்லாமே மிகவும் கஸ்டமான காலப்பகுதிகள். அக்கால கட்டங்களில் எல்லோரது தேவைகளையும் முடிந்தளவு நிறைவேற்றி ஓய்வுபெற்றுச் செல்கின்றார். இந்தச் சந்தர்ப்பத்தில் நெல்லியடிக்கிளை முகாமையாளர் என்ற வகையில் இதன்மூலம் வாழ்த்துச் செய்திகள் வழங்க சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் பெருமகிழ்வு அடைகிறேன். எனது சார் பிலும் எனது ஊழியர்கள் சார்பிலும் திருவாளர் அருமைநாயகம் அவர்கள் தேகாரோக்கியத்துடனும் நீண்ட ஆயுளுடனும் மகிழ்வோடும் ஓய்வு ஊதியக் காலத்தில் இருக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வணங்குகின்றேன்.

**திரு.க.சகாதேவன்,**
முகாமையாளர், இலங்கைவங்கி, நெல்லியடி.

### கடமையுணர்வுமிக்க நிர்வாகி



எமது பெருமதிப்பிற்குரிய இலங்கை வங்கியின் இளைப்பாறிய உதவிப் பொது முகாமையாளர் உயர்திரு.அருமைநாயகம் ஐயா அவர்களை வாழ்த்துவதில் பெருமையும் பெருமகிழ்ச்சியும் அடைகின்றோம்.

எமது பிரதேசம் பொருளாதார வளர்ச்சி காணவேண்டும். வரண்ட நிலங்களெல்லாம் வளம் கொழிக்கும் பயிர் வளரும் வயல்களாக மாறவேண்டும் என்று அவர் ஆற்றிய பணிகளை இவ்வேளையில் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

தென்மராட்சிப் பிரதேச மக்களுக்கு மாத்திரம் விவசாயம், கைத்தொழில், வர்த்தகம், வீட்டுக்கடன் என எமது வங்கியூடாக ரூபா 100 மில்லியன் வரை கடன் வழங்குவதற்கு அவர்கள்தான் அனுசரணையாக இருந்தார்.

எங்களது ஆளணியினருக்குத் தகுந்த மதிப்பையும் சன்மானத்தையும் பெற்றுக்கொடுத்து அதிசிறந்த சேவையை வழங்கும் செயற்றிறன்மிக்கவர்களாக ஆக்கிய பெருமை அவரையே சாரும்.

வங்கி வாழ்க்கையில் மிக இக்கட்டான காலகட்டத்தில் துணிவுடன் செயற்பட்டு அளப்பரிய சேவையாற்றிய இவர் கடமையுணர்வுமிக்க நேர்மையான நிர்வாகியுமாவார்.

இவரது ஓய்வுக்காலம் மகிழ்ச்சிகரமாக அமையவும் மனைவி பிள்ளைகளுடன் சுகநலத்துடன் வாழவும் தொடர்ந்துவரும் காலங்களில் வங்கிச் சமூகத்துக்கும் ஏனைய சமூகத்தினருக்கும் மேன்மேலும் பணிகள் பல ஆற்றி மனமகிழ்வும் பொருள் வளமும் பெற்று பல்லாண்டுகள் வாழவும் வாழ்த்துகின்றோம்.

**திரு.ச.சந்திரகுமாரன்,**
முகாமையாளர், இலங்கை வங்கி, சாவகச்சேரி.

### துணிவும் பணிவும் கொண்டவர்



நல்ல தலைவன் முதலில் சிறந்த தொண்டனாக இருக்க வேண்டும். தொண்டனிடம் தியாகமுயற்சி, தன்னம்பிக்கை என்பன நிறைந்திருக்கும். இதுவே அவன் தன் தலைவனுக்கும் ஏனையோருக்கும் சிறந்த சேவையை வழங்க துணையாகவும் தூண்டுகோலாகவும் திகழ்கின்றன.

அந்தவகையில் பாமர மக்களதும் பரிதவிக்கும் சமூகத்தினதும் துயர் துடைப்பதை ஒரு பணியாகவும் தனது ஆள் அணியினரைத் தன் ஆணையினதும் ஒருமுகப்படுத்தி வடபிராந்திய வங்கியின் செயற்பாட்டின் பெறுபேறுகள் அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்து என்றுமில்லாதவாறு பொது முகாமையினாலும் தலைமையகத்தாலும் பாராட்டுதலுக்குத் தனிச் சிறப்புப்பெற்று செம்மையாகப் பணியாற்றி இன்றும் எம்மை வழிநடத்திக் கொண்டிருக்கும். எம்தலைவன் திரு.B.A. அருமைநாயகம் B.A.அவர்களுக்குப் பிரியவிடை தரும் இந்நாளில் அவரது பொறுப்புக்களை ஏற்று அவர் விட்ட பணிகளைத்தொடர அப்பெருந்தகையின் ஆசிகளை வேண்டி நிற்பதோடு, அவர் சிறப்புடன் ஓய்வுக் காலத்தைத் தொடர இலங்கை வங்கிச் சமூகத்தின் சார்பாக இறைவனை இறைஞ்சி நிற்கின்றேன்.

**திரு.ந.சிவரத்தினம்,**
பொறுப்பேற்கும் உதவிப்பொது முகாமையாளர்,
இலங்கை வங்கி,வட பிராந்தியம்.

### தனித்துவமான தலைவன்



தனித்துவமான தலைமைத்துவப் பண்புகளை ஒருங்கே கொண்டவர் நமது உதவிப் பொதுமுகாமையாளர் உயர்திரு.அருமைநாயகம் ஐயா அவர்கள். அவரது சேவைநலன் பாராட்டுத் தொடர்பாக வெளியிடப்படும் இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் புழகாங்கிதம் அடைகின்றேன்.

பெயரைப் போலவே பண்பிலும் அரிய, அருமையாய் வாய்த்த நாயகம் அவர். தோற்றத்தைப் போலவே கொள்கையால் உயர்ந்தவர். குடும்பம், வங்கி, சமூகம் என்ற பல கோணங்களிலும் அவர் புலப்படுத்திய புதுமைகள் கண்டு நாம் பூரிக்காமல் இருக்க முடியாது. குறிப்பாக இலங்கை வங்கியின் யாழ்.மாவட்ட வங்கித்துறை வரலாற்றில் இவரது காலம் ஓர் பொற்காலம்; அவரது அர்ப்பணிப்பால், மண்ணின் வேதனைகள் மத்தியிலும் சோதனைகள் களைந்து,சாதனைகள் புரிந்து சேவையால் உயர்ந்தது வங்கி. அதற்கென இவர் எடுத்த துணிகரமான தீர்மானங்களும் ஓய்வொழிச்சல் அற்ற உழைப்பும் என்றும் நினைவு கூரப்படவேண்டியவை. அந்தவகையில் எமது சுன்னாகக்கிளை மேற்தரக் கிளையாக தரம் உயர்த்தப்பட்டதுடன், எமது அச்சுவேலி நீடித்த கருமபீடமும் அச்சுவேலிக் கிளையாக உயர்த்தப்படுவதற்கு, அவர் ஆற்றிய பணி அளப்பரியது.

யாழ்.மண்ணின் அனைத்துக் கிளைகளையும் கணனிமயப்படுத்துவதில் தொடங்கி, இலங்கை வங்கி கிராமங்கள் என நகர்ந்து ATM சேவை என விரிந்து பல துறைகளிலும் அவரது பணி தொடர்கின்றது.

அதேபணி அவரது ஓய்வுக் காலத்திலும் எம் மண்ணுக்கும், மக்களுக்கும் தொடர எல்லாம் வல்ல இறையருள் அவருக்குக் கிடைக்க வேண்டி வாழ்த்துகிறேன். அவரது ஓய்வுக்காலம் அமைதியும் ஆனந்தமும் ஒருங்கே அமைய, ஆரவாரமற்ற ஒரு நதிபோல் என்றும் பிரவாகிக்க வாழ்த்துகிறேன்.

**திரு.சி.பொ.அரசகுமார்,**
முகாமையாளர், இலங்கை வங்கி, மேற்தரக் கிளை, சுன்னாகம்.

### வாழ்த்தியே நிற்கின்றோம்



ஆறுதல் தந்த நெஞ்சம்
அன்பினைச் சொரிந்த கண்கள்
மாறுதல் ஏதுமில்லா
மாசிலா விதயம் கொண்டாய்
வீறுகொண்டிலங்கை வங்கி
வடபுலம் உயரவைத்தாய்
வளமுடன் நாம் வாழ வைத்தாய்

கரம்பொன் பெற்ற மைந்தா
கறையிலாப் பசும்பொன்நீயோ
உரமென வந்து வங்கி
உயர்ந்திட வழிசமைத்தாயே
வரமென வந்த தாயாய்

வடபுலம் வளரவைத்தாயே
இரவது பகலென்றில்லா
இணையிலாச் சேவை செய்தாய்
வளமுடன் நீடுவாழ
வாழ்த்தியே நிற்கின்றோமே.

**க.ப.ஆனந்தநடேசன்,**
முகாமையாளர்,இலங்கைவங்கி,
பருத்தித்துறை.

### காவலூர் தந்த கடமை வீரன்



யாழ்.மாவட்டத்தின் சகல வங்கிக் கிளைகளையும் கணனி மயப்படுத்தி அவற்றை வலைப்பின்னலுக்குள் கொண்டு வந்த பெருமை எமது உதவிப் பொது முகாமையாளர் உயர்திரு.பொ.அ.அருமைநாயகம் அவர்களையே சாரும். அதுமட்டுமல்ல பல கிளைகள் தரம் உயர்த்தப்பட்டு அவற்றின் சேவைகள் வாடிக் கையாளர்களுக்குத் திறம்படக் கிடைப்பதற்கு வழி அமைத்த பெருமையும் அவ ரையே சாரும்.

அந்த வகையில் எமது திருநெல்வேலிக் கிளையும் "இ" தரத்திலிருந்து "ஆ" தரக் கிளையாக உயர்த்தப்பட்டு இன்று நல்லதொரு சேவையை வழங்கி வருவதற்கு காலத்தின் தேவையறிந்து அவர் ஆற்றிய அரிய பணிகள் யாவற்றையும் ஒருமுறை எண்ணிப் பார்க்கையில் எமது உள்ளம் பூரிப்படைந்து இறும்பூதெய்துகின்றது.

A-9 பாதை பூட்டப்பட்டு தரைவழிப்பாதை இல்லாது தவித்திருக்கும் இக்காலத்தில் தனது கடும் முயற்சியினாலும் அர்ப்பணிப்பாலும் நிறைந்த சேவையினை வாடிக்கையாளருக்கு வழங்குவதற்காக தலைநகரிலிருந்து விமானம் மூலமும் கப்பல் மூலமும் கணனிகள், காகிதாதிகள், வங்கி ஆவணங்களை எடுத்து வந்தமை வடபகுதி மக்களுக்கும் வங்கி உறவுகளுக்கும் கிடைத்த ஒரு வரப்பிரசாதம் ஆகும்.

இன்னோரன்ன பல பணிகளை இறைபணியாக தன்பதவிக் காலத்திலேயே செய்து முடித்த கடமை வீரனை நாம் பலவாறு புகழ்ந்து அவரது ஓய்வுகால வாழ்க்கை சீரும் சிறப்புடனும் திகழ இறையாசி வேண்டி நிற்கின்றோம்.

**திரு.E.பிரேமராஜன்,**
முகாமையாளர்,திருநெல்வேலிக் கிளை.

### பண்பான நெறியாளன்




மாவட்டச் செயலகங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் நலனைக் கருத்திற் கொண்டும் செயலகத்தின் நிதி நடவடிக்கைகளை இலகுபடுத்தவும் அங்கு பல்வேறு காரணங்களுக்காகச் செல்லும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் ஒரு விரிவாக்கற் கிளையாக இருக்கும் யாழ். கச்சேரிக்கிளை 07.05.2008 அன்று கணனி மயப்படுத்தப்பட்டு வலைப்பின்னல் சேவையுடன் இணைந்து மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் அதனைச் சூழவுள்ள அரச திணைக்களங்கள் பாடசாலைகள், நிறுவனங்கள் போன்றவற்றில் கடமை புரிவோர் தமது வங்கி நடவடிக்கைகளை துரித கதியில் பெறுவதற்கும் குடாநாட்டின் ஏனைய வங்கிக்கிளைகள் போன்று தங்க நகை அடகுச்சேவையையும் ஆரம்பித்து செயற்பட வைத்த பெருமைக்குரிய எமது உதவிப்பொது முகாமையாளர் அவர்கள் தமது சேவைக்காலத்தில்அளப்பரிய சாதனைகள் புரிந்து பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

அன்பும் அறிவும் தியாக சிந்தையும் சேவை மனப்பான்மையும் ஒருங்கே காணப்படும் இவர் தீர்மானம் எடுப்பதிலும் திட்டமிடலிலும் ஒழுங்கமைத்து வழிப்படுத்துவதிலும் நிகரற்ற முகாமைத்துவ ஆற்றல் கொண்டவர்.

இவரது ஓய்வுக்காலம் தமது குடும்பத்தினருடன் சௌபாக்கியமாய் அமைய இறைவனின் அன்பை வேண்டி நிற்கின்றேன்.

**ச.நடராஜா,**
பொறுப்பதிகாரி, இலங்கை வங்கி,
யாழ்.கச்சேரி விரிவாக்கற் கிளை.



## சேவைக்கால

| இருந்து | வரை | சேவைநிலையம் |
|---|---|---|
| 1970 | 1975 | சர்வதேச பிரிவு |
| 1975 | 1976 | அலுகொல்லநாவல |
| 1977 | 1977 | குறிஞ்சாக்கேணி |
| 1978 | 1983 | திருகோணமலை |
| 1984 | 1986 | யாழ்.2ஆம் கிளை |
| 1987 | 1997 | ஊர்காவற்றுறை |
| 1998 | 2000 | வவுனியா |
| 2001 | 2002 | யாழ்.மேற்தரக்கிளை |
| 2002 | 2003 | பிரதேச காரியாலயம் |
| 2003 | 2004 | உள்ளகக் கணக்காய்வுப் பிரி |
| 2004 | 2006 | வடபிராந்தியக் காரியாலயம் |
| 2006 | 2008 | வடபிராந்தியக் காரியாலயம் |

## கணனி மயப்படுத்தப்

Jaffna
Jaffna Second
Thirunelvely
Chunnakam
K.K.S.
Manipay
Karainagar
Kayts
Pointpedro
Nelliyady
Chavakachcheri
Jaffna Kachcheri

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. B.A.அருமைநாயகம் B.A.

## ..., இலங்கை வங்கி, வடபிராந்தியம்) அவர்களின்

## ...சிறப்பு மலர் (08.11.2008)







## ...கால விவரம்

| ...லையம் | பதவி |
|---|---|
| ...ரிவு | லிகிதர் |
| ...தாவல் | பொறுப்பதிகாரி |
| ...ணி | பொறுப்பதிகாரி |
| ...லை | பதில் உதவி முகாமையாளர் |
| ...ளை | முகாமையாளர் |
| ...றை | முகாமையாளர் |
| | முகாமையாளர் |
| ...க்கிளை | பிரதான முகாமையாளர் |
| ...ரியாலயம் | பிரதேச முகாமையாளர் |
| ...ணைக்காய்வுப் பிரிவு | பகுதித்தலைவர் |
| ...க் காரியாலயம் | செயற்பாட்டு முகாமையாளர் |
| ...க் காரியாலயம் | உதவிப்பொது முகாமையாளர் |

## ...படுத்தப்பட்ட விவரம்

| | |
|---|---|
| | 25.04.2005 |
| | 25.04.2005 |
| | 25.04.2005 |
| | 21.01.2008 |
| | 11.02.2008 |
| | 17.12.2007 |
| | 25.02.2008 |
| | 03.03.2008 |
| | 17.12.2007 |
| | 24.12.2007 |
| | 17.03.2008 |
| | 07.05.2008 |

## அவர் சேவையை நன்றியுடன் நினைவு கூருவோம்



ஏறத்தாழ முப்பத்தொன்பது வருடங்கள் இலங்கை வங்கியில் கடமையாற்றிய வடபிராந்திய உதவிப்பொது முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் அவர்கள் வங்கிச்சேவையிலிருந்து ஓய்வுபெறுவதையிட்டு அவரது சேவை நலனைப் பாராட்டுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

நல்லாரைக் காண்பதும் நன்றே - நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்களை உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்றே

என்பது ஔவையார் வாக்கு. இப்பாடலுக்குப் பொருத்தமானவர், இனியவர், வங்கித்தொண்டாற்றியவர் திரு.அருமைநாயகம் என்றால் மிகையாகாது.

விடாமுயற்சி, எடுத்த விடயத்தை செவ்வனே ஆற்றுகின்ற செயல்திறன், கட்டுக்கோப்பான ஒழுங்குமுறை, இறைநம்பிக்கை அனைத்தையும் வங்கியினூடாக மிகைப்படுத்திய பெருமை திரு. அருமைநாயகம் அவர்களைச் சாரும்.

இளநிலை எழுதுவினைஞராகத் தமது வங்கிப்பணி வாழ்வை 1970 ஆம் ஆண்டு ஆரம்பித்த இவர் படிப்படியாக பல பதவி உயர்வுகள் பெற்று வடபிராந்திய உதவிப்பொது முகாமையாளராக மணிவிழாக் கொண்டாடும் இவ்வேளை அவரது பெரும் சேவை நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டும். அவர் இப்பொழுது மணிவிழாக்கண்டு சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் அவரை வங்கிச் சமூகம் ஒருபோதும் மறக்க முடியாது.

இவர் 60 ஆவது வயதில் இளைப்பாறிய பொழுதும் தனது மனைவி பிள்ளைகளுடன் சீரும் சிறப்புமாக மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்து எமது மக்களுக்கு வேண்டிய அனைத்துப்பணிகளையும் செய்ய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

திரு.க.உலகநாதன்,
செயற்பாட்டு முகாமையாளர், இலங்கைவங்கி,
உதவிப்பொது முகாமையாளர் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

## ஒரு வரலாற்றுச் சாதனையாளர்



சாதனையாளர்களாக சிலர் பிறக்கிறார்கள்,சிலர் உருவாக்கப்படுகிறார்கள். சாதனையாளர்களாகப் பிறந்த பலர் வரலாற்று வரிகளுக்குள் உதாரண புருஷர்களாக மக்களின் மனதில் என்றும் இடம் பிடித்துள்ளார்கள்.

அந்தவகையில் எமது உதவிப்பொது முகாமையாளரான உயர் திரு.பொ.அலிஸ்ரன் அருமைநாயகம் அவர்களின் சாதனைகள் இலங்கை வங்கியின் வரலாற்று வரிகளில் வைர எழுத்துக்களால் எழுதப்பட்ட பல நிகழ்வுகளை அடுக்கிக் கொண்டே செல்லலாம். குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் ஊர்காவற்றுறைக் கிளை என்றால் திரு.அருமைநாயகம் அவர்களின் கிளை என்று சொல்லும் அளவிற்கு இருந்தது. யுத்த சூழ்நிலையால் யாழ்.குடாநாட்டின் மக்கள் பல்வேறு இடப்பெயர்வைச் சந்தித்த போதெல்லாம் அக்கிளையும் பல இடங்களுக்கு இடம்பெயரும்போது தனது தனி முயற்சியினால் அக்கிளையின் ஆவணங்களைக் கட்டிக்காத்து ஆற்றிய பணியினால் இன்று அக்கிளை தன்னிகரற்ற சேவையை வழங்கிக் கொண்டு இருப்பதனை மறைப்பதற்கோ மறுப் பதற்கோ என்றும் முடியாத அளவிற்கு அவரது பெயர் அந்தக் கிளையோடு ஒன்றித்து விட்டது. உதவிப்பொது முகாமையாளராக உயர்பதவி கிடைத்த பின்னரும்கூட ஊர்காவற்றுறைக் கிளை முகாமையாளர் என்னும் அளவிற்கு வாடிக்கையாளர்களின் மனதில் இடம்பிடித்துள்ளார்.

வட மாகாணத்தில் இவர் இலங்கை வங்கியின் உதவிப்பொது முகாமையாளரான பின்னர் தான் வன்னி தவிர்ந்த சகல கிளைகளும் கணனிமயப்படுத்தப்பட்ட வலைப்பின்னலுக்குள் இணைக்கப்பட்டு வாடிக்கையாளர்களுக்கு வங்கியின் சேவைகள் இலகுபடுத்தப்பட்டன.

அதுமட்டுமல்ல ஓய்வுபெறும் நாளுக்கு முதல் நாளாகிய 29.10.2008 அன்றும்கூட சாதனை ஒன்றை வரைந்து இதுவரை காலம் விரிவாக்கற் கிளையாக இயங்கி வந்த அச்சுவேலிக் கிளையை தரம் உயர்த்தி தனியாக இயங்கும் ஒரு கிளையாக மாற்றி அக்கிளைக்கும் பெருமை தேடிக் கொடுத்து எல்லோராலும் பெருமைக்குரியவராக கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு வங்கி வாழ்நாளில் பல சாதனைகளைப் படைத்து ஓய்வுபெறும் அவருக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்து அவரது குடும்பத்தினருடன் சகல சௌபாக்கியங்களுடன் வாழ இறைவனின் ஆசிகளையும் வேண்டி வாழ்த்துகின்றேன்.

திரு.இ.ஜெயந்திரா,
சிரேஷ்ட முகாமையாளர், இலங்கை வங்கி,
அதி மேற்தரக் கிளை, யாழ்ப்பாணம்.

## தலைமைத்துவத்திற்கு ஓர் அணிகலன்



தலைமைத்துவத்திற்கு ஓர் அணிகலனாகத் திகழ்கின்ற திரு. பொனிபேஸ் அலிஸ்ரன் அருமைநாயகம் அவர்கள் பற்றி ஓரிரு வார்த்தைகளில் கூறுவதானால், தனித்துவமான ஆளுமையினாலும் சுய ஆற்றலினாலும் தன்னை உயர்த்தியது மட்டுமல்லாது இலங்கை வங்கியின் வட பிராந்தியக் கிளைகளின் தரத்தினையும் உயர்த்திய பெருமைக்குரியவர்.

குறிப்பாகச் சொல்வதானால் தொண்ணூறுகளில் தோற்றம் பெற்ற எமது காரைநகர் கிளையின் வளர்ச்சியின் ஒவ்வொரு படிக்கற்களிலும் இவரது பெயர் ஆழமாகப் பதிந்துள்ளது. வைப்புகளை ஏற்கும் வகையில் மட்டும் ஓரிரு பணியாளர்களுடன் தொழிற்பட்ட கிளையினை அதன் சேவைநிலையில் உயர்த்தி காரைநகர் மக்களே போற்றும் வண்ணம் கணனி வலைப்பின்னல் கிளையாக உயர்த்திய பெருமைக்குரியவர் என்பதை கால்கோள் விழாவில் நிகழ்ந்த ஒன்றரை மணிநேர அணிவகுப்பு ஊர்வல மரியாதை எடுத்துக் காட்டியது. வீதி முழுவதும், வாசல்கள் தோறும் நிறைகுடம் வைத்து, ஆராத்தி எடுத்து, மாலை சூடி வரவேற்ற காட்சி மனக் கண்முன் விரிகிறது.

அறுபது அகவையில் ஓய்வுபெறும் அவர் அந்தக் கடைசி நிமிடத்திலும் சேவைபுரியும் இயல்பில் இருந்த இளைமைத் துடிப்பும் வங்கியை மேலும் உயர்த்தும் அவரது நோக்கும் வார்த்தைக்குள் அடங்கா வர்ணிப்புக்குரியன.

பொன்விழாக்காணும் நாயகனான அருமைநாயகம், நாயகமே எனப் புகழ் ஏற்றி அவரும் அவரது மனைவி, மக்களும் பேறுபல பெற்றுப் பல்லாண்டு வாழ எல்லோருக்கும் பொதுவான இறைவனை வேண்டுகின்றேன்.

திரு.இ.சிவகுமாரன்,
முகாமையாளர், இலங்கை வங்கி, காரைநகர்.

## மனிதருள் மாணிக்கம்



காலத்தால் அழியாத சாதனைகள் படைத்த காவிய நாயகன், வரலாற்றுச் சாதனையாளன் திரு. B.A.அருமைநாயகம் அவர்களின் காலம் இலங்கை வங்கி வட பிராந்தியத்தின் ஒரு பொற்காலம்.

வங்கி வரலாற்றின் 1970 களிலிருந்து தனது ஆளுமைத்திறன், எல்லோரையும் அரவணைக்கும் பண்பு, இறைபக்தி, கடமை, விசுவாசம் அனைத்தையும் தன்னகத்தே கொண்டு ஊர்காவற்றுறையில் ஆரம்பித்த சாதனை உயர உயரச் சென்று தொடர் வெற்றிகளைச் சந்தித்து வங்கி வாழ்வின் இறுதி நாளிலும் அச்சுவேலி விரிவாக்கல் கிளையைத் தனிக்கிளையாக மாற்றி சரித்திரம் படைத்த செயல் வீரன்.

ஓய்வுபெற்றுச் செல்லுகின்ற நாயகன் எதிர்காலத்தில் தனது குடும்பத்தோடு இன்புற்றிருந்து நீடுழி வாழ வாழ்த்துகின்றோம்.

திரு.த.புவனேந்திரன்,
முகாமையாளர், இலங்கை வங்கி, அச்சுவேலி.

## மனிதம் நிறைந்த மானிடன்



மனிதம் நிறைந்த மானிடனாக, பண்பிலே தெய்வமாக, அன்புமிகு நண்பனாக, பாசமிகு தந்தையாக, கண்டிப்பில் கருணையாக, தலைசிறந்த தலைவனாக, உயர்ந்ததோர் மேலதிகாரியாக எல்லாவற்றிற்கும் மேலாக நல்லதோர் வழிகாட்டியாக இலங்கை வங்கியில் நான்கு தசாப்தங்கள் கடமையாற்றி இறுதியில் வடபிராந்தியத்தின் உதவிப் பொதுமுகாமையாளர் பதவியை வியத்தகு சாதனைகளுடன் சிறப்புற அலங்கரித்த உயர் திரு. பொ.அ.அருமைநாயகம் அவர்கள் சேவையிலிருந்து ஓய்வுபெற்றாலும் அவர் இதயசுத்தியுடன் வங்கியின் வளர்ச்சிக்காக ஆற்றிய பணிகள் குறிப்பாக வடபிராந்தியத்தில் உள்ள கிளைகளின் வளர்ச்சிக்காக ஆற்றிய சாதனைகள் என்றென்றும் அவர் பெயரைக்கூறி நிற்கும். உண்மையில் இலங்கை வங்கியின் வரலாற்றிலேயே வடபிராந்தியத்தில் அவரது காலம் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது என்றால் மிகையாகாது. அவரது ஓய்வுக் காலம் குடும்பத்தினருடன் சீரும் சிறப்புடனும் சந்தோசம் நிறைந்ததாகவும் வளம் நிறைந்ததாகவும் நீடுழி வாழ வாழ்த்துகின்றேன். வாழ்க வளமுடன்.

திரு.வி.சி.சிவநாதன்,
யாழ். மாவட்ட முகாமையாளர், இலங்கை வங்கி,
(வட பிராந்தியம்).

## வாழ்க நலமுடன்



எம் பற்றுடன் நல்கும்
இனிய பிரியாவிடை!
சேவை முதிர்ச்சியில் , அகவை அறுபதில்
என்றும் எம் உளம் உறை
வடபிராந்திய இலங்கை வங்கி
உதவிப் பொதுமுகாமையாளர்

ஸ்ரீமான் பொ.அ அருமைநாயகம்
பெற்றவரிட்ட நாமம் துலங்க
அருமைநாயகமாய்
மக்கள் பணியே மகேசன் பணியாய்
ஆற்றிய உந்தன்
நற்பணி மறவோம்!
வாழ்க நலமுடன், பல்லாண்டு
வாழ்க!

முகாமையாளரும் பணியாளர்களும்,
இலங்கை வங்கி, இரண்டாம் கிளை.

## சிறப்பாக அமையட்டும் ஓய்வுக்கால வாழ்க்கை



இலங்கைவங்கி காங்கேசன்துறை கிளையானது இடம் பெயர்ந்து பல இன்னல்களின் மத்தியிலும் மிகக் குறைந்த வசதிகளுடன் வாடிக்கையாளர் சேவையை வழங்கி வந்த வேளையில் எமது கிளையின் வளப்பற்றாக்குறைகளை அறிந்து அவற்றைத் தீர்க்கும் முகமாகச் சிறந்த அமைவிடத்தைத் தேர்ந்தெடுத்துக் கிளையின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றி உடனடியாகக் கணனிமயப்படுத்தி சிறந்த வாடிக்கையாளர் சேவையை உறுதிப்படுத்தியதோடு, கிளையையும் மேம்படுத்தி எமக்கு சிறந்த ஆலோசனைகளைக் கூறி வழிகாட்டியாகத் திகழ்ந்த எமது உதவிப் பொதுமுகாமையாளர் திரு.B.A அருமைநாயகம் ஐயா அவர்களது ஓய்வுகால வாழ்க்கை சிறப்பானதாக அமைய இதயபூர்வமாக வாழ்த்துகின்றோம்.

முகாமையாளரும் ஊழியர்களும்,
இலங்கை வங்கி, காங்கேசன்துறை.

## செயல்திறன் மிக்க தலைவர்



மணிவிழாவோடு நிறைவுறும் அரச சேவையில் இருந்து ஓய்வுபெறும் திரு.B.A.அருமைநாயகம் அவர்கள் உயர் விழுமிய மானிடப் பண்புகளோடு கூடிய செயல்திறன் மிக்க தலைமைத்துவப் பண்பையும் தன்னகத்தே கொண்டு திகழ்ந்தார்.

இலங்கைத்தீவின் பல பாகங்களிலும் உள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் கடமையாற்றியபோதும் தான் பிறந்த மண்ணில் தன்மக்களுக்குக் கடமை செய்வதில் ஊர்காவற்றுறைக் கிளை முகாமையாளர் [1986-1996] என்ற பதவியில் 10 வருடங்களைக் செலவு செய்து செயலாற்றினார். இவர் முகாமையாளராக இருந்த காலத்தில்தான் வங்கியியல் வரலாற்றில் அதிகம் இடம்பெயர்ந்த வங்கிக்கிளை என்ற நிலையில் சிரமங்கள், துயரங்கள், பொறுப்புக்கள், தொலை தொடர்புகளின்றி சந்தர்ப்ப சமய தீர்மானம் எடுத்தல் போன்ற இன்னோரன்ன இடர்கள் மத்தியில் வங்கி ஆவணங் களைக் காப்பாற்றிய பெருமைமிகு முகாமையாளர்தான் திரு.B.A.அருமை நாயகம் அவர்கள்.

தீவகத்து வழித்தோன்றல்கள் இலங்கைவங்கியின் அதிஉயர் இயக்குநர் சபை உறுப்பினர், கூட்டு முகாமைத்துவத்தில் பங்கு கொண்டு பலபதவிகளை அலங்கரித்தவர்கள் வரிசையில் 30.10.2008 அன்று தன் மணிவிழாக் காலத்தில் ஓய்வுபெற்ற எமது மதிப்புக்கும் கௌரவத்திற்கும் உரிய இலங்கை வங்கியின் வட மாகாண உதவிப்பொது முகாமையாளர் திரு.B.A. அருமைநாயகத்திற்கும் இடமுண்டு.

இவர் தனது ஓய்வுக்காலத்தில் சகல செல்வங்களும் பெற்று நீடூழி வாழ சர்வ வல்லமை உள்ள இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரது சேவைக்கு இலங்கைவங்கி ஊர்காவற்றுறைக்கிளை என்றென்றும் தலைசாய்க்கும்.

கு.சிவஞானசுந்தரம்,
முகாமையாளர், இலங்கைவங்கி,
ஊர்காவற்றுறை.

## செயல் வீரன்



30.10.2008 அன்று ஓய்வு பெற்ற எமது மதிப்பிற்குரிய வட மாகாண உதவிப் பொதுமுகாமையாளர் அவர்கள் அன்பு, பணிவு, இரக்கம், மனிதநேயம், தலைமைத்துவம் கொண்ட ஒருசெயல் வீரன்.

ஊர்காவற்றுறைக் கிளையின் விரிவாக்க அலுவலகத்தை ஊர் காவற்றுறை உதவிஅரசாங்க அதிபர் பணிமனையில் திறந்து வைத்து அப்பிரதேச மக்களுக்கும் எமது வங்கியின் பயன்கள் இலகுவில் சென்றடைய வேண்டும் என நன்நோக்கோடு செயற்பட்ட ஒரு தூரநோக்குடைய தலை மையாளன்.

ஓய்வுகாலத்தில் நல்லதேக ஆரோக்கியத்தோடு மனைவி மக்களோடு இன்புற்று வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக. அவரது சேவைக்கு என்றென்றும் நாம் நன்றியுடையவராக இருப்போம்.

திருமதி ஐ.இராசநாயகம்,
பொறுப்பதிகாரி, ஊர்காவற்றுறை, விரிவாக்க அலுவலகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகன் உயர்திரு. B.A.அருமைநாயகம் B.A.

(ஓய்வுபெற்ற உதவிப் பொதுமுகாமையாளர், இலங்கை வங்கி, வடபிராந்தியம்) அவர்களின்

## சேவைநலன் பாராட்டு விழாச் சிறப்புமலர் (08.11.2008)

### சிலுவை சுமந்த BA. BA.



வங்கித்துறையில் தனக்கென ஒருமுத்திரை பதித்த திரு.B.A. அருமைநாயகம் அவர்கள் இலங்கை வங்கியின் நீடித்த கருமபீடங்களை ஸ்தாபிப்பதிலும் தமது திறமையை வெளிப்படுத்தி கோப்பாய் பிரதேசமும் ஒரு வளர்ந்துவரும் பிரதேசம் என இனங்கண்டு அதனை இலங்கைவங்கியின் மூலமாகவும் அபிவிருத்திக்கான தளம் அமைத்துக் கொடுத்த தீர்க்கதரிசியாளன். அவரது கனவுகளில் அச்சுவேலி கிளையாக மாறியது போல, கோப்பாய் கருமபீடமும் மிக விரைவாக ஒரு கிளையாக மாற வேண்டும் எனவும் ஓய்வூதிய வாழ்க்கை சகல நலங்களுடனும் அமைய வேண்டும் எனவும் இறைவனை வேண்டி வாழ்த்தி அமைகின்றேன்.

திரு.மு.தவபாலன், பொறுப்பதிகாரி,
இலங்கைவங்கி நீடித்த கருமபீடம், கோப்பாய்.

### அவனியில் நீடுவாழி



கருமமே கண்ணாய் நின்று
கடமையைச் செய்த செம்மல்
பெருமையை இலங்கை வங்கி
பெற்றிட வைத்த தொண்டன்
வருந்திடும் ஊழியர்கட்கு – ஓடி
வந்தவர் குறைகள் போக்கும்
அருமைநாயகம் ஐயா
அவனியில் நீடு வாழி
கர்த்தரைப் பணிந்து என்றும் – எங்கள்
காவலனாக வாழ்ந்தார்
வர்த்தகர், வங்கியாளர்
வாடிக்கையாளர் யார்க்கும்
தக்கதாய் உதவி செய்த
தலைவனாம் அருமைநாயகம் ஐயா
மக்களும் மனைவி சுற்றம் – என்றும்
மகிழ்வொடு வாழி வாழி

திரு.வை.ஸ்ரீஸ்கந்தவரோதயன்,
பொறுப்பதிகாரி இலங்கை வங்கி, சுங்கானை.

### எளிமையாகப் பழகும் சுபாவம் உடையவர்

இலங்கை வங்கியில் 38 வருடங்கள் கடமையாற்றி வட மாகாண உதவிப் பொதுமுகாமையாளராக அண்மையில் ஓய்வுபெற்ற திரு.அருமைநாயகம் அவர்களின் பிரியாவிடையை யாழ். மாவட்ட வங்கிச் சமூகம் சிறப்பாகக் கொண்டாடுகின்ற இவ்வேளையில், இலங்கை வங்கி யாழ்/மேற்தரக் கிளையின் பாடசாலை சேமிப்புப் பிரிவின் பொறுப்பாளராகவும், இன்று இலங்கை வங்கி தலைமை அலுவலக பாடசாலைச் சேமிப்புப் பிரிவின் இணைப்பதிகாரியாகவும் செயற்படுபவன் என்ற முறையில் வடமாகாண பாடசாலைச் சேமிப்புப் பிரிவுகளின் மேம்பாட்டில் அவர் காட்டிய அக்கறையையும், முயற்சியையும், செயற்திறனையும் இங்கு குறிப்பிட்டு இப்பாராட்டுச் செய்தியை வழங்குவதோடு, புதிதாகப் பதவி ஏற்றுள்ள உதவிப் பொதுமுகாமையாளர் திரு.என்.சிவரட்ணம் அவர்களை வரவேற்பதற்கும் இச்சந்தர்ப்பத்தை வாய்ப்பாகக் கொள்கிறேன். மிகவும் எளிமையாகவும், எல்லோரிடமும் இனிதே பழகும் சுபாவமும் அவரை இன்று சாதனை நாயகமாக மாற்றியுள்ளது. தனது ஓய்வு காலத்தில் திடகாத்திரத்துடன் நீண்டநாள் குடும்பத்துடன் வாழ்ந்து இன்புற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

திரு.ஆர்.சுதாகரன், பிரதிப் பொதுமுகாமையாளர் (கிளைகள்)
பகுதி, இலங்கை வங்கி, தலைமை அலுவலகம், கொழும்பு.

### நன்றியுடன் விடை தருகிறது



இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளராகக் கடமையாற்றிய திரு.B.A. அருமைநாயகம் அவர்கள் ஓய்வு பெறும் இக்காலப் பகுதியில், அவரின் அரிய சேவையை இழந்த துயரம் ஒருபுறம், அவர்தம் பெருமைகளையும் சாதனைகளையும் மீள் பார்வை செய்வதில் ஒருபுறம், சாதனையாளனின் பிரியாவிடை வைபவங்கள் ஒருபுறம் என இலங்கைவங்கியே ஆரவாரப்பட்டுக்கொண்டிருக்கிறது. மணிவிழா நாயகனின் சாதனைக் காலத்தில் நானும் முகாமையாளராகக் கடமையாற்றிய பெருமிதத்துடன் சில நினைவுகள் உங்களுடன். அனைவரையும் அனுசரிக்கும் பாங்கு, புன்முறுவலுடன் பதிலளிக்கும் தன்மை, பதவியை மிஞ்சி பழகக்கூடிய பண்பு போன்றவை இச்சாதனையாளனை தனிப்படுத்தி நிற்கின்றது. இடர்நிறைந்த முல்லைத்தீவுக்கிளையில் நான் கடமையாற்றியபோது இவர் தந்த ஆறுதல்களும் உறுதுணையும் என்றும் மறக்கமுடியாதது. மானிப்பாய் கிளை வளர்ச்சிப் பாதையில் நாடளாவிய வலைப் பின்னலுடன் இணைந்தமை, மேற்தரக் கிளையாக தர முயர்ந்தமை, ATM அறிமுகம் போன்ற நிகழ்வுகள் இவரின் பதவிக்காலத்திலேயே நிகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. சகல வழிகளிலும் வங்கியின் வளர்ச்சிக்கு உழைத்தமைக்கு இந்நேரத்தில் நன்றிகூறுவதுடன் மேலும் ஓய்வுக்காலம் சிறந்திட இறைவனைப் பிரார்த்தித்து, மரியாதையுடன் பிரியாவிடை பகர்கின்றோம்.

திரு.க.இலட்சுமணசர்மா,
முகாமையாளர், மானிப்பாய் மேற்தரக்கிளை.

### சாதனையாளனே வாழ்க வளமுடன்



வங்கி வரலாற்றில் தனக்கென ஒரு தனித்துவமான ஆளுமையைத் தக்கவைத்து வடவலய இலங்கை வங்கிக் கிளைகளின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் தன்னையே அர்ப்பணித்த தனிப்பெரும் நாயகன் உயர்திரு. B.A. அருமைநாயகம் அவர்களின் ஓய்வு, எமை எல்லாம் ஒருகணம் மௌனிக்கவைத்தது.

பதவி, அதிகாரம், பகட்டு வாழ்க்கை என்ற பதங்களுக்கு முற்றுப் புள்ளி வைத்து பணிவு, பண்பு, எல்லோரையும் அணைத்துச் செல்லும் உயர்மனிதநேய அம்சங்கள், இறைபக்தி போன்றவற்றிற்கு உதாரண புருசராய், ஊழியர்கள் எல்லோருக்கும் வழிகாட்டியாய் இருக்கும் அருமை ஐயாவுடன் பல வருடங்கள் கடமையாற்றக் கிடைத்த சந்தர்ப்பம் எனக்கு ஒரு பெரும் பாக்கியம் ஆகும். களம் அமைத்துக் கொடுத்த ஊர்காவற்துறை கிளையில் மாட்டுவண்டி வங்கிச் சேவையில் சாதனை ஆரம்பித்து தனது இறுதி வரலாற்றுச் சாதனையாக அச்சுவேலிக் கிளையை தனிக்கிளையாக்கி வங்கி வாழ்விற்கு விடைகொடுக்கும் அருமை ஐயா அவர்கள் தனது குடும்பத்துடன் மேன்மேலும் சீரும் சிறப்புடன் வாழ இறைவனை வேண்டி வாழ்க பல்லாண்டு! வாழ்க பல்லாண்டு! என வாழ்த்துகின்றேன்.

திரு.க.சிவராஜா
பிரதிப் பிரதம பாதுகாப்பு அதிகாரி,
இலங்கை வங்கி,
வடவலய அலுவலகம்,
யாழ்ப்பாணம்.


2008 – தரம்:5 புலமைப்பரிசில் பரீட்சை
வெற்றித்தேர்வுக் கருத்தரங்கில் கலந்துகொண்ட

## வெற்றியாளர்களைக் கௌரவித்தல்

உதயன் ஊடக அனுசரணையோடு
மக்கள் வங்கி வழங்கும்
மகத்தான பதக்கத்திற்கான

## மாபெரும் கௌரவிப்பு விழா

இடம் : கோப்பாய் ஆசிரிய கலாசாலை.
காலம்: 09.11.2008(ஞாயிறு) காலை:9.00மணி
தலைமை : திரு.வே.கா.கணபதிப்பிள்ளை
(பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

பிரதம விருந்தினர் :
உயர்திரு.கணபதிப்பிள்ளை ஆனந்தராஜா.
(உதவிப் பொதுமுகாமையாளர், மக்கள் வங்கி, வடவலயம். யாழ்ப்பாணம்.)

கௌரவ அதிதி
திரு.சு.கென்றி
(உதவிப் பிராந்திய முகாமையாளர், மக்கள்வங்கி, யாழ்ப்பாணம்.)

சிறப்பு விருந்தினர்கள்:
திரு.வி.அருளானந்தம். (முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி)
திரு.க.பாலசுப்ரமணியம் (பொது முகாமையாளர், உதயன்.யாழ்ப்பாணம்)

விசேட விருந்தினர்கள்:
திரு.ஈ.எஸ்.பி.நாகரத்தினம் (ஈ.எஸ்.பேரம்பலம் அன் சன்ஸ்.)
லயன்.கலாநிதி.இ.சாந்தன் (தலைவர், லயன்ஸ் கழகம், மானிப்பாய் பரிஸ்.)
செல்வி. மலர் சின்னையா (அதிபர், ஆசிரிய கலாசாலை, கோப்பாய்.

நிகழ்ச்சி நிரல்:
ஆரம்ப வைபவம்.
வரவேற்புரை. திரு.S.R.சத்தியேந்திரம்பிள்ளை. (உப பீடாதிபதி, யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி)
தலைமையுரை. ஆசியுரைகள். வாழ்த்துரைகள்.
அதிபர்கள், ஆசிரியர்கள், வளவாளர்கள், மாணவர்கள் கௌரவிப்பு.
ஏற்புரை, நன்றியுரை.

பாடசாலைகளுக்குப் பெயர்கள் அனுப்பப்பட்டவர்கள் மட்டும் [illegible]
09.11.2008. ஞாயிறு. காலை: 8.30 மணிக்கு சமூகமளிக்க வேண்டும்.


### பெண் நாய்களுக்கு கருத்தடை சிகிச்சை

யாழ்ப்பாணம், நவ.8

வட்டுக்கோட்டை மாவடி கால்நடை வைத்தியசாலையில் பிரதி சனிக்கிழமை தோறும் பெண் நாய்களுக்குக் கருத்தடை சிகிச்சை இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றது.

பெண் நாய்களுக்குக் கருத் தடை சிகிச்சை செய்ய விரும்புபவர்கள் மாவடி கால்நடை வைத்தியசாலை அல்லது வட்டுக்கோட்டை பொதுச் சுகாதார பரிசோதகருடன் பதிவினை மேற் கொண்டு சிகிச்சையைப் பெறலாம் எனத் தெரிவிக்கப் படுகின்றது. (204)

# ஜானக பெரேராவின் பிள்ளைகள் உள்ளிட்ட 87 பேர் அடிப்படை உரிமை மீறல்மனு

## உயர் நீதிமன்றில் தாக்கல்

கொழும்பு, நவ.08

மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவும் அவரது துணைவியாரும் மற்றும் முப்பதுபேரும் கொல்லப்படவும் பல டசின் கணக்கானோர் காயமடையவும் காரணமான குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக, அதில் பாதிக்கப்பட்டோரும் அவர்களின் உறவினர்களும் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் அடிப்படை உரிமைமீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருக்கின்றனர்.

ஜெனரல் ஜானகப்பெரேராவின் பிள்ளைகள் மற்றும் பாதிக்கப்பட்டோர், அவர்களின் உறவினர்கள் என 87 பேர் இணைந்து இந்த மனுவைத் தாக்கல் செய்திருக்கின்றனர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, பொலிஸ்மா அதிபர், இராணுவத் தளபதி உட்பட 9 பேர் இந்த மனுவில் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டோருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் ஒரு சதம் தன்னும் நஷ்டஈடு செலுத்தப்படவில்லை என்றும் -

ஒவ்வொருவருக்கும் தலா ஐம்பது லட்சம் ரூபா நஷ்ட ஈடு செலுத்த உத்தரவிடவேண்டும் என்றும் -

சர்வதேச நிபுணர்களை வரவழைத்து இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை நடத்துமாறு பொலிஸ்மா அதிபருக்குக் கட்டளையிட வேண்டும் எனவும் -

மனுவில் கோரப்பட்டிருந்தது. (சி)

# இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்கிளை உறுப்பினர்களுக்கு

நல்லூர், நவ.08

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் ஆயுள்கால அங்கத்தவர்கயிடமிருந்து அங்கத்துவத்தைப் புதுப்பிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அங்கத்தவர்கள் தமது பெயர், முகவரி உட்பட்ட விவரங்களை அடுத்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் கேட்டுள்ளார். (202-111)

# ஆசிரியர்களுக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம், நவ.08

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் அடுத்த வருடம்(2009) தரம் 8 வகுப்புகளில் புவியியல், வரலாறு, வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும் ஆகிய பாடங்கள் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்கு புதிய பாடத்திட்டம் தொடர்பான மூன்று நாள் செயலமர்வு நடத்தப்படவுள்ளன.

இன்று தொடக்கம் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை செயலமர்வு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (202-207)

* * *

யாழ்ப்பாணம், நவ.08

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 31 பாடசாலைகளின் மாணவர்களுக்கு யுனிசெப் நிறுவனத்தினரால் ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

12 பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கும், 11 பாடசாலைகளின் இடைநிலை வகுப்பு மாணவர்களுக்கும், 8 பாடசாலைகளுக்கு உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன என வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(202-207)

# மிருசுவில் குடியிருப்பாளர்களுக்கு உறுதிகள்

யாழ்ப்பாணம், நவ.08

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்ட குடியிருப்பாளர்களில் சிலருக்கு காணி உறுதிகள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளன.

குறிப்பிட்டோர் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் பிரதேச செயலக காணிக் கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

உறுதிக்குரியவர்களின் விவரம் வருமாறு:-

குலநாயகம் கருணாவதி, நாகலிங்கம் மகேஸ்வரி, நல்லையா கனகம்மா, பசுபதிநாதன் சிவமலர், பொன்னுச்சாமி மகேஸ்வரி, சந்திரசேகரம் பரமேஸ்வரி, தர்மகுலசிங்கம் விஜயராணி, தம்பையா பத்மாதேவி, இளையநாதன் திலகவதி, ஆனந்தம் நல்லம்மா, அருட்பிரகாசம் யோகேஸ்வரி, பாலசுந்தரம் யாழினி.

(202-207)


## ஹற்றன் நஷனல் வங்கி

அடகுப் பொருள்களை ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 31/08/2007 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 15/11/2008 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இல.212,214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

***உங்களின் பெறுமதி மிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால்....***

★கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா.500) செலுத்தி

அல்லது

★தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள அடகு வைத்துக் காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

[illegible] திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை [illegible]த்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Special Guidance for O/L 2008

## விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் - II

34/T/II

ஆசிரியர். GRAPHS குமரன் (Girls' High School - Kandy). Three Hours

பகுதி II A (கடந்த வாரத்தொடர்ச்சி)

- சகல வினாக்களிற்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளித்தல் கட்டாயமானதாகும்.
- ஒவ்வொரு வினாக்களிற்கும் 15 புள்ளிகள் வீதம் மொத்தம் 60 புள்ளிகள் வழங்கப்படும்.

01. கமலன் சிறந்த கமக்காரன். அவன் தனது வயலை நன்கு பராமரித்து வந்தான். தனது வயலுக்கு எப்போதும் இயற்கையான உரவகைகளை இடுவதே அவனது வழக்கம். தேவை ஏற்படும்போது ஒருசில சந்தர்ப்பங்களில் மட்டுமே யூரியா போன்ற சில உரங்களை உபயோகிப்பான். இருப்பினும் அவ்வேளைகளில் உரம் இட்டவுடனேயே நன்கு நீர் பாய்ச்சிக் கொள்வான். அறுவடையின் பின்னர் சில சந்தர்ப்பங்களில் மண்ணிற்கு சுண்ணாம்பும் சேர்ப்பான். நெல் விதைக்கும் போதும் பலகை ஒன்றின் மீது நின்றே நெல் விதைப்பான்.

1. கமலன் இயற்கை உரங்களையே பெரிதும் விரும்புவதற்கான இரு காரணங்களைக் குறிப்பிடுக.
   (1) ..........
   (2) .......... (2 புள்ளிகள்)

2. a) மண்ணில் எம் மூலகக் குறைபாட்டினை நிறைவு செய்வதற்காக யூரியா இடப்படுகிறது? (1 புள்ளி)
   ..........

   b) அம் மூலகத்தின் தேவை 7kg என கணக்கிடப்பட்டிருப்பின் கமலன் கொள்வனவு செய்ய வேண்டிய யூரியாவின் திணிவு யாது? (H-1, C-12, N-14, O-16) (3 புள்ளிகள்)

   | யூரியாவின் சார் மூ.கூ.தி |
   |---|
   | |

3. a) யூரியாவை இட்டதும் கமலன் நீரிறைப்பதன் காரணம் எச்செயன்முறையைத் தடுப்பதற்காகும்? (1 புள்ளி)
   ..........

   b) நீரிறைக்காது விடின் தாவரத்தில் இருந்து நீங்கும் பொருள் யாது? (1 புள்ளி)
   ..........

   c) அன்றாட வாழ்க்கையில் அச் செயன்முறையை நீர் அவதானித்த சம்பவம் ஒன்றைக் குறிப்பிடுக. (1 புள்ளி)
   ..........

4. a) நெல் விதைக்கும்போது பலகை மீது நின்று விதைப்பதற்கான காரணம் யாது?
   .......... (1 புள்ளி)


   b) இதே நோக்கத்தையடையும் பொருட்டு அன்றாட வாழ்க்கையில் மேற்கொள்ளப்படும் நீர் அவதானித்த சம்பவம் ஒன்றைக் குறிப்பிடுக. (1 புள்ளி)
   ..........

   c) கமலனின் நிறை 50kg ஆகவும், அவனது ஒரு பாதத்தின் பரப்பளவு $25cm^2$ ஆகவும், பலகையின் பரப்பளவு $1m^2$ ஆகவும் இருப்பின், பலகையைப் பயன்படுத்தாத போதும், பயன்படுத்தும் போதும் அலகு பரப்பில் தாக்கும் விசைகளிற்கிடையிலான வித்தியாசத்தைக் காண்க. அலகினையும் குறிப்பிடுக. ($g = 10ms^{-2}$)

| | பலகை பயன்படுத்தும்போது | பலகை பயன்படுத்தாதபோது |
|---|---|---|
| நிறை | | |
| பரப்பளவு ($m^2$ இல்) | | |
| அலகு பரப்பில் தாக்கும் விசை | | |


வித்தியாசம் : .......... (4 புள்ளிகள்)

02. A, B, C, D எனும் நான்கு திண்மக் கரையங்களின் கரைதிறன் தொடர்பான வரைபு தரப்பட்டுள்ளது. அதனை நன்கு அவதானித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.




1. A, B, C, D ஆகிய பதார்த்தங்களுக்கு ஒவ்வொரு உதாரணம் தருக. (2 புள்ளிகள்)
   A - .......... B - ..........
   C - .......... D - ..........
2. 60°C யில் D யின் கரைதிறன் யாது? அலகுடன் குறிப்பிடுக. (1 புள்ளி)
   ..........
3. எவ் வெப்பநிலையில் $50cm^3$ நீரில் கரைக்கக்கூடிய C யின் உச்ச திணிவு 15g ஆக இருக்கும்? (2 புள்ளிகள்)
   ..........
4. 80°C யில் 25ml நீரில் கரைக்கக்கூடிய B யின் உச்ச திணிவு யாது? (2 புள்ளிகள்)
   ..........
5. A,B,C,D என்பன திண்மக் கரையங்கள் எனக் குறிப்பிடாவிடின் வாயு ஒன்றாக இருக்கக்கூடியது எது? (1 புள்ளி)
   ..........
6. அறை வெப்பநிலை 20°Cயாக உள்ள நாள் ஒன்றில் w / v = 25% ஆகவுள்ள கரையம் A ஐக் கொண்ட $1dm^3$ கரைசலை 40°C இற்குச் சூடேற்றியபோது அதன் கனவளவு ஆரம்பக் கனவளவின் அரைமடங்காகியது.
   a) 20°C யில் $1 dm^3$ கரைசலில் கரைந்திருந்த A யின் திணிவு யாது? (2 புள்ளிகள்)
   ..........
   b) 40°C யில் அக் கரைசலின் கனவளவு யாது? (1 புள்ளி)
   ..........
   c) 40°C யில் பளிங்காதல் நிகழுமா? நிகழுமெனின் பளிங்கின் திணிவையும், நிகழாது எனின் அதற்கான காரணத்தையும் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
   ..........
   d) கரைசலை மீண்டும் 20°C யிற்கே இயல்பாகக் குளிரவிடின் பளிங்காக்கம் நிகழுமா? நிகழுமெனின் பளிங்கின் திணிவையும், நிகழாதெனின் அதற்கான காரணத்தையும் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
   ..........

03. குவியத்தூரம் 10cm ஆகவுள்ள குழிவாடி ஒன்றின் முன்னால் வைக்கப்பட்ட பொருளின் விம்பத்தை திரையில் பெறக்கூடியதாக இருந்தது. அதன் வரிப்படம் இங்கு தரப்பட்டுள்ளது.





1. படுகதிர் இரண்டுக்கும் பொருத்தமான தெறிகதிர்களை வரைக. (2 புள்ளிகள்)
2. தெறிகதிர்கள் சந்திக்கும் இடத்தில் விம்பத்தை வரைக. (1 புள்ளி)
3. விம்பத்தின் இயல்பு இரண்டு தருக. (2 புள்ளிகள்)
   (1) ..........
   (2) ..........
4. (a) பொருட் தூரம் யாது? .......... (1 புள்ளி)
   (b) விம்பத் தூரம் யாது? .......... (1 புள்ளி)
5. இவ் ஆடியை மெய்விம்பம் பெறுவதற்காகப் பயன்படுத்தும் சந்தர்ப்பம் ஒன்றையும், மாயவிம்பம் பெறுவதற்காகப் பயன்படுத்தும் சந்தர்ப்பம் ஒன்றையும் எழுதுக.
   (1) மெய் விம்பம் :- .......... (1 புள்ளி)
   (2) மாய விம்பம் :- .......... (1 புள்ளி)
6. பொருளைக் குவியத்தின் பின்னால் 5cm இல் வைப்பின் விம்பத்தைப் பெறுவதற்காக திரையை வைக்க வேண்டிய பிரதேசம் யாது? (1 புள்ளி)
   ..........
7. இவ் ஆடி மூலம் பெற முடியாத விம்பத்தின் இயல்புகள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)
   (1) ..........
   (2) ..........
8. பின்வரும் கதிர்களின் தொடர்ச்சிப் பாதையை வரைக. (3 புள்ளிகள்)


(a)

(b)

(c)




04. நாம் உண்ணும் உணவு பல்வேறு போசணைப் பொருட்களைக் கொண்டுள்ளது. எனினும் அவை எமது உடலினுள் அகத்துறிஞ்சப்படக்கூடிய நிலையில் இல்லை. எனவே அவற்றை அகத்துறிஞ்சக்கூடிய நிலைக்கு மாற்றுவதும், பின் அகத்துறிஞ்சுவதும் உணவுக் கால்வாய்த் தொகுதியே ஆகும்.




1. நாம் உண்ணும் உணவில் உள்ள பிரதான போசணைப் பொருட்கள் மூன்றையும் அவற்றின் அகத்துறிஞ்சப்படும் வடிவத்தையும் தருக. (3 புள்ளிகள்)

| | போசணைப் பொருட்கள் | அகத்துறிஞ்சப்படும் வடிவம் |
|---|---|---|
| (1) | | |
| (2) | | |
| (3) | | |

2. போசணைக் கூறுகள் அகத்துறிஞ்சப்படும் நிலைக்கு மாற்றப்படும் செயன்முறைக்கு வழங்கப்படும் பெயர் யாது? (1 புள்ளி)
   ..........

3. உணவுக் கால்வாய்த் தொகுதியின் A-E வரையில் இடம்பெற வேண்டிய அங்கங்களையும், சுரப்பி p இனையும் பெயரிடுக. (3 புள்ளிகள்)

| | | | |
|---|---|---|---|
| A | | D | |
| B | | E | |
| C | | P | |

4. உணவுக்கால்வாய்த் தொகுதியுடன் தொடர்பான மூன்று பிரதான புறஞ்சுரப்பிகள் உள்ளன. அவற்றில் இரண்டு மேலேயுள்ள வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளன. இவற்றின் சுரப்புக்கள் அவற்றின் கான்களின் மூலம் உணவுக்கால்வாய்த் தொகுதியினுள் சேர்க்கப்படுகின்றன.

   (a) காட்டப்பட்ட இரு சுரப்பிகளினாலும் சுரக்கப்படும் சுரப்புகளைத் தருக. (2 புள்ளிகள்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | ஈரல் | | (2) | P | |

   (b) இதில் காட்டப்படாத சுரப்பியினால் சுரக்கப்படும் சுரப்பையும் அதிலுள்ள நொதியத்தையும் தருக. (2 புள்ளிகள்)
   (1) சுரப்பு :- ..........
   (2) நொதியம் :- ..........

   (c) X, Y இனைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | X | | (2) | Y | |

   (d) இப்புறஞ்சுரப்பிகளுக்கும் உடலில் உள்ள அகஞ்சுரப்பிகளுக்கும் இடையிலான வேறுபாடு ஒன்றைத் தருக. (1 புள்ளி)

| புறஞ்சுரப்பி | அகஞ்சுரப்பி |
|---|---|
| | |

   (e) அகஞ்சுரப்பிகளில் தலைமைச் சுரப்பியாக செயற்படுவது எது? (1 புள்ளி)
   ..........

(12 ஆம் பக்கம் பார்க்க)

**அன்பு மாணவர்களே!**

**இக் கல்விச்சுடர்ப்பகுதியில் வெளிவரும் வினாத்தாள் தொடர்பாக ஏதாவது சந்தேகங்கள், தெளிவின்மைகள் இருப்பின் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தெரிவித்தால் உரிய ஆசிரியர்கள் மூலம் சந்தேகங்கள் தெளிவாக்கப் படும்.**

**தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்:-**
**021-2229933 / 0716850005 / 0714273035**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## பகுதி II B·

- இரசாயனவியல், பௌதிகவியல்,உயிரியல் ஆகிய ஒவ்வொரு பகுதியிலும் இருந்து ஒவ்வொரு வினாக்களைக் கட்டாயமாகத் தெரிவு செய்து எல்லாமாக மூன்று வினாக்களிற்கு மாத்திரம் விடையளித்தல் போதுமானது.
- ஒவ்வொரு வினாக்களிற்கும் 20 புள்ளிகள் வீதம் மொத்தம் 60 புள்ளிகள் வழங்கப்படும்.

## இரசாயனவியல் - CHEMISTRY

01. இன்று பல்வேறு தேவைகளின் பொருட்டு வெவ்வேறு வகையான இரசாயனப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றுள் உலோகங்கள், அல்லுலோகங்கள், உலோகப்போலிகள் என்பனவும் மூலங்கள், அமிலங்கள், உப்புக்கள் ஆகியனவும் அடங்குகின்றன. வீட்டில் உள்ள இரசாயனப் பொருட்களைக் கண்டறியும் நோக்குடன் தேடலில் ஈடுபட்ட மாணவர் குழுவொன்று பின்வரும் பொருட்களை இனங்கண்டது.

- அப்பச்சோடா
- சலவைச்சோடா
- வினாகிரி
- எலுமிச்சை
- சவர்க்காரம்
- கறியுப்பு
- மக்னீசியப்பால்

மற்றொரு குழு தொழிற்சாலைகளிற்குச் சென்று இரசாயனப் பொருட்கள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் தொடர்பாக தேடியாய்வில் ஈடுபட்டது. அவர்கள் இனங்கண்ட சில சந்தர்ப்பங்கள் வருமாறு.

1. ஜெலற்றின் தயாரித்தல்
2. இறப்பர் பாலைத் திரளச் செய்தல்
3. சுண்ணாம்புச் சாந்து தயாரித்தல்
4. பெற்றோலியப் பொருட்களைத் தூய்மைப்படுத்தல்
5. சீனிக் கைத்தொழிலில் வெல்லப்பாகினைச் சுத்திகரித்தல்
6. தோல் பதனிடல்

A) முதலாவது குழு இனங்கண்டவற்றைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களிற்கு விடை தருக.

1. a) பின்வருவனவற்றில் அடங்கியுள்ள இரசாயனப் பதார்த்தங்களின் சூத்திரங்களைத் தருக. (2 புள்ளிகள்)

அப்பச் சோடா, சலவைச் சோடா, கறியுப்பு, மக்னீசியப்பால்

b) அமில உப்பு, நடுநிலை உப்பு, அமிலம், மூலம் ஆகியவற்றிற்கு ஒவ்வோர் உதாரணத்தைத் தருக. (2 புள்ளிகள்)

c) மேலுள்ளவற்றில் எவை இரண்டைக் கலப்பதன் மூலம் காபனீரொட்சைட்டைத் தயாரிக்க முடியும்? (2 புள்ளிகள்)


2.வீடுகளில் அப்பச்சோடாவைப் பயன்படுத்துவது போல் வெதுப்பகங்களில் பயன்படுத்தப்படும் அப்பத்தூளில் உள்ள இரு பதார்த்தங்களும் எவை? (2 புள்ளிகள்)

3. நீரின் வன்மையை அகற்றுவதற்காகவும் சலவைச்சோடா பயன்படுத்தப்படுகிறது. நீரின் இரு வகையான வன்மைகளையும் குறிப்பிட்டு அவற்றுக்குக் காரணமான ஒவ்வோர் உப்புக்களையும் அவற்றின் எதிரே எழுதுக. (2 புள்ளிகள்)

B) இரண்டாம் குழு கண்டறிந்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களிற்கு விடை தருக.

1. மேற்குறித்த சந்தர்ப்பங்களில் ஒவ்வொன்றிற்கும் பயன்படுத்தப்படும் பதார்த்தங்களைத் தனித்தனியே குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
2. மேலே நீர் குறிப்பிட்ட பதார்த்தங்களைப் பொருத்தமானவாறு கூட்டங்களாக்குக. (3 புள்ளிகள்)
3. நீர் வகைப்படுத்தியது சரியா என்பதை அறிய பினோப்தலீனும் இரு வகையான பாசிச்சாயத் தாள்களும் உமக்குத் தரப்பட்டுள்ளன.
   a) பினோப்தலீன் அக்கூட்டங்களிற்குக் காட்டும் நிறங்களைத் தருக. (2 புள்ளிகள்)
   b) வகைப்படுத்தலை உறுதி செய்ய தரப்பட்டுள்ள காட்டிகளில் எதைப் பயன்படுத்துவது மிகப்பொருத்தமாயிருக்கும் என்பதை ஆராய்ந்து கூறுக. (3 புள்ளிகள்)

02.ஆய்வு கூடத்தில் மாணவர் குழுவொன்று தயாரித்த மின்கலத்தைப் பயன்படுத்தி மற்றொரு மாணவகுழு மின்பகுப்பை மேற்கொண்டது.




(1) A,B ஆகியவற்றைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)
(2) மின்கலத்தின் நேர், மறை முனைவுகளை இனம் காண்க. (2 புள்ளிகள்)
(3) மின்பகுப்பின்போது அனோட், கதோட்டில் நிகழும் தாக்கச் சமன்பாடுகளைத் தருக. (2 புள்ளிகள்)
(4) மின்கலத்தில் ஒட்சியேற்றம், தாழ்த்தல் நிகழும் முனைவுகள் எவை? (2 புள்ளிகள்)
(5) இச் செயற்பாட்டின்போது மாணவர் குழு எதிர்நோக்கியிருக்கும் என நீர் எதிர்பார்க்கும் இடர்பாடு ஒன்றைக் குறிப்பிட்டு அதனைத் தீர்க்கும் வழியொன்றை முன்மொழிக. (2 புள்ளிகள்)
(6) இங்கு வெளியேறும் வாயுக்களைச் சேகரிப்பதற்காக தொகுதியை மேம்படுத்தச் செய்வேண்டிய மாற்றத்தைக் காட்டப் படம் வரைக. (2 புள்ளிகள்)
(மாற்றம் செய்யப்படும் தொகுதியை மட்டும் வரைதல் போதுமானது)
(7) இங்கு வெளியேறும் விளைவுகளை ஒன்று சேர்ப்பதன் மூலம் பெறப்படும் வாயு எது? அதனை நீரினுள் சேர்க்கும்போது கிடைக்கும் விளைவு யாது? (2 புள்ளிகள்)
(8) இத்தொகுதியில் சோடியத்தை பிரித்தெடுக்கமுடியுமா? முடியுமெனின் எம்முனைவில் என்பதையும், முடியாதெனில் அதற்கான காரணத்தையும் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
(9) இத்தொகுதியைக் கல்வனைஸ்படுத்தலுக்குப் பயன்படுத்தின், செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் 3 தருக. (3 புள்ளிகள்)
(10) கல்வனைஸ்படுத்தலுக்கு பயன்படுத்தக்கூடிய இது தவிர்ந்த வேறொரு முறையைக் குறிப்பிடுக. (1 புள்ளி)

## பௌதிகவியல் - PHYSICS

03. கரடான மேசையில் வைக்கப்பட்ட மரக்குற்றி மீது அளவிடத்தக்க கிடை விசை, விற்றராசின் மூலம் பிரயோகிக்கப்படும் விதம் இவ் உருவில் காட்டப்பட்டுள்ளது.

1) கிடையாக விசையைப் பிரயோகிக்காதபோது ஓய்வில் இருக்கின்றது. அச்சந்தர்ப்பத்திலே குற்றியின் நிறை அதன்மீது தாக்கும் ஒரு விசையாகும். மற்றைய விசை யாது? அது எத்திசையிலே தாக்குகின்றது? (2 புள்ளிகள்)

2)சிறிய கிடை விசையொன்றைப் பிரயோகிக்கும்போது குற்றி அசையாவிட்டால், அதனை நீர் எங்ஙனம் விளங்கிக்கொள்வீர்? (2 புள்ளிகள்)



3) குற்றியைக் கட்டியிருக்கும் நூலினால் விற்றராசு இல்லாமல் இழுப்பதற்குப் பதிலாக விற்றராசுடன் இழுத்தால், எமக்குக் கிடைக்கும் அனுகூலம் யாது? (1 புள்ளி)


4) குற்றி மீது அத்தகைய இன்னொரு மரக்குற்றியை வைத்து விற்றராசினால் இழுப்பதற்கு அதன் மீது பிரயோகிக்க வேண்டிய விசை ஒரு குற்றி இருந்தபோது உள்ள விசைக்குச் சமமா? அரைவாசியா? இருமடங்கா? நான்கு மடங்கா? (1 புள்ளி)

5) குற்றிக்கும் மேசைக்கும் இடையேயுள்ள உராய்வு விசையைக் குறைத்துக் கொள்வதற்குப்பயன்படுத்தத்தக்க இரு உபாயங்களை எழுதுக. (2 புள்ளிகள்)

6) தளத்தில் மரக்குற்றி மட்டாக நகர்த்தப்படும்போது தராசு 30N ஐ காட்டியது எனின்,
(a) எல்லை உராய்வின் பருமன் யாது? (2 புள்ளிகள்)
(b) குற்றியின் திணிவு 5kg எனின், மேசையின் தளத்திற்கும் குற்றிக்கும் இடையிலான உராய்வுக் குணகத்தைக் காண்க. (2 புள்ளிகள்)
(c) உராய்வு அனுகூலமாகும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)

7) அருகே குற்றியினதும் மேசைத் தளத்தினதும் பக்கத் தோற்றம் மேலே காட்டப்பட்டுள்ளது. அதனை உமது விடைத்தாளில் பிரதி செய்து அதில் தொழிற்படும் எல்லா விசைகளையும் குறிக்குக. (2 புள்ளிகள்)


8) மாணவன் ஒருவன் அமைத்த இறப்பர் நாடாத் தராசைப் படம் காட்டுகின்றது.




(a) காட்டியின் ஆரம்ப வாசிப்பு யாது? (1 புள்ளி)
(b) 50g திணிவைத் தட்டில் இட்டதும் காட்டி 5 அளவிடைகள் நீட்சியடைந்ததாயின், இத்தராசில் நீர் அளக்கக்கூடிய அதிகூடிய திணிவு யாது? (1 புள்ளி)
(c) வினா 8.(b) இல் நீர் கூறிய விடையை, விசையின் நியம அலகில் குறிப்பிடுக. (1 புள்ளி)
(d) விசையின் ஒரு நியம அலகைத் தரக்கூடிய திணிவு எதுவாகும்? (1 புள்ளி)

04. A,B எனும் இரு மோட்டார் வண்டிகள் நேர்கோடு வழியே இரு வெவ்வேறு திசைகளில் 15m/s எனும் கதியில் பயணத்தைத் தொடங்கின. வண்டி A ஆனது 2 நிமிடத்தில் அதன் பயணத்தை முடித்துக் கொண்டது.வண்டி B ஆனது 1 நிமிடத்துக்குச் சீரான கதியுடன் சென்று அடுத்த 1 நிமிடத்தில் $0.3\ ms^{-2}$ எனும் சீரான ஆர்முடுகலுடன் சென்றது.

(1) முதல் 1 நிமிடத்தில் இவ்விரு வண்டிகளின் வேகம் பற்றி யாது கூறலாம்? அதற்கான காரணம் யாது? (2 புள்ளிகள்)
(2) வண்டி A பயணம் செய்த தூரம் யாது? (2 புள்ளிகள்)
(3) 15m/s எனும் கதியை கிலோமீற்றர் / மணித்தியாலத்தில் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
(4) ஆர்முடுகல் என்றால் என்ன? (2 புள்ளிகள்)
(5) வண்டி Bயின் இயக்கத்தைக் காட்டுவதற்கான பருமட்டான வேக- நேர வரைபு ஒன்றை வரைக? (2 புள்ளிகள்)
(6) வண்டி B அடைந்த அதிகூடிய வேகம் என்ன? (2 புள்ளிகள்)
(7) நேரான பாதையில் சீரான வேகத்துடன் மோட்டார் வாகனம் பயணம் செய்கையில் குறுக்காக சிறுவன் ஒருவன் வருவதைக் கண்டு சாரதி நிறுத்தியைப் பிரயோகித்தார். வாகனம் ஓய்வடைந்தது. இவ் இயக்கத்தின் வேக - நேர வரைபு அருகில் தரப்பட்டுள்ளது. (சாரதி சிறுவனைக் கண்ட நேரம் t = 0)




(a) t = 0 இலிருந்து நிறுத்தியை அழுத்தத் தொடங்கிய நேரம் வரை வாகனம் சென்ற தூரம் எவ்வளவு? (2 புள்ளிகள்)
(b) வாகனம் சிறுவனின் அருகே வந்து நின்றதெனில் வாகனம் வந்து நின்ற இடத்திற்கும் t = 0 இல் வானகம் இருந்த இடத்திற்கும் இடையேயான தூரம் எவ்வளவு? (2 புள்ளிகள்)
(c) நிறுத்தியை அழுத்தியதால் நிகழ்ந்த ஆர்முடுகல் எவ்வளவு? (2 புள்ளிகள்)
(d) சீரானவேக இயக்கத்திற்கான இடப்பெயர்ச்சி – நேர வரைபை வரைக. (2 புள்ளிகள்)

## உயிரியல் - BIOLOGY

05. பாலன் தனது நண்பன் வீட்டுக்குச் சென்றான். படலையைத் திறந்து சற்று நேரத்திற்குள் உள்ளே இருந்த நாய் சத்தமாகக் குரைக்கத் தொடங்கியது. நாயின் குரலைக் கேட்டதுமே அவன் பின்வாங்கி படலையை நன்கு மூடிக்கொண்டான்.

1) இங்கு தூண்டலை ஏற்ற புலனங்கம் எது? (1 புள்ளி)
2) (a) நடைபெற்ற நிகழ்ச்சியின்போது துலங்கலைக் காண்பித்த அங்கம் எது? (1 புள்ளி)
(b) இவ்வாறாக துலங்கலைக் காண்பிக்கும் அங்கம் எவ்வாறழைக்கப்படும்? (1 புள்ளி)
(c) நீர் குறிப்பிட்டது தவிர்ந்த மற்றைய அங்கத்தையும் தருக? (1 புள்ளி)
3) (a) மேலே தூண்டலுக்குப் பொருத்தமான துலங்கலைக் காட்ட தொடர்பை ஏற்படுத்தும் தொகுதி எது? (1 புள்ளி)
(b) அத்தொகுதி எவற்றினாலானது? (1 புள்ளி)
(c) அத் தொகுதியின் இருபெரும் வகைகளும் எவை? (2 புள்ளிகள்)
(d) இத்தொகுதியின் ஆக்க அலகு எவ்வாறு அழைக்கப்படுகிறது? (1 புள்ளி)
(e) நீர் குறிப்பிட்ட ஆக்க அலகின் அமைப்பை வரைந்து பகுதிகளைக் குறிக்குக. (4 புள்ளிகள்)
(f) i. நீர் வரைந்த அமைப்பின் இரு பிரதான பகுதிகளும் எவை? (2 புள்ளிகள்)
ii. அதில் இவ்வமைப்பின் தொழிற்பாட்டை ஆளும் பகுதி எது? (1 புள்ளி)
iii. மற்றைய பகுதியின் இரு வகைகளும் எவை? (2 புள்ளிகள்)
iv. அவ்விரு வகைகளுக்கும் இடையேயான வேறுபாடுகள் இரண்டினை அட்டவணைப்படுத்துக. (2 புள்ளிகள்)

06. இலிங்க முறை இனப்பெருக்கத்தின்போது பெற்றோரின் இயல்புகள் எச்சத்திற்குக் கடத்தப்படும் விதம் பற்றியும், எச்சங்களிடையே எவ்விதம் வேறுபாடுகள் ஏற்படுகிறது என்பது பற்றியும் விஞ்ஞான பூர்வமாகக் கற்றலே பிறப்புரிமையியல் எனப்படுகிறது.

(1) பெற்றோரின் இயல்புகளைப் பிள்ளைகளுக்குக் கொண்டு செல்லும் அமைப்பு எது? (1 புள்ளி)
(2) "பிறப்புரிமையியலின் தந்தை" எனப் போற்றப்படும் மெண்டல் இனது
(a) முதலாம் பரிசோதனையையும்
(b) முதலாம் விதியையும் தருக. (4 புள்ளிகள்)
(3) மெண்டல் தனது பரிசோதனைக்குப் பட்டாணிக் கடலைத் தாவரத்தைத் தேர்ந்தெடுத்தார்.
(a) பட்டாணிக் கடலைத் தாவரம் எத்தாவரக் குடும்பத்தைச் சேர்ந்தது? (1 புள்ளி)
(b) பட்டாணிக் கடலைத் தாவரத்தின் தாவரவியற் பெயரைத் தருக. (2 புள்ளிகள்)
(c) மெண்டல் தனது பரிசோதனைக்குப் பட்டாணிக் கடலைத் தாவரத்தைத் தெரிவு செய்தமைக்கான இரு காரணங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
(4) மெண்டல் தனது பரிசோதனையை விளக்கக் கையாண்ட பின்வரும் சொற்பதங்களை உதாரணங்களின் உதவியுடன் விளக்குக.
(a) உறள் பொருளியல்பு (b) பரம்பரை இயல்பு
(c) பின்னடைவான இயல்பு (d) ஆட்சியுடைய இயல்பு (4 புள்ளிகள்)
(5) தாவரங்களிலும் விலங்குகளிலும் கலப்புப் பிறப்பாக்கத்தாற் கிடைக்கும் அனுகூலங்கள் ஒவ்வொன்று தருக. (2 புள்ளிகள்)
(6) பரம்பரை நோய்கள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)
(7) இலிங்கமிணைந்த தலைமுறையுரிமை என்றால் என்ன? இதனால் ஏற்படும் குறைபாடுகள் ஒன்றைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

**(முற்றும்)**

ஆக்கம்-
ஆசிரியர் - குமரன்.
கண்டி பெண்கள் உயர்கல்லூரி.

**உங்கள் அபிமான உதயன் கல்விச்சுடரின் மாணவர்களுக்கான விசேட வெளியீடுகள்**

★தரம் 5 மாணவர்களுக்கு வியாழக்கிழமைகளில் 2009 ம் ஆண்டுக்கான தயார்ப்படுத்தல் பரீட்சைத்தொடர்

★A/L மாணவர்களுக்கு:- வெகுவிரைவில்

அனைத்துப்பாடங்களையும் உள்ளடக்கி கொழும்பு, யாழ், கண்டி, திருமலை ஆகிய மாவட்டங்களோடு ஏனைய மாவட்டங்களையும் சேர்ந்த பிரபல ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட மாதிரிவினாத்தாள்கள், கற்றல் குறிப்புக்களைத் தாங்கிவரும் தனியான வெளியீடு.

உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள முகவரிடம் இன்றே முற்பதிவு செய்துகொள்ளுங்கள்

கல்விச்சுடர் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு:-
ஆசிரியர், உதயன்-கல்விச்சுடர், இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் : newkalvisudar@yahoo.com.
தொலைபேசி: 021-2229933 / 0716850005 / 0714273035

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கதைகள் 05

# சிவப்பு விமானம்

போ.சத்தியன்



இருள்நேரங்களில் பொம்மை விமானம் தரையிறங்கி, ஓடுபாதையில் சீராக ஓடிட அந்த முகப்பு விளக்குப் பெருந்துணையாயிருக்குமல்லவா?

விமானத்தின் இருக்கையில் மனித உருவப் பொம்மை ஒன்றை எடுத்து, வசதியாக அமர்த்தினான்.

அதற்கேற்றது போல அந்த மனித பொம்மையின் கைகளையும், கால்களையும் அசைத்துத் திருப்ப முடிந்தது. அட்டைப் பெட்டியிலிருந்த சின்னஞ்சிறிய தொப்பிகளில் ஒன்றை எடுத்து விமானிக்கு அணிவித்தான்.

விர்ரென்று சுழன்று இயங்கிடும் காற்றாடிகளும், 'மினுக்மினுக்' கென்று எரிந்து அணையும் குட்டி விளக்குகளும் விமானம் கிளம்பத் தயாராகியிருக்கிறது என்பதை அறிவித்தன. விமானத்தைக் கையிலெடுத்த வாசு, மெதுவாக அதை ஓடுபாதையில் தரையிறங்கி ஓடச் செய்தான்.

அங்கிருந்து எழுந்து சென்ற அம்மா, தனது அறையிலே வைத்திருந்த குட்டி மேசை ஒன்றை எடுத்து வந்தார். "வாசு! உனது பொம்மைகளை இந்த மேசைமேல் வைத்து இணைத்திடு" என்று அன்பாகச் சொன்னார். தாயாருக்கு நன்றி சொல்லிய வாசு, தனது விமான நிலையப் பொம்மையையும், ஓடுபாதையையும் எடுத்து, அந்தக்குட்டிமேசை மீதுவைத்தான். ஓடு பாதையில் சிவப்பு விமானத்தை அழகாக நிறுத்தி வைத்தான்.



சிவப்பு விமானம் அமைதியாய் நின்றிருந்தது. "விமான நிலையக் கட்டட வேலைகள் முடிந்ததும், இங்கிருந்து விமானம் பறந்து செல்லும்" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான் வாசு.

தேநீர் தயாரித்து எடுத்துவர சமையலறைக்குச் செல்ல எழுந்த அம்மா, பெட்டியினுள் இருந்த மலர்ச்செடிப் பொம்மை ஒன்றை எடுத்து, ஓடுபாதையின் அருகே நிறுத்தி வைத்தார்.

அம்மாவைப் பார்த்துக் கலகலவெனச் சிரித்த வாசு, "அம்மா எமது விமான நிலையத்துக்கு என்ன பெயர் வைக்கலாம்?" என்று கேட்டான்.

"யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம்" என்று சொல்லிய அம்மா, வாசுவை இறுகக் கட்டித் தழுவினார்.

அம்மாவின் கண்கள் கலங்கியிருந்தன. "அருமையான பெயர் அம்மா!" என்று துள்ளிக்குதித்தான் வாசு. விமான ஓடுபாதை ஓரமாய் அம்மா நட்டிருந்த மலர்ச் செடியில், பலவண்ண மலர்கள் கண்சிமிட்டிச் சிரித்தன.

★★★

*(அடுத்தவாரம் 'அன்னை' சிறுவர் கதையை எதிர்பாருங்கள்)*

# வார வசந்தம்

# மண்மூடும் சுவடுகள்....!

- நட்சத்திரபாலன்



நவீனத்துவமும், நாகரிகப் போக்குகளும் மனிதர்களை எத்தனையோ விதமாக மாற்றிவிடுகின்றபோதும், சில அடிப்படை இயல்புகள் - நல்லபண்புகள் - போன்றவை பெரிதும் மாற்றமுறாமல், இயல்பிழக்காமல் பின்பற்றப்படுகின்றன.

இவற்றுள் ஒன்று, மனிதர்களின் - குறிப்பாக குடும்பப் பெண்களின் - சுத்தம் பேணும் பண்பு. மரபோடும், பண்பாட்டோடும் சம்பந்தப்பட்ட கொண்டாட்டங்கள், விழாக்கள் இடம்பெறும் சந்தர்ப்பங்களில் ஆசாரம் தவறாமல் சுத்தம் பேணுகின்ற காரியத்தை அவர்கள் வெகு சிரத்தையோடு செய்கிறார்கள்.

நவீனத்துவத்தின் ஆசீர்வாதங்களோடு, நவநாகரிக நடைமுறைகளை அச்சொட்டாகப் பேணும் குடும்பம் அது. ஒன்றுக்கு மூன்று மகன்மார் கனடாவிலும், லண்டனிலும் குடியேறிவிட்ட இந்தக் குடும்பத்தில், செல்வநாயகமும், அவரது இரண்டு பிள்ளைகளும், மனைவியும், அவள் தாயாரும் மாத்திரம் வெளி நாடுகளுக்குப் போகும் வாய்ப்புகள் இருந்தபோதும் போகப் பிடிக்காமல் 'மண்பற்று' நீங்காதவர்களாக இங்கு வாழ்கிறார்கள். மிக வசதிபடைத்தவர்கள்.

பரம்பரை வசதிகள் காரணமாகப் பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்ற பின்னரும், வேலை பார்க்கும் அவசியம் இல்லாததாலும், கணக்காளராக இருந்த கணவனின் வேண்டுகோளாலும், திருமதி புவனா செல்வநாயகம் ஒரு குடும்பத் தலைவியாக மட்டும் இருக்கிறாள்.

மூன்று நாள்களில் புதுவருடம் வருகிறது. அவர்களின் வீட்டில் ஒரு களைகட்டல் ஆரம்பமாகி, இப்போதே அது புது வீடாக மணத்தது. கழுவுதல், மினுக்குதல் போன்ற காரியங்களே செய்யவேண்டியவையாக இருந்தன.

"பாத்திரங்களெல்லாம் மினுக்கிக் கழுவ வேண்டியெல்லே கிடக்குது. அன்றாடப் பாத்திரங்களை அவள் சறோ கழுவுவாள். பூசைக்கு, கோயிலுக்கெண்டு கிடக்கிறதுகளை நாங்கள்தான் கழுவவேணும். ஜீவி! அந்தப் பெட்டகத்தில இருக்கிற பூசைப் பாத்திரங்களை ஒருக்காக் கழுவி வையம்மா."

புவனாவின் குரல்கேட்டு எழுந்து வருகிற ஜீவி, "நான் கழுவி வைக்க வேணுமெண்டால், எனக்கு 'விம்' சோப் வேணும். உங்கட புளி,சாம்பல் மினுக்கல் வேலை எனக்கு ஒத்துவராது" என்கிறாள்.

"என்னடி பிள்ளை, பாத்திரம் மினுக்கச் சவுக்காரம் வேணுமாமே உவளுக்கு? இஞ்சவிடு. இண்டைக்கு நான் கழுவி வைக்கிறன் எல்லாத்தையும்...! அந்தப் பெட்டகத்தை ஒருக்காத் திறந்துவிடன்"

தனது கட்டிலிலிருந்து எழுந்து வந்த புவனாவின் தாயார் பெட்டகத்தின் அருகே போகிறாள்.

"நீங்கள் ஏனம்மா கஷ்டப்படுகிறியள்? அவள் பிள்ளை ஒரு 'விம்சோப்' வாங்கிக் குடுத்தால் உடன கழுவிப் போடுவாள்" புவனா தாயைத் தடுக்கிறாள். "எடி... இண்டைக்கு ஒரு நாளெண்டாலும் நான் கொஞ்சம் குனிஞ்சு நிமிரலாமெண்டு பாத்தால் விடுகிறாயில்லை. நெடுகலும் தானே உன்னட்ட நான் சுகப்பட்டுக்கொண்டிருக்கிறன். இண்டைக்கு ஆசைக்குக் கொஞ்சம் கஷ்டப்பட்டுப் பார்க்கிறனே..." என்கிறாள் புவனாவின் தாயார்.

பெட்டகத்தைத் திறந்துவிட்டு, "சரியோ அம்மம்மா... பாத்திரங்களை எடுப்பியளோ அல்லது எடுத்துத் தரட்டோ?" என்றாள் ஜீவி.

"இல்லையில்லை. நான் எடுப்பன். இஞ்ச கொஞ்சம் தள்ளு..." என்றபடி குனியும் அம்மம்மாவைப் பார்த்து, "தாங்ஸ் அம்மம்மா" என்று சொல்லியபடி அகன்று போகிறாள் ஜீவி.

அடுக்கப்பட்டிருந்த வெள்ளிக் குத்துவிளக்கு, அடுக்கடுக்கான பாத்திரங்கள், கூஜாக்கள் இவற்றையெல்லாம் எடுத்து வைத்த அம்மம்மாவின் கண்களில், ஓர் ஓரமாக அடுக்கப்பட்டிருந்த பித்தளைப் பாத்திரங்களும் தெரிகின்றன. ஓர் ஆவலோடு அவற்றை நடுப்பக்கத்துக்கு இழுக்கிறாள். பெரும் சத்தத்தோடு இழுபட்டு வந்த தாம்பாளங்கள், வெற்றிலைத்தட்டு, குடம், மூக்குப்பேணி இவற்றைக் காண அவளது மனதில் இன்னதென்று சொல்லமுடியாத ஓர் ஏக்கம் பரவுகிறது.

"என்ர அம்மா எனக்குத் தந்த சீதனச் சாமான்கள்...! எவ்வளவு காலமாச்சு இதுகளைத் தொட்டுப்பார்த்து..."

வயதின் இயலாமையையும் தாண்டி வேகமாய் அவற்றை எடுத்து வெளியே அடுக்கி வைக்கிறாள்.

பல அடுக்குகளாயிருந்த பித்தளைத் தூக்குச் சட்டியும் கூடவே வெளியே வருகிறது.

ஏதோ காரியமாக அந்தப் பக்கம் வந்த புவனா -

"அம்மா... இதுகளையெல்லாம் இப்பேன் எடுக்கிறியள்? நான் சொன்னது அந்தச் சில்வர் சாமான்களையெல்லோ..." என்று சற்றே உரத்ததொனியில் கூறுகிறாள்.

"இல்ல மகள்... இதுகளையும் இண்டைக்கு மினுக்கப் போறன்... என்ர அம்மா, அம்மாச்சி இவையளையெல்லாம் நேரில் பாக்கிறமாதிரிக் கிடக்கடி அம்மா..." மனசுநெகிழ்ந்த, அவளது வார்த்தைகளின் அடியிற் கிடந்த உணர்வுகளைப் புரிந்தவளாக மௌனமாய் அகலுகிறாள் புவனா.

எல்லாவற்றையும்தானே கிணற்றடிக்கு எடுத்துப்போய் புளியும் சாம்பலும் போட்டு மினுக்கிக் கழுவி வைக்கிறாள் அவள். தங்கக் காசுகளாய்த் தகதகக்கின்ற தாம்பாளங்களையும், மூக்குப் பேணியையும், குத்துவிளக்குகளையும் ஆசையோடு நெடுநேரம் பார்த்தபடியிருக்கிறாள். அவளின் கடந்த காலம் அவற்றில் எழுதப்பட்டுக் கிடந்ததா என்ன?

"அய்யோ...என்னா வடிவப்பா!! இதெல்லாம் பெட்டகத்தில் கிடந்ததா? அம்மம்மா என்ன சோக்காய் மினுக்கியிருக்கிறியள்... விடுங்கோ நான் உள்ளுக்க கொண்டுபோய் வைக்கிறன்" என்று தானே அவற்றை எடுத்துப் போகிறாள் ஜீவி. உள்ளே எடுத்துவைத்த பிறகும் அவற்றிலிருந்து பார்வையை அகற்ற விரும்பாதவளாய் அருகில் போய் அமர்கிறாள் அம்மம்மா. பொறிக்கப்பட்டிருந்த அன்னத்தின் அழகை வியந்த ஜீவி யிடம் "உந்தத் தாம்பாளம் எத்தின பேருக்குத் தாலி கூறை ஏந் திப் போகப் பாவிச்சது தெரியுமே? எங்கட அம்மாச்சி தொடக்கம் உன்ர கடைசிச் சித்தி வரைக்கும் இதிலதானே நாங்கள் தாலிகூறை எடுத்துப் போனனாங்கள்"

ஓர் ஆச்சரியத்தோடும் மதிப்போடும் அதைப் பார்க்கிறாள் ஜீவி.

"இஞ்சபார், இந்தப் பித்தளைக் கமண்டலம், என்ர அப்பாவின்ர தகப்பன் காசிக்குப் போய் வரக்குள்ள கொண்டுவந்தது. இந்தப் பெரிய மூக்குப்பேணியில்தான் உன்ர அம்மப்பாவுக்கு நான் முதன்முதலில் பால் கொண்டு போனனான்..."

உணர்ச்சியோடு பேசும் அம்மம்மாவையே ஆதூரம் பொங்கப் பார்த்தபடியிருக்கிறாள் ஜீவி.

இதுவரை தான் மதிப்பறியாமலிருந்த அந்தப் பொருள்களைப் பெருமிதமாய்ப் பார்க்கிறாள், கணினி இயலில் பட்டம் பெற்றுவிட்ட அந்த நவீன நங்கை.

*(இன்னும் மண்சுவடுகள் பதியும்....)*

# அஞ்சல் பெட்டிகளை மதிப்போம்



சர்வதேச மட்டத்தில் அஞ்சல் தினம் கொண்டாடப்படுகின்ற இத்தருணத்தில் (ஒக்ரோபர் 9ஆம் திகதி) அஞ்சல் பெட்டிகளின் நிலைபற்றி சிறிது சிந்திப்பது பயன்தரும்.

இதயங்களின் இணைப்புப்பாலமாக காலங்காலமாக கடமையாற்றுகின்ற அந்தப் பெட்டிகள் அமைதியாக மக்களுக்காகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. அவை ஆற்றுகின்ற பணிக்காக அவற்றை நாம் மதிக்காவிட்டாலும் பரவாயில்லை, அவமதிக்காமல் இருந்தால் அதுவே மேலானது.

அஞ்சல் பெட்டிகளில் விளம்பரங்கள் ஒட்டுவது, வேறு விதங்களில் அவற்றை அசிங்கப்படுத்துவது தவிர்க்கப்படவேண்டிய செயலாகும். சிலர் அதன் மேல் அமர்ந்து பத்திரிகை வாசிப்பதையும், காலால் தாளம் போடுவதையும் அவதானிக்கமுடிகிறது. இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் அண்மையில் நடந்து முடிந்த நல்லூர்த் தேர்த்திருவிழாவின்போது, தெற்கு வீதியில் இருக்கும் சிமெந்தினாலான தபால் பெட்டியின்மேல் ஏறிநின்று வீடியோ படம் பிடித்த செயல் ஒட்டுமொத்த அஞ்சல் சமூகத்தையே அவமதித்ததுபோல் இருந்தது. ஏன் இப்படி நடந்துகொள்கிறார்கள்? இனியாவது அஞ்சல் பெட்டிகளைப் புனித சின்னமாகப் பார்ப்போம். அவற்றின் மதிப்பை மேன்மைப்படுத்துவோம். அவை அன்பைப் பரிமாறும் பெட்டகங்களெனப் புரிந்துகொள்வோம்.

*சிந்திப்போம்! செயல்படுவோம்!*

*மு.க.சிவானந்தம்*
*(அஞ்சல் நலன்விரும்பி).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் வெளியீட்டு விழா

தென்மராட்சிக் கலைமன்ற ஆதரவுடன்
மீசாலை சிவசக்தி சங்கீத நர்த்தனாலயத்தின்
கீர்த்தனாமிர்த சாகரம் மழலைகள் கீதமாலை

**நூல் வெளியீடும்**
**இசை நடன சங்கமமும்**

இடம்:
தென்மராட்சிக் கலைமன்ற கலாசார மண்டபம்
காலம்:
09.11.2008 - மு.ப 8.30 மணி

நூல் ஆசிரியர்:
அ.சி.ஏரம்பமூர்த்தி
இசைநடன ஆக்கம்:
திருமதி புனிதகுமாரி ஈழநேசன்
திருமதி விமலகுமாரி ஸ்ரீரவிகுலன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
-ஏற்பாட்டாளர்கள்

## யாழ் அரசடி விநாயகர் ஆலயம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

### தேவை

எமது ஆலயத்துக்கு கீழ்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளதால் தகுதியானவர்கள் விண்ணப்பிக்கவும்.

1. உதவிப் பிராமண அர்ச்சகர்.
2. பிராமண பரிசாதகர்
3. பல வேலை செய்யக்கூடியவர்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

உங்கள் விண்ணப்பங்களை நேரிலோ தபாலிலோ கீழ்க் காணும் விலாசத்திற்கு 20.11.2008 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.

தலைவர்,
யாழ்.அரசடி விநாயகர் ஆலயம்.
82,மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

## 38 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

தோற்றம்
05
*
03
*
1928



மறைவு
02
*
10
*
2008

**திருமதி குமாரசேகரம் கனகலட்சுமி**

இன்று (08.11.2008) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் எங்கள் அன்புத் தாயின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

லக்கி விடியோ,
இணுவில் கிழக்கு. (சி/555229) குடும்பத்தினர்.

## நினைவலைகளும் நன்றி நவிலலும்



அமரர்
**சோமசுந்தரம் லிங்கேஸ்வரன்**
மலர்வு 28.03.1952
உதிர்வு 09.10.2008

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்தவரும் கனடாவில் அமரத்துவமானவருமாகிய அமரர் சோமசுந்தரம் லிங்கேஸ்வரனது கிரியைகளும், ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளும் நாளை(09.11.2008) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறவுள்ளன. அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக. அன்னரின் பிரிவுச் செய்தி அறிந்து துயருற்று, பல வழிகளிலும் துயர் பகிர்ந்த எமது அன்பு நெஞ்சங்களை, சோகத்தின் மத்தியில், குடும்ப உறவுகளுடன் சேர்ந்து மிக்க நன்றியைத் தெரிவித்து நிற்கின்றோம்.

ரொறென்டோ, கனடா.
தொ.பே.இல: 001 416 665 4962 (79700)
பரமேஸ்வரி(தாய்)
தேவகி(மனைவி).

## காரைநகர் பிரதேச சபைக்கு புதிய கட்டடம்

யாழ்ப்பாணம், நவ.8

காரைநகர் பிரதேச சபையின் தலைமையலுவலகத்துக்குப் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கென உள்ளூராட்சி அமைச்சின் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடையின் கீழ் முதற்கட்டமாக 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (202-29)

## சிறுவர்களுக்கு உதவி

நவாலி, நவ.07

வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவின் ஜே/143, ஜே/147 கிராம சேவையாளர் பிரிவிலுள்ள 2வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் மருத்துவ உபகரணங்களடங்கிய பொதிகள் நேற்று முன்தினம் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன. (202-100)

## இந்துசமயப் பாடப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ.8

யாழ். மாநகராட்சி சைவசமய விவகாரக் குழுவினர் வருடாந்தம் நடத்தும் இந்து சமயப் பாடப்பரீட்சை எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற உள்ளதாகக் குழுவின் தலைவர் மு.செ.சரவணபவ அறிவித்துள்ளார்.

பரீட்சை தினத்தன்று மாணவர்கள் காலை 9.30 மணிக்கு முன்னதாக சமுகமளிக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது. (204-302)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ.8

சாவகச்சேரி பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு தென் மட்டுவில் தேனொளி முன்பள்ளியில் நடைபெறுமென தென்மராட்சிக் கல்விவலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) சு.பாக்கியராசா அறிவித்துள்ளார். (202-207)

## சண்டிலிப்பாய் மக்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் உதவி

நவாலி, நவ.8

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஓலைக்குடிசையில் வாழும் குடும்பங்களுக்குச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் கூரை விரிப்புகளை நேற்று முன்தினம் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கினர்.

சுமார் 1200 குடும்பங்கள் வரை இக் கூரை விரிப்புக்களைப் பெற்றுக் கொண்டனர். (202-100)

## சமையல் ஆள் தேவை

சகலவிதமான பிரியாணி, பிறைற்றைஸ், சிக்கன், அசைவ உணவுகள் தயாரிக்கக்கூடிய ஆண் சமையல்காரர் தேவை. உடன் நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

அருண் ஐஸ்கிறீம்,
இல: 133, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

L.Gமியூசிக் செற்அப் L.M1520 (பெட்டியுடன்) விற்பனைக்குண்டு.
50, K.K.S. வீதி, கொக்குவில்.
T.P 021 222 8063.

## மணமக்கள் தேவை

1976 ஆம் ஆண்டு, கத்தோலிக்க மதத்தை உடைய B.B.A மணமகனுக்கும், படித்த அழகான மணமகளும், 1976ஆம் ஆண்டு, 12 இல் செவ்வாய், 20 3/4 பாவமுடைய, கனடா பிரஜா உரிமைபெற்ற மணமகனுக்கும், 1979 ஆம் ஆண்டு, கத்தோலிக்க மதத்தை உடைய, மணமகனுக்கும் உள்நாடு or வெளிநாட்டிலுள்ள மணமகனும் மேலும் டாக்டர்கள், இஞ்சினியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், லிகிதர்கள், வர்த்தகர்கள், வெளிநாட்டில் பிரஜா உரிமைபெற்ற மணமக்களும் செவ்வாய்க்குற்றமுள்ள, பாவம் கூடிய, குறைந்த தகுதியான மணமக்களும், விவாகரத்துச் செய்யப்பட்ட வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் உள்ள மணமக்களும் எம்மிடமுள்ளனர்.

தொடர்பு :-கமலக் கண்ணன் திருமண சேவை,
இல:171/7, மனோன்மணி
அம்மன் வடக்கு வீதி, நல்லூர்.

**விற்பனைக்கு** Van (L300டீசல்), Delica Van (பெற்றோல்-மிகநல்ல நிலையிலுள்ளது), CD set (5CD Panasonic), VCD, P4 Computer (Fullset), Air Compressure, Gas cooker, Gas அடுப்பு (சாப்பாட்டுக் கடைக்குரியது), டிஸ் அன்ரனா [illegible] நல்லின அடு என்பன விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:S. [illegible], No.18, [illegible],
யாழ்ப்பாணம். T.P: 9201

## 23 ஆவது ஜனன நாளில் நெஞ்சகலா நினைவுகள்

08.11.1985



**அமரர் சகாதேவன் நிலக்ஷன்**

*(Journalism Award Winner for Excellence - 2007)*

எங்கள் உயிரோடும் உணர்வோடும்
எல்லா நினைவுகளோடும்
நீக்கமறக் கலந்து நிறைந்துள்ள எம் நிறை நிலா

உன்னுடைய தாகம்
உன் மதிப்பைத் தீர்மானிக்கிறது
எங்களுடைய நினைவுகளோ உன்னிடமே சங்கமமாகிறது

எம் இதய வீட்டைத் துறந்து எம்மை விட்டு நீ சென்ற பின்
எந்நேரமும் உன் நினைவுகளுடன்
ஏங்கி வாழும் உன் உறவுகள் நாம்

47, புகையிரத நிலைய வீதி,
கொக்குவில்.
எந்நேரமும் உம்மை நினைந்துருகும்:
பாசமுள்ள அப்பா, அம்மா, அண்ணா.

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னக்குட்டி
**சண்முகராசா**
(காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்)

மண்ணில் 01.12.1936
விண்ணில் 14.11.2002

ஆறு நாள்கள்போல் உள்ளதப்பா-ஆனால்
ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டதப்பா
ஆறு ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும்
ஆறாது எம் துயரம்.

தகவல்:
இளவாலை வடக்கு,
வேரவல்.
ச.சிவபாலகிருஸ்ணன்
(மகன் - ராஜன்)

## 10ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு
03
*
10
*
1945

உதிர்வு
29
*
10
*
2008

**அமரர் அருணாசலம் ஸ்ரீகாந்தன்**
(இளைப்பாறிய அதிபர்)

எமது குடும்பத் தலைவர் திடீரென சுகவீனமுற்ற வேளையில் அவருக்கு மருத்துவ சிகிச்சை வழங்கிய யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் ஏனைய ஊழியர்களுக்கும்,

எமது குடும்பத் தலைவர் சிவபதமடைந்தபோது துயரில் பங்கு கொண்ட உற்றார்,உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், மருத்துவ சமூகத்தினர், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அரிமாக்கழகத்தினர் மற்றும் தொலைபேசி, பத்திரிகை, மின்னஞ்சல், தந்திமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்,

இறுதிக்கிரியைகளின்போது சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்கள், அஞ்சலி உரை நிகழ்த்தியவர்கள், மலர்வளையம் சாத்தியோர்கள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டவர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்.

கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில் சந்தி, கொக்குவில். (79682) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காந்தி சொன்னதைத்தான் பிரபாகரன் செய்கின்றார்



## குமுதத்துக்கு அளித்த பேட்டியில் சீமான் சீறல்

"விடுதலைப் புலிகள் இயக்கம் ஓர் இனத்தின் விடுதலைக்கான இயக்கம். தமிழீழ மண்ணில் நடப்பது காந்திய வழியிலான போர்தான். 'இனப் படுகொலை நடப்பதைப் பார்த்துக்கொண்டு அகிம்சையுடன் இருக்கமுடியாது. அதை அடக்க எந்த விதமான ஆயுதத்தையும் எடுக்கத் தயார்' என காந்தி அன்று சொன்னதைத்தான் பிரபாகரன் இன்று செய்கிறார்."

- இவ்வாறு இந்திய இறையாண்மைக்கு எதிராகப் பேசினார் எனக் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலையாகி வெளியே வந்த தமிழ் இயக்குநர் சீமான், 'குமுதம்' சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியில் உள்ளக் குமுறலுடன் கூறியுள்ளார்.

அந்தப் பேட்டியின் விவரம் வருமாறு-

கே - சென்னையில் நடிகர்கள் மேற்கொண்ட உண்ணாவிரதம் குறித்து உங்கள் கருத்து என்ன?

ப - ஈழத்தமிழர்களைக் காக்கபல்வேறு இயக்கங்கள், கட்சிகள் போராடும் போது, தங்களது திரைப்பட வர்த்தகத்தை விரிவடையச் செய்ததில் ஈழத் தமிழர்களுக்கும் பங்குண்டு என்பதை திரைப்பட நடிகர்கள் மறக்கவில்லை.

## நடுத் தெருவிலே தமிழ்ப் பெண்ணை கடித்துக் குதறுகிறான் சிங்களவன்

அதற்கு நன்றிக்கடனாக இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். இந்த நேரத்தில் ஈழத்தமிழர்களின் உரிமைக்காக யார் குரல் கொடுத்தாலும் அது பாராட்டுதலுக்குரியதே. உண்ணாவிரதத்தில் பங்கேற்ற கமல், ரஜினி உள்ளிட்ட முக்கிய நடிகர்கள் அனைவருமே தங்கள் உணர்வைச் சரியாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

'அடிப்படை உரிமைகள் மறுக்கப்படும்போது தீவிரவாதம் எழுந்தே தீரும்' என கமல் கூறியமை சரியான வார்த்தை. 'சர்வதேச இராணுவ பலத்தை வைத்துக்கொண்டு முப்பதாண்டுகளாகப் போராடியும் வெற்றி முடியவில்லையென்றால், உங்கள் தோல்வியை ஒப்புக்கொள்ளுங்கள்' என ரஜினி கூறியதும் சரியானதே. ரஜினியின் பார்வை இந்தியாவுக்கு வரவேண்டும். அதாவது, ரஜினியின் கருத்தை இந்தியா உணரவேண்டும் என்பதே என் விருப்பம். தமிழர்களின் உணர்வை இந்த உண்ணாவிரதம் சரியாக வெளிப்படுத்தியுள்ளது. நடிகர்களுக்கு சமூக அக்கறை இருப்பதை நிரூபித்திருக்கிறது.'


கே - ரஜினியின் பார்வை இந்தியாவுக்கு வேண்டும் என்கிறீர்கள். அப்படியென்றால், இலங்கைப் பிரச்சினையில் இந்திய நிலைப்பாடு குறித்து என்ன கருதுகிறீர்கள்?

ப - ஒருங்கிணைந்த இலங்கை மீது இந்தியாவுக்கு ஏன் அவ்வளவு அக்கறை எனப் புரியவில்லை. இலங்கையில் தமிழீழம் மலர்ந்துவிடக் கூடாது என்பதை முடிவு செய்துவிட்டு, அதனடிப்படையில் இந்தியா செயல்படுகிறது. இலங்கையில் இரு தரப்பினருக்கிடையே பிரச்சினை. அப்படியிருக்கையில் இரு தரப்பினரிடையேயும் பேசுவதுதானே நியாயம். மஹிந்த ராஜபக்ஷவையும் அவரது ஆதரவாளர்களையும் வரவேற்கிறார்கள், பேசுகிறார்கள். ஆனால் ஏன் தமிழீழத்தைச் சேர்ந்தவர்களிடம் பேசுவதில்லை? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த எம்.பி.க்களிடமாவது பேசலாமே.

இலங்கையைச் சேர்ந்தவர்களுக்கு இந்தியாவில் இராணுவப் பயிற்சி கொடுக்கிறார்கள். இது குறித்துக் கேட்டால், பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கும் இந்தியாவில் பயிற்சி கொடுப்பது வழக்கம்தான் என்கிறார்கள். அப்படியானால், பாகிஸ்தானைச் சேர்ந்தவனுக்கும் சீனாவைச் சேர்ந்தவனுக்கும் பயிற்சி கொடுப்பீர்களா? அவர்களுக்குக் கொடுப்பதும் சிங்களவனுக்குக் கொடுப்பதும் ஒன்றுதான். இலங்கைப் பிரச்சினைக்கு இராணுவத்தின் மூலம் தீர்வு காண முடியாது என்று சொல்கிறீர்கள். அப்படியிருக்கையில் ஏன் இராணுவ உதவி செய்கிறீர்கள்? நீங்கள் கொடுத்த ஆயுதத்தை அவன், தமிழனை நோக்கித்தானே பிரயோகப்படுத்துகிறான். செஞ்சோலையில் குழந்தைகள் கொல்லப்பட்டபோது சிறு வருத்தம் கூட இந்தியா தெரிவிக்கவில்லையே. மனிதநேயம் இங்கு மரித்துப் போயிற்றா?

சொந்த நாட்டில் ஐந்து லட்சம் தமிழ் மக்களை அகதிகளாக சிறைப்பிடித்து வைத்திருக்கிறது இலங்கை. தமிழர்கள் வாழும் பகுதிக்கு பொருளாதாரத் தடை விதித்திருக்கிறது. அடிப்படைத் தேவைகள் ஏதும் செய்து தரப்படவில்லை. இதை ஏதும் கண்டிக்காத ஒரு நாடு, எப்படி மனிதநேயம் மிக்க நாடாக இருக்கமுடியும்? பொற்கோயிலில் நடந்த இராணுவ நடவடிக்கைகளை சீக்கியர்கள் மறக்கவும் மாட்டார்கள், மன்னிக்கவும் மாட்டார்கள் என்கிறார் மன்மோகன். அதேபோலத்தான் இலங்கையில் இந்திய அமைதிப்படை தமிழர்களுக்குச் செய்த அட்டூழியத்தை ஒருபோதும் தமிழன் மறக்கமாட்டான். மனித நேயத்தைப் புதைத்துவிட்டு தமிழர்களுக்கு பச்சைத் துரோகம் செய்கிறது இந்தியா. இந்தியத் தலைமை, தமிழினத்துக்கு எதிராக உள்ளது. இங்கு நடப்பது இந்திய அரசல்ல.

கே- தடைசெய்யப்பட்ட இயக்கத்துக்கு ஆதரவாக நீங்கள் தொடர்ந்து பேசி வருகிறீர்களே?



ப - காந்தியைச் சுடப்பட்டபோது ஆர்.எஸ்.எஸ். தடைசெய்யப்பட்ட இயக்கம். அப்போது யாரும் பேசவில்லையா? தடைசெய்யப்பட்ட ஓர் இயக்கத்திற்கு ஆதரவாகப் பேசக்கூடாது என்றால், அது சர்வாதிகார நாடாகத்தான் இருக்கமுடியும். இந்தியா சர்வாதிகார நாடு எனச் சொல்வீர்களேயானால் நான் ஏதும் பேசாமல் இருக்கத் தயார். ஆனால், இந்த ஜனநாயக நாடு. தடைசெய்யப்பட்ட இயக்கத்துக்கு ஆதரவாகப் பேச ஜனநாயக நாட்டில் உரிமை உண்டு என நான் நம்புகிறேன்.

கே- புலிகள் தொடர்ந்து போரில் ஈடுபட்டு வருகிறார்களே?

ப - அவர்கள் போரிடவில்லை. சர்வதேச இராணுவ உதவிகளைப் பெற்று தங்களைத் தாக்கும் இலங்கை இராணுவத்திடம் இருந்து தற்காத்துக் கொள்ளவே போராடிக்கொண்டிருக்கிறார்கள். 'ஜெயவர்த்தன உண்மையான பௌத்தனாக இருந்திருந்தால், நாங்கள் ஆயுதம் தூக்கவேண்டிய அவசியம் வந்திருக்காது' என்பார் பிரபாகரன். அதுதான் உண்மை. தமிழர் பகுதியில் இலங்கை இராணுவம் ஆறாயிரம் முறை குண்டு வீசியிருக்கிறது. ஒவ்வொரு குண்டும் ஆயிரம் கிலோ எடை கொண்டது. சர்வதேச போர் முறைப்படி பாடசாலைகள், வழிபாட்டுத்தலங்கள், சிறார்கள், கர்ப்பிணிப் பெண்கள், நூலகம் போன்றவற்றின் மீது தாக்குதல் நடத்தக்கூடாது என உள்ளது. இதில் எதையும் இலங்கை இராணுவம் கடைப்பிடிக்கவில்லை. இதை ஏன் யாரும் கண்டிக்கவில்லை?

ஆயுதத்தைப் பயன்படுத்தி, அச்சுறுத்தி தமிழ்ப் பெண்களை நடுத்தெருவில் பாலியல் சித்திரவதைக்கு உள்ளாக்குகிறான் சிங்களவன். அதைத் தடுக்க வேண்டுமானால், அவன் பயன்படுத்திய அந்த ஆயுதத்தை எடுப்பதைத் தவிர வேறு எது தீர்வாக இருக்கமுடியும்? அங்கு விடுதலைப் புலிகள் நடத்துவது வீரஞ்செறிந்த அறப்போர். மரணத்தை முன்னிறுத்தி விடுதலைப் போரில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதேநேரத்தில் புலிகள், மனிதநேயம் கொண்டவர்கள். இந்திய அரசின் வேண்டுகோளை ஏற்றும் நடப்பவர்கள். ஆனையிறவு போரில் நாற்பதாயிரம் சிங்களப் படைவீரர்களை புலிகள் சுற்றிவளைத்தார்கள். இந்தியா போர் நிறுத்தம் செய்யக் கேட்டுக்கொண்டதால், அவர்கள் போர்நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். இலங்கை என்றைக்காவது இப்படி மனிதநேயத்தை வெளிப்படுத்தியதுண்டா?

கே- தமிழீழம் கேட்பதுதானே பிரச்சினை?

ப- தமிழீழம் கேட்பதை யார் தீர்மானிப்பது? அங்கு வாழும் தமிழ் மக்கள்தானே முடிவு செய்யவேண்டும். அவர்களிடம் யாராவது கருத்துக் கணிப்பு நடத்தினார்களா? இல்லையே! வாடகைக்கு வந்தவன் வீட்டைக் காலி செய்யமாட்டேன் என்றால் எப்படி பொறுத்துப் போகமுடியும்?

கே - விடுதலைப்புலிகள் இயக்கம் தீவிரவாத இயக்கமாகத்தானே கருதப்பட்டு வருகிறது?

ப - தீவிரவாதம், பயங்கரவாதம் என்பதைத் தீர்மானிப்பதெல்லாம் மக்களும் காலமும்தான். நான்கைந்து அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் அறையில் உட்கார்ந்து கொண்டு அதைத் தீர்மானிக்கமுடியாது. நெல்சன் மண்டேலாவை எந்த நாடாளுமன்றம் தீவிரவாதி என்றதோ, அதே நாடாளுமன்ற வளாகத்தில் அவர் சிலை திறக்கப்பட்டது. எனவே காலம்தான் தீவிரவாதமா, பயங்கரவாதமா என்பதைத் தீர்மானிக்கும். இரு நாடுகளுக்கிடையே நடக்கும் போரில் பயன்படுத்த வேண்டிய ஆயுதங்களை, உள்நாட்டு போராட்டக் குழுவான புலிகள் மீது இலங்கை இராணுவம் பயன்படுத்துகிறது. இதற்கு பல நாடுகளும் ஆயுதங்களைக் கொடுக்கின்றன. கொத்துக்கொத்தமாக ஓர் இனம் மடிய அது உதவுகிறது. இது ஒரு சர்வதேச பயங்கரவாதம். இதைக் கண்டிக்கத் துப்பில்லாத எந்த நாட்டினமும் புலிகளைத் தீவிரவாதிகள் எனச் சொல்ல அருகதையற்றது.

புலிகள் இயக்கம் ஓர் இனத்தின் விடுதலைக்கான இயக்கம். தமிழீழ மண்ணில் நடப்பது காந்திய வழியிலான போர். 'இனப் படுகொலை நடப்பதைப் பார்த்துக்கொண்டு அகிம்சையுடன் இருக்கமுடியாது. அதை அடக்க எந்த விதமான ஆயுதத்தையும் எடுக்கத் தயார்' என காந்தி சொல்வார். காந்தி சொன்னதைத்தான் பிரபாகரன் செய்கிறார். 'உலகின் எந்த மூலையில் ஒரு நாடு விடுதலைக்காகப் போராடுகிறது என்றாலும், அதை இந்தியா ஆதரிக்கும்' என பிரகடனப்படுத்தினார் நேரு. ஆனால் இந்தியா ஏன் தமிழீழ விடுதலையை ஏற்க மறுக்கிறது எனத் தெரியவில்லை.

கே - உண்ணாவிரதத்துக்கு வந்த நடிகர் எஸ்.வி.சேகர் இலங்கையின் உள் விவகாரங்களில் இந்தியா தலையிட

### இந்தியச் செய்திகள்

முடியாது எனக் கூறியிருக்கிறாரே?

ப - எஸ்.வி. சேகரை சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுத்த மக்களை எண்ணித்தான் வேதனைப்பட வேண்டியிருக்கிறது. ஈழத்தின் உள்நாட்டுப் பிரச்சினையில் ராஜீவ்காந்தி தலையிட்டதால்தான் இன்றைக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. நானூறு தமிழக மீனவர்கள் சுடப்பட்டார்களே. அது எந்த நாட்டுப் பிரச்சினை என்கிறார் சேகர். குறைந்தபட்சம் கருத்துச் சொல்லியிருக்க வேண்டியது தானே! ஈராக்கில் அமெரிக்கா தலையிட்டபோது சேகர் கேட்டிருக்கலாமே. அவருக்குப் புரிதல் அவ்வளவுதான்.

கே - சிறையில் இருந்த அனுபவம்?

"விருப்பத்துடனும் அர்ப்பணிப்புடனும் செய்த பணி அது. சிக்கல் வரும் எனத் தெரியும். அதற்காகச் சொல்ல வேண்டியதைச் சொல்லாமல் இருந்தால்



என்னை என் தமிழ்ச் சமுதாயம் மன்னிக்காது" - என்று ஆவேசத்தோடு முடித்துக்கொண்டார் சீமான்.

### இயக்குநர் அமீர்

கே- சிறை அனுபவம் எப்படி?

ப - தவறு செய்துவிட்டு சிறைக்குச் சென்றிருந்தால் பயம் இருக்கும். தமிழர்களுக்காக, என் இனத்துக்காகச் செல்கிறேன் என்ற பெருமைதான் இருந்தது. எனவே சிறை குறித்தான கவலை ஏதும் இல்லை. என்றாலும், இது புதுமாதிரியான அனுபவம். ஒரு முகாமிற்குச் சென்றது போலிருந்தது. பாதுகாப்பு கருதி எங்களை தண்டனைக் கைதிகளோடு வைத்திருந்தார்கள். நாங்கள் எந்தச் சலுகைகளும் கேட்கவில்லை. முதலில் தரையில் படுத்தோம். எலி தொந்தரவு காலை கடிக்கும் அளவு வந்துவிட்டது. பிறகு கட்டில் கொடுத்தார்கள். காலையில் சப்பாத்தி - சட்னி, மதியம் அரிசிச் சோறு தந்தார்கள். இரவில் பெரும்பாலும் நாங்கள் பழங்கள் சாப்பிட்டுக்கொள்வோம் - என்றார் அமீர்.

## புலிகளே தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு: அவர்களால் மட்டுமே தமிழீழம் மலரும்!

### ராமதாஸ் தெரிவிப்பு

சேலம், நவ.8

இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி தமிழக சட்டப் பேரவையில் அனைத்துக் கட்சிகளும் இணைந்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் - என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் கூறியுள்ளார்.

மேலும் இலங்கையில் தமிழ் ஈழத்தை உருவாக்க விடுதலைப் புலிகளால் மட்டுமே முடியும் என்பது எனது கருத்து; அதே சமயத்தில் தமிழர்களின் உரிமைகளுக்காகப் பாடுபட்டு வரும் இயக்கத்தினர் புலிகள் என இங்கு ஏற்க மறுப்பதால்தான் பிரச்சினை ஏற்படுகிறது. அவர்களை தீவிரவாதிகள் என்ற கோணத்தில் பார்ப்பது சரியல்ல - என்றும் அவர் தெரிவித்தார்.

சேலத்தில் செய்தியாளர்களுக்கு நேற்றுமுன்தினம் அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு-

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக முதல்வர் கருணாநிதிக்கு ஒத்துழைப்புத் தர ஓரிரு கட்சிகள் தவிர மற்றவை தயாராக உள்ளன.



இதுபோன்ற சந்தர்ப்பம் முதல்வருக்கு இனிமேல் கிடைக்காது. "தனது பலம் குறித்து முதல்வர் கருணாநிதி அறியாமல்' உள்ளார். இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வேண்டுமென அவர் வலியுறுத்தினாலே பயன் கிடைக்கும்.

இதற்கு சட்டப் பேரவையில் அனைத்துக் கட்சிகள் ஆதரவோடு நிறைவேற்றும் தீர்மானம் உறுதுணையாக அமையும். அனைத்துக் கட்சிக் கூட்டத்தை மீண்டும் கூட்டி இது குறித்து முடிவெடுக்க வேண்டும். அ.தி.மு.க., ம.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளும் இக்கூட்டத்தில் பங்கேற்று ஆதரவு தரவேண்டும்.

இப் பிரச்சினையில் அ.தி.மு.க. பொதுச்செயலர் ஜெயலலிதாவும் ஒத்துழைப்புத் தரவேண்டும். புலிகள் குறித்து மாற்றுக் கருத்து இருந்தாலும் அதை ஒதுக்கி விட்டு இலங்கையில் குண்டுவீச்சுக்குப் பலியாகும் தமிழர்களின் நிலை கருதி போர் நிறுத்தம் தேவையென அவரும் வலியுறுத்த வேண்டும்.

1998இல் பா.ம.க., அ.தி.மு.க. கூட்டணி இருந்தது. அப்போதும் இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் நடந்தன. அப்போது அனைத்துக் கட்சிகள் எம்.பி.க்கள் சார்பில் பிரதமரிடம் அளிக்கப்பட்ட மனுவில் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. அந்த மனுவில் ஜெயலலிதா, வைகோ, சுப்பிரமணியன் சுவாமி ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

இலங்கையில் அன்றைய நிலைதான் தற்போதும் நீடிக்கிறது. ஏறத்தாழ இரண்டரை லட்சம் தமிழர்கள் அங்கு வீடிழந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்ள தவிக்கின்றனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து பிரதமருக்கு ஆலோசனை கூற இரு தமிழர்களை ஆலோசகர்களாகவும் இலங்கைத் தூதராக ஒரு தமிழரையும் நியமிப்பது நல்லது. [illegible] இதற்கு இந்நடவடிக்கை உதவும் - என்றார்.

## தமிழரைக் காக்க ஆயுதம் ஏந்துவோம்! மீண்டும் வைகோ ஆவேசமாக முழக்கம்

சென்னை, நவ. 8

தமிழ் மக்களைக் காக்க நாங்களும் ஆயுதம் ஏந்துவோம் - என்று விடுதலையாகி வெளியே வரும்போது - சிறை வாசலிலேயே ஆவேசமாக முழக்கமிட்டார் வைகோ.

புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, அவைத் தலைவர் கண்ணப்பன் இருவரும் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டனர். நீதிமன்ற வாசலில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கையில் வைகோ கூறியவை வருமாறு-

இலங்கையில் தமிழ் மக்கள், துப்பாக்கிக் குண்டுகளால் சாகிறார்கள். அதற்கு மன்மோகன்சிங் அரசும் மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தி.மு.கவும்தான் பொறுப்பேற்க வேண்டும். தமிழக மக்களின் கோபத்திலிருந்து தப்பிக்கவும், பிரச்சினையைத் திசை திருப்புவதற்காகவும் தமிழக அரசு நாடகமாடுகிறது.

போர் நிறுத்தம் செய்ய வேண்டும். இல்லையென்றால் 2 வாரங்களில் தி.மு.க. எம்.பிக்கள் ராஜினாமாச் செய்வார்கள் என்று முதல்வர் கூறினார்.



ஆனால், போரை இந்தியா நிறுத்துமாறு இந்தியா சொல்லவில்லை என்றும் இந்திய அரசு எல்லா உதவிகளையும் செய்கிறது என்றும் மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். போரை நிறுத்தாவிட்டால், பொருளாதார தடை விதிப்போம் என்று இந்திய அரசு கூறினால் இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்படும். அந்தத் தைரியம் இந்திய அரசுக்கு இல்லை.

பிரதமரை 10 முறை நேரில் சந்தித்தும், 15 தடவை கடிதம் மூலமும் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து தெரிவித்துள்ளேன். ஆனால், இங்கிருந்து இலங்கைக்கு ஆயுதம் கொடுக்கிறார்கள். நாங்களும் தமிழ் மக்களைக் காப்பாற்ற ஆயுதம் ஏந்துவோம் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவுடன் வணிக உறவை மேம்படுத்த மலேஷியா முயற்சி

கோலாலம்பூர், நவ. 08

பல ஆண்டுகள் பேச்சுகள் நடத்தியும் ஏற்படாத சுயேச்சை வணிக உடன்பாடு, அமெரிக்காவின் புதிய நிர்வாகத்தில் சாத்தியப்படும் என்று மலேசியா நம்பிக்கை கொண்டிருக்கிறது.

''முந்திய நிர்வாகத்தைவிட புதிய நிர்வாகத்தில் ஒரு சிறப்பான ஏற்பாட்டைச் செய்து கொள்ள முடியும் என்று நம்பிக்கை கொண்டிருக்கிறோம்'' என மலேஷியப் பிரதமர் அப்துல்லா அகமட் படாவி கூறியுள்ளார்.

''வணிகப் பெருக்கத்தை உறுதிப்படுத்திக்கொள்ள அமெரிக்கர்கள் எங்களின் நாட்டைப் போன்ற ஆசியான் நாடுகளுடன் தொடர்புகளை வளர்த்துக்கொள்ள விரும்புகிறார்கள்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க - மலேஷிய சுயேச்சை வணிகப் பேச்சுகள் மார்ச் 2006 இல் தொடங்கின. ஆனால் மலேஷியாவின் சமுதாய திருத்தக் கொள்கை உட்பட சில காரணங்களால் அப்பேச்சுகள் தேக்கமடைந்துள்ளன.

''பூமிபுத்ராக்களுக்கு சலுகை காட்டும் மலேஷிய அரசின் குத்தகைகளைப் பெறுவதில் அமெரிக்கத் தரப்பு ஆர்வம் காட்டுகிறது. சுயேச்சை வணிக உடன்பாடு காண்பது ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பராக் ஒபாமாவின் நிர்வாகம் செயற்படுத்தும் கொள்கைகளைப் பொறுத்திருக்கும்'' என்று துணைப் பிரதமர் நஜிப் அப்துல் ரசாக் தெரிவித்துள்ளார்.

''புதிய ஜனாதிபதியின் கொள்கைகளை அறிந்துகொள்ள விரும்புகிறோம். சுயேச்சை வணிக பேச்சுகள், நடப்பு ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் நிர்வாகத்தில் நிறைவுபெறும் என்று நாம் நம்பவில்லை'' என்றும் நஜிப் கூறியுள்ளார்.

''உலகுக்குத் தேவைப்படுவது கூடுதல் உதவி அல்ல. நேர்மையும் நியாயமும் நிறைந்த ஒரு சுயேச்சை வணிக அரசுதான். இதை அமெரிக்கா உணர வேண்டும்'' என்றும் நிதி அமைச்சரும் துணைப் பிரதமருமான நஜிப் கூறியுள்ளார்.



சீனாவின் தலைநகரான பீஜிங்கில் நடைபெற்ற தட்பவெட்ப மாறுதலால் ஏற்படும் சீர்கேடுகள் தொடர்பான கருத்தரங்கில் சீனப் பிரதமர் வென்ஜியாபோ உரையாற்றுகிறார்.

# மூன்று தலிபான் போராளிகள் பாகிஸ்தான் அரசால் விடுவிப்பு

தலிபான் கொமாண்டர் மௌலவி ரபியுதீன் உட்பட, மூன்று தலிபான் போராளிகள் பாகிஸ்தான் அரசால் விடுதலை செய்யப்பட்டார்கள். ரபியுதீன் பாகிஸ்தான் தலிபான் தீவிரவாத அமைப்பின் தலைவர் பைத்துல்லா மெசூட்டிற்கு நெருக்கமானவர் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

பாகிஸ்தானின் வடமேற்கு மாவட்டமான ஹங்குவில், இம் மூவரும் ஜூலையில் பாகிஸ்தான் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டிருந்தனர். தங்களால் கடத்தப்பட்ட 10 இராணுவ வீரர்களை, புதன் கிழமை தலிபான்கள் விடுதலை செய்தார்கள். அவர்களுக்கு ஈடாகவே, மூன்று தலிபான் போராளிகள் விடுவிக்கப்பட்டார்கள் என்றும் அதிகாரிகள் விளக்கினார்கள்.

விடுவிக்கப்பட்ட 10 இராணுவ வீரர்களில் ஏழுபேர் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள். மூவர் எல்லைப்புற துணைப்படையைச் சேர்ந்தவர்கள் என, ஹங்கு மாவட்ட அதிகாரி கான் அப்சால், பி.பி.சி. செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

தலிபான் கொமாண்டர் மௌலவி ரபியுதீனை விடுதலை செய்யக்கோரி, தலிபான்கள் வலியுறுத்தி வந்துள்ளார்கள். இக்கோரிக்கையை வலியுறுத்தும் பொருட்டு அவர்களால் டசின்கணக்கான அதிகாரிகள் கடத்தப்பட்டுள்ளார்கள். கடத்தப்பட்டவர்களில் மூவர் சிரச்சேதம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

# ஐ.நாவின் புதிய நீதிபதிகள்

ஐ.நா. சபையின் பாதுகாப்புச் சபையும் பொதுச் சபையும் இணைந்து நீதிக்கான சர்வதேச நீதிமன்றத்துக்கு ஐந்து புதிய நீதிபதிகளை நியமனம் செய்துள்ளன.

உலகின் சர்வ வல்லமை படைத்த நீதிமன்றமாக ஐ.நா. சபையின் கீழ் இயங்கும் நீதிக்கான சர்வதேச நீதிமன்றம் உள்ளது.

இந்த நீதிமன்றத்தின் புதிய நீதிபதிகளாக பிரேசில் , பிரிட்டன், பிரான்ஸ், ஜோர்தான், சோமாலியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஐந்து நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கோஸ்டாரிகாவுக்கான ஐ.நா. சபையின் தூதுவர் ஜோர்ஜ் உர்பினா இந்த நீதிபதிகளின் நியனம் பற்றி அறிவித்தார். இவர்களின் பதவிக்காலம் 9 ஆண்டுகள் ஆகும். ஒல்லாந்திலுள்ள 'தி ஹேக்' என்னுமிடத்தில் இந்த நீதிமன்றம் அமைந்துள்ளது.

# ஜமெய்க்காவை மிரட்டும் பலோமா புயல்

டெகுசிகல்பா, நவ. 08

அமெரிக்காவில் ஏற்படும் புயல்களுக்கு விஞ்ஞானிகள் பெண்களின் பெயர்களைச் சூட்டுவது வழக்கம். இந்தமுறை டெகுசிகல்பா அருகே ஏற்பட்டுள்ள புயலுக்கு பலோமா என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

மணிக்கு 75 மைல் வேகத்தில் வீசிவரும் இந்தப் புயல் கியூபா அருகே உள்ள கேமேன் தீவுகளின் கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் அருகே உள்ள ஜமெய்க்கா வாசிகளை பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லும்படி அரசு அறிவித்துள்ளது.

கேமேன் தீவுகளைச் சேர்ந்த அதிகாரி கர்ட் டிபெட்ஸ் கூறுகையில், அவ்வப்போது தாக்கிவரும் புயல்களால் இயல்வு வாழ்க்கை பாதிக்கப்பட்டாலும் உதவிகளைக் கோர முடியாமல் இருக்கின்றோம். கடும் மழை காரணமாக இங்கு நிலைமை மோசமடைந்துள்ளது எனக் கூறியுள்ளார். 19 கிலோமீற்றர் வேகத்தில் பலோமா புயல் ஜமெய்க்காவை நெருங்கி வருகிறது.

# பூட்டான் அரசராக 28 வயது இளைஞர்

திம்பு, நவ. 08

இமயமலை அடிவாரத்தில் உள்ள பூட்டானின் அரசராக 28 வயது இளைஞர் முடிசூடினார்.

தலைநகர் திம்புவில் வியாழக்கிழமை நடைபெற்ற ஆடம்பரமான நிகழ்ச்சியில் பூட்டானின் 5ஆவது அரசராக ஜிக்மே கேசர் நாம்கியேல் வாங்சுக் முடிசூடிக்கொண்டார்.

தற்போது முடிசூடியுள்ள இளம் அரசர் ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் படித்தவர். தற்போது உலகில் பதவி வகிக்கும் இளம் வயது அரசர் இவர்தான்.

தங்க சிம்மாசனத்துக்கு அருகில் உள்ள அறையில் புத்த மதப்படி சடங்குகள் நடத்தப்பட்டன.

இதுவரை அரசராக இருந்த ஜிக்மே சிங்கே வாங்சுக் அரச பதவியை தனது மகனிடம் ஒப்படைத்தார்.

பூட்டானில் சுமார் 6 லட்சம் பேர் வசிக்கின்றனர். அங்கு வசிக்கும் வெளிநாட்டவர்கள் 37 ஆயிரம் பேர். அதில் இந்தியர்கள் பெரும்பான்மையினர். பூட்டான் எப்போதுமே காலனி ஆதிக்கத்தின் கீழ் இருந்ததில்லை.

ஒரு நூற்றாண்டுக்கு முன் பூட்டானில் வாங்சுக் பரம்பரையின் ஆட்சி ஏற்பட்டது. இதுவரை அரசராக இருந்த ஜிக்மே சிங்கே வாங்சுக் பூட்டானில் மக்களாட்சியை மலரச் செய்வதற்காக 2006இல் தனது அரச பதவியைத் துறந்தார்.

அரசர் பதவியைத் துறந்தாலும் அவர்தான் நாட்டுக்கு உந்துசக்தியாக இருப்பார் என பிரதமர் தின்லே கூறினார். ஜனநாயகம் நீண்ட காலம் தழைத்தோங்க அவர் உறுதுணையாக இருப்பார் எனவும் தின்லே கூறினார்.

அரசர் முடிசூட்டு நிகழ்ச்சியையொட்டி 1000 குல்ட்ரம் (பூட்டான் செலாவணி) நோட்டுக்களை அரசு வெளியிட உள்ளது. புதிய அரசர் முடிசூடியதைக் கொண்டாட நவம்பர் 6 முதல் ஒரு வாரத்துக்கு அரசு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொண்டாட்டங்கள் 42 நாள்கள் நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## உலக அரங்கில்

# ரஷ்யாவில் குண்டுவெடிப்பு 8 பேர் பலி; 20 பேர் காயம்

ரஷ்யாவின் காகசுஸிலுள்ள விளாடி கவ்காஷ் என்னுமிடத்தில், மினிபஸ் ஒன்று குண்டு வெடிப்பில் சிக்கியது. இதில் எட்டுப்பேர் கொல்லப்பட்டனர். இருபதுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

மக்கள் நடமாட்டம் மிகுந்த சந்தையை அடுத்துள்ள பஸ்தரிப்பு நிலையத்தில் இக்குண்டுவெடித்தது. பயணிகள் பஸ்ஸிலிருந்து இறங்கிக்கொண்டிருந்த சமயம், பயங்கர சத்தத்துடன் இக்குண்டு வெடித்தது என நேரிற் கண்டவர்கள் குறிப்பிட்டார்கள்.

விளாடி கவ்காஷ் வட ஒசட்டியாவின் தலைநகராகும். இதை அடுத்தே இங் குஷ்டியாவும் செச்சனியாவும் அமைந்துள்ளன. இப்பிராந்தியங்களில் அடுத்தடுத்து தீவிரவாதிகளின் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன என அதிகாரிகள் மேலும் குறிப்பிட்டார்கள்.

# ஆப்கானில் போரை நிறுத்துக; ஒபாமாவிடம் தலிபான்கள் கோரிக்கை

இஸ்லாமாபாத், நவ. 08

ஆப்கானிஸ்தான் போரரை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு அமெரிக்க புதிய ஜனாதிபதி ஒபாமாவுக்கு பாகிஸ்தானிலுள்ள தலிபான்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தலிபான்களின் செய்தி தொடர்பாளர் கோரி முகமது யூசுப் அகமதி நிருபர்களிடம் கூறுகையில்- ''அமெரிக்காவில் புஷ் பின்பற்றி வந்த தவறான கொள்கைகளால் அவரின் கட்சி தோல்வியடைந்துவிட்டது. எனவே இராணுவத்தை ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா விலக்கிக்கொள்ளவேண்டும்'' எனக் குறிப்பிட்டார்.

மற்றுமொரு செய்தி தொடர்பாளரான ஜபி புல்லா முஜாஹித் கூறுகையில்- ''ஆப்கானிஸ்தானின் பிரச்சினைக்கு இராணுவ ரீதியாகத் தீர்வு காண முயல்வது முட்டாள்தனமானது. ஒபாமா இராணுவத்தை திரும்பப் பெறுவார் என நம்புகின்றோம் - எனத் தெரிவித்தார்.

# பின்லேடன் மகனுக்கு தஞ்சம் மறுப்பு


மெட்ரிட், நவ. 08

ஒசாமா பின்லேடனின் மகன் உமர், ஸ்பெயினில் வசிக்க புகலிடம் கேட்டிருந்தார். ஆனால், அதனை அந்நாட்டு உள்துறை அமைச்சகம் மறுத்துவிட்டது.

உலக வர்த்தக மைய தாக்குதலுக்கு காரணமான ஒசாமா பின்லேடன் தற்போது ஆப்கானில் தங்கியிருக்கிறார் எனக் கூறி அமெரிக்கப் படைகள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளன.

ஒசாமா பின்லேடனின் மகன் உமர் பின்லேடன் மத்திய கிழக்கு நாடுகளில் அரசியல் புகலிடத்தின் கீழ் உள்ளார்.

இந்நிலையில், ஸ்பெயினில் வசிக்க அவர் அனுமதி கோரியிருந்தார். ஆனால், அந்நாட்டு சட்டங்களின்படி அரசியல் புகலிடம் அளிக்க இடமில்லை என்று கூறி உமர் மெட்ரிட்டில் தங்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அவர் தனது 52 வயது மனைவி சைனா அல்சபா பின்லேடனுடன் பிரிட்டனில் குடியேற முயற்சித்து வருகிறார். சைனா அல்சபாவின் பூர்வீக நாடு பிரிட்டனாகும்.



ஜப்பானின் டோக்கியோ நகரிலுள்ள அதிநவீன தோட்டம் இது. இதில் காய்த்துத் தொங்குகின்றன தக்காளிகள். தக்காளி மட்டுமல்லாமல் பூசணிக்கொடி, [illegible] நெல் ஆகியவை உட்பட பல பயிர்வகைகள் இங்கு விளைகின்றன. அ[illegible] இவை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

# வியட்நாமுக்கு ரஷ்யாவின் அணுமின் தொழில் நுட்பம்

மாஸ்கோ, நவ. 08

வியட்நாமின் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் அந்நாட்டிற்கு அணுசக்தியிலிருந்து மின்சாரத்தை எடுக்கும் தொழில்நுட்பங்களை வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது என ரஷ்ய வெளியுறவுத் துறை இணையமைச்சர் ஆந்த்ரே டெனிசோ கூறியுள்ளார்.

அமெரிக்காவின் பரம எதிரி நாடுகளில் ஒன்றாக கருதப்படுவது வியட்நாம். ஆனால், அந்நாட்டு வளர்ச்சி திட்டங்களில் ரஷ்யா அதிக அக்கறை காட்டி வருகிறது.

கடந்தவாரம் அந்நாட்டுடன் இயற்கை எரிவாயு, எரிபொருள் பரிமாற்றம் ஆகியவை குறித்து ரஷ்யா ஒப்பந்தம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரிப் பகுதி மீது இராணுவம் ஷெல் வீச்சு நேற்றுவரை 12,000 மக்கள் இடம் பெயர்ந்தனர்

கிளிநொச்சி, நவ. 08

கிளிநொச்சி மாவட்டம் பூநகரியை அண்டிய பகுதிகளை நோக்கி கடந்த சில தினங்களாக இராணுவத்தினர் செறிவான ஷெல்த் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதனால் அந்தப் பகுதிகளிலுள்ள மக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து வேறு பகுதிகளுக்குச் சென்றுகொண்டிருக்கின்றனர்.

கிராஞ்சி, வலைப்பாடு ஆகிய பகுதிகள் மீது படையினர் நடத்திய ஷெல் வீச்சுக்களால் அங்கிருந்து மக்கள் இடம்பெயர்ந்து பூநகரி, செம்மண்குன்று ஆகிய பகுதிகளில் அடைக் கலம் புகுந்திருந்தனர். தற்போது பூநகரி மற்றும் அதனை அண்டிய பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்படுவதால் ஏற்கனவே இடம்பெயர்ந்திருந்த மக்களும் மீண்டும் இடம்பெயரவேண்டிய அவல நிலை ஏற்பட்டிருக்கின்றது.

கடந்த சில நாட்களில் 12 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்திருக்கின்றனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

இவ்வாறு இடம்பெயரும் மக்கள் தங்குமிட வசதிகள் இன்றி மரநிழல்களிலும், காடுகளிலும் தஞ்சமடைந்திருக்கின்றனர். அவர்களுக்கு உரிய தங்குமிடங்கள் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகள் இல்லாதமையால் அந்த மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். (அ-சி)

## நிவாரணப் பொருள்களின் தரத்தை உத்தரவாதப்படுத்த அரச அதிபர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ. 08

இடம்பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் ஒக்ரோபர் மாதத்துக்கான நிவாரணத்துக்கான பொருள்களின் தரத்தை உறுதிசெய்யுமாறு யாழ்.அரச அதிபர் பல நோக்குக்கூட்டுறவுச்சங்கங்களைகேட்டுள்ளார்.

களஞ்சியங்களில் இருந்து பெற்றுச் செல்லும்போது தரமான பொருள்களை எடுக்கும்படியும் எக்காரணம் கொண்டும் தரமற்ற பொருள்களை விநியோகிக்க வேண்டாம் என்றும் அரச அதிபர் கேட்டுள்ளார்

# ஐ.தே.கட்சியின் பட்ஜெட்டை அமுல்படுத்த ரூ.40 ஆயிரம் கோடி மேலதிகமாகத் தேவை!

## அது மஹிந்த சிந்தனையின் கண்ணாடி என்கிறார் பிரதிநிதி அமைச்சர்

கொழும்பு, நவ.8

ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்திருக்கும் மாற்று வரவு - செலவுத் திட்ட யோசனைகளை நடைமுறைப்படுத்துவதாகவிருந்தால் 40 ஆயிரம் கோடி ரூபா பணம் மேலதிகமாகத் தேவைப்படும் என்று பிரதி நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தற்போது எமது அரசால் முன்வைக்கப்பட்டிருக்கும் 2009ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் மஹிந்த சிந்தனையின் கண்ணாடியாகும்.

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் மக்களுக்குத் தேவையான எல்லாம் உண்டு.

ஆனால், இதில் பிழை காண ஐ.தே.க. முற்படுகிறது. அதற்காகவே போலியான முறையில் - மக்களை ஏமாற்றும் வகையில் வரவு - செலவுத்திட்ட யோசனை ஒன்றை அக்கட்சி முன்வைத்துள்ளது.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள யோசனைகள் நடைமுறைக்குச் சாத்தியப்படாதவை. ஆட்சியைக் கைப்பற்றும் ஆசையில்தான் இந்த மாற்று யோசனைகளை ஐ.தே.கட்சி வெளியிட்டுள்ளது.

இந்த நாட்டு மக்கள் முட்டாள்கள் அல்லர். அவர்கள் புத்திசாலிகள். இந்த மாற்று யோசனைகள் போலியானவை என்பதை அவர்கள் நன்கு அறிவர்.

ஐ.தே.க.வின் இந்த யோசனைகளை நடைமுறைப்படுத்துவதென்றால் அதற்கு 40 ஆயிரம் கோடி ரூபா பணம் மேலதிகமாகத் தேவை. இந்த நிதியைத் திரட்டுவது முடியாத விடயம் - என்றார். (அ-சி)

## அமைச்சர் சம்பிக்கவுக்கு எதிராக மருதானையில் நேற்று ஆர்ப்பாட்டம்

அமைச்சர் சம்பிக்க ரணவக்க முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டமையைக் கண்டித்து 'முஸ்லிம் உரிமைக்கான அமைப்பு' நேற்று மருதானை பள்ளிவாசலுக்கு முன்பாக ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியது.

ஆர்ப்பாட்டப் பேரணிக்கு ஆதரவு தெரிவித்து கொழும்பு புறக்கோட்டைப் பகுதியிலுள்ள அனைத்து முஸ்லிம் வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன.

இந்த ஆர்ப்பாட்டம் ஜும் ஆ தொழுகையின் பின்னர் இடம்பெற்றது. இதில் பல நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர்.

பல அரச பாடசாலைகள் முஸ்லிம் பெண்பிள்ளைகள் அணியும் ஹிஜா மற்றும் நீண்ட காற்சட்டை போன்றவற்றுக்கு தடைசெய்து வருகின்றன. அதற்கும் எதிர்ப்புத் தெரிவித்தே தாம் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்துகின்றனர் என முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பின் செயலாளர் தெரிவித்தார். (சி)

## கெற்பலிப் பகுதியில் படையினர் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், நவ. 08

கச்சாய், கெற்பலிப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை படையினர் மருத்துவ முகாம் ஒன்றை நடத்தினர்.

இந்த முகாமில் 500க்கு மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்றனர் என்று பலாலி படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

யாழ்.படைகளின் தளபதி ஜி.ஏ.சந்திரசிறியின் ஆலோசனையின் பேரில் 525ஆவது படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் இந்த மருந்துவ முகாம் கெற்பலி கனிஷ்ட பாடசாலையில் நடை பெற்றது.

53ஆவது படையணியின் பிரதித் தளபதி 525 ஆவது படைத்தளபதி, யாழ். சிவில் நிர்வாக அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுமார் 500க்கும் மேற்பட்ட மக்கள் சிகிச்சை பெற்றதுடன் இராணுவத்தைச் சேர்ந்த 3வைத்தியர்கள் மற்றும் இராணுவத் தாதியர் தமது பங்களிப்பை வழங்கினர். நோயாளர்கள் பரிசோதிக்கப்பட்டு அவர்களுக்கான மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டன.

இக்கிராமத்தில் வசிப்போர் வசதி குறைந்த குடும்பங்களாக இருப்பதுடன் நகரப்பகுதிக்குச் சென்று மருந்து வசதிகளைப் பெற்றுக்கொள்ளுமளவுக்கு பொருளாதார வசதியற்றவர்களாவர். அதன் காரணமாக சிறார்கள் சுவாச, காசநோய், விட்டமின் குறைபாடு, போசக்கின்மை போன்றவற்றால் பாதிப்படைந்துள்ளனர். உரியகாலத்தில் தடுப்பு மருந்துக்களைப் பெறாமலும் இருந்துள்ளனர் - என்று தெரிவிக்கப்பட்டது. (அ-01)

**பழைய மாணவர் சங்கம்**
**யா/ யாழ்.இந்து மகளிர் கல்லூரி**

யா/ யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை (09.11.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறும்.

பழைய மாணவர் சங்கம்,
யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி.

**ஆய்வுக் கருத்தரங்கு தொடர்பு - 1**
**யாழ்ப்பாணம் பொருளியலாளர் சங்கம்**

இடம்: *பொருளியல்துறை விரிவுரை மண்டபம், யாழ்.பல்கலைக்கழகம்*

காலம்: *நாளை (09.11.2008) ஞாயிற்றுக்கிழமை*

நேரம்: *9.00 - 11.00 மணிவரை*

பிரதம விருந்தினர்: *பேராசிரியர் S.சத்தியசீலன் (பீடாதிபதி, பட்டப்பின்படிப்புக்கள் பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)*

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: சகல அங்கத்தவர்களையும் இந்த ஆய்வரங்கில் கலந்துகொள்ளுமாறு பொருளியலாளர், சங்கத்தின் தலைவர் பேராசிரியர் V.P.சிவநாதன் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

**செயலாளர்,**
**யாழ்ப்பாணப் பொருளியலாளர் சங்கம், யாழ்ப்பாணம்**

## காரைநகரில் கல்வித்தின விழா

யாழ்ப்பாணம், நவ. 08

தீவக கல்வி வலயம் நடத்தும் கல்வித்தின விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு காரைநகர் கலாநிதி அ.தியாகராசா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

ஊர்காவற்றுறை கோட்டக்கல்வி அதிகாரி ச.பாஸ்கரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலனும், சிறப்பு விருந்தினராக தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.ஸ்ரனிஸ்லாவும் கலந்து கொள்ள உள்ளனர். (1-250)

## பட்டப்பின் கல்வியியல் பிரிவு அரையாண்டுப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ.8

பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா கற்கைநெறிமுழுநேரம், மற்றும் பகுதி நேரம் பகுதி ஐ/ஐஐ, இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன் யாழ். பல்கலைக் கழக கல்வியியல் துறை அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கலைப் பீடாதிபதி கேட்டுள்ளார். (1)

## 31 ஆம் நாள் நினைவஞ்சல் அலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 24 ★ 04 ★ 1932 | 09 ★ 10 ★ 2008 |

**அமரர் திரு சின்னக்குட்டி மார்க்கண்டு**

*நீங்காத நினைவுகளில் மாதமொன்றானதுவோ...!*
*நீர் பாதியில் எமைத் தவிக்கவிட்டு*
*ஆண்டுகள் பல ஆனா போதிலும்*
*ஆறாது எம் துன்பம்*
*ஆண்டவன் திருவடியில் அமைதியாய் நீர் வாழ*
*ஆண்டாண்டாய் பிரார்த்திப்போம் உங்கள் நினைவுடனே*

உங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
சுந்தரம் குடும்பம் (சகோதரன்),
தயாபரன் குடும்பம் (பிரான்ஸ்),
ஜெயகிருஷ்ணா குடும்பம் (பிரான்ஸ்).

பழைய பொலிஸ் நிலைய வீதி,
கோப்பாய் தெற்கு.

## மரண அறிவித்தல்கள்

### பொன்னுத்துரை சோமாஸ்கந்தன்

(முன்னாள் பிரதம முகாமையாளர், நல்லூர் ப.நோ.கூ.சங்கம்)



தொல்புரம், சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம், அம்பனையை வதிவிடமாகவும் இங்கிலாந்து ஹரோ (Harrow)வைத் தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சோமாஸ்கந்தன் 02.11.2008 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - செல்லக்கண்ணு தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முத்துக்குமாரு-சின்னம்மாவின் அருமை மருமகனும் கோபாலகிருஸ்ணனின் அன்புத் தம்பியும் செல்வராணியின் அன்புக் கணவரும் சொசேல், ஜெனேல், Dr. ரஜேல் ஆகியோரின் அருமைத் தந்தையும் யசிந்தா, சுபந்தினி ஆகியோரின் அன்பு மாமனும் சுஜல், ஆரோகி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.11.2008) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு மேற்கு லண்டனில் அமைந்துள்ளHendon cemetery&crematorium (Holdres Hill Road, London NW7 1NB) யில் நடைபெற்று பிற்பகல் 3 மணிக்கு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

London 00442089330863

*அம்பனை, சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.*

தகவல்:
மு.துரைரத்தினம் (மைத்துனர்).

### சிறீகாந்தா பாக்கியலட்சுமி

பருத்தித்துறை, ஐயனார் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிறீகாந்தா பாக்கியலட்சுமி நேற்று (07.11.2008) வெள்ளிக்கிழமை காலமானர்.

அன்னார் சிறீகாந்தாவின் அன்பு மனைவியும், தினேசா, சோபிதா, பாலமுரளி, துட்சணன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுதர்சன், துசான் ஆகியோரின் மாமியாரும், நிருஜாவின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2008) சனிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஐயனார் வீதி, பருத்தித்துறை.*

*தகவல்:*
குடும்பத்தினர்

### யோசப் அல்பேட்



யாழ்.மாகாண அமலமரித் தியாகிகள் சபையைச் சார்ந்த அருட்தந்தை விக்டர் ஜெயசிங்கம் அடிகளாரின் தந்தை யோசப் அல்பேட் நேற்று (07.11.2008) வெள்ளிக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் மேரி றோசலின் அன்புக் கணவரும் அன்று ராஜசிங்கம், எட்வேட் ரட்ணசிங்கம், ஜோஜ்குலசிங்கம், ஜோசபின் ருக்மணி, கிறீஸ்ரின் ஜெயமணி ஆகியோரின்அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*16, புதிய வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
யாழ். அமலமரித் தியாகிகள்,
657/1, தொடர்பகம்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரை நிறுத்துமாறு இலங்கையை இந்திய அரசு வற்புறுத்த வேண்டும்

## கனிமொழி சொல்கிறார்



சென்னை, நவ.8

''போரை நிறுத்துமாறு இலங்கை அரசை இந்திய அரசு தொடர்ந்து வற்புறுத்த வேண்டும்.''

-இவ்வாறு கூறுகிறார் கனிமொழி எம்.பி.

சென்னை சேப்பாக்கத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மகளிர் அணியினர் இலங்கையில் போரை நிறுத் தக்கோரி உண்ணாவிரதப் போராட்டம் நடத் தினர். அந்த நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு-

இலங்கையின் ஆட்சி மொழியாக சிங்களம் என்று மாற்றப்பட்டதோ, புத்த மதம்தான் அந்த நாட்டின் மதமாக சட்ட பூர்வ மாக அறிவிக்கப்பட்டதோ, அன்றே ஈழத் தமிழர்களின் போராட்டமும் தொடங்கி விட்டது.

1957ஆம் ஆண்டு தந்தை செல்வாவுக்கும், இலங்கையை ஆட்சி செய்து கொண்டிருந்த பண்டாரநாயக்காவுக்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தின் படி தமிழர்களுக்குரிய உரிமைகள் தரப்படும் என்றும் அவர்களுக்கு சட்ட பூர்வமாக அந்த நாட்டில் சமக்குடிகளாகக் கருதப்படுவார்கள் என்றும் உறுதி மொழி வழங்கப்பட்டது. பின்னர் கிழித்து வீசப்பட்டது.

இலங்கை அரசுகள் தமிழர்கள் குறித்த எந்தவொரு ஒப்பந்தத்திற்கும் ஒரு காகிதத்தின் மதிப்பைக் கூடக் கொடுக்கவில்லை என்பதுதான் உண்மை.'

### செஞ்சிலுவைச் சங்கத்தையே துரத்திவிட்டார்கள்

உலகத்தில் எந்த இடத்தில் போர் நடந்தாலும் உலக சமாதான நிறுவனங்கள் அங்கு செல்ல அனுமதிக்கப்படும். செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக அங்கு உள்ள மக்களுக்கு உதவிகள் அளிக்கப்படும். ஆனால் இலங்கையில் மட்டும் செஞ்சிலுவைச் சங்கத்தையே துரத்திவிட்டார்கள்.

ஐ.நா. சபையைச் சேர்ந்த அமைப்புகள் எல்லாம் விரட்டப்பட்டுவிட்டன. இலங்கை அரசு அங்குள்ள தமிழர்களை எப்படி நடத்துகிறது என்ற உண்மை நிலை நமக்கு தெரிவது இல்லை. முகாமில் இருக்கும் தமிழர்களை விடுதலை இயக்கத்தை சேர்ந்தவர்களா என்று கேட்டு சித்திரவதை செய்கிறார்கள். முகாமில் இருக்கும் தமிழர்களின் கதி என்ன என்பது இதுவரை தெரிவது இல்லை. இவ்வாறு மனித உரிமைகள் மீறப்படுகிறன.'

### இந்தியா உலகநாடுகளோடு பேசவேண்டும்

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ இந்த போர் முடிந்த பிறகு தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்வேன் என்று கூறுகிறார். இலங்கை அரசு இந்தியாவிடம் ஒன்று சொல்லுகிறது. உலக நாடுகளிடம் பேசும் போது வேறுவிதமாக பேசுகின்றது. ஆகவே எது உண்மை என்பதை நாம் கேட்க வேண்டாமா? இலங்கை தமிழர்களுக்கு தீர்வு காணபோர் நிறுத்தம் மட்டும்தான் வழி.

தன்னிடம் ஆயிரம் குறைபாடுகளை வைத்துக் கொண்டு இருக்கும் இலங்கை அரசு போரை நிறுத்திவிட்டு பேச்சுக்கு வரும்போதுதான் இந்த போராட்டத்திற்கு தீர்வு கிடைக்கும் என்பதை நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கொண்டே இருக்க வேண்டும். அதுதான் நமது கடமை. இந்திய அரசு தன்னால் முடிந்த அத்தனை வழிகளிலும் போர் நிறுத்தத்தை நிறுத்தவேண்டும் என்று வலியுறுத்தி சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். முடிந்தால் உலக நாடுகளோடு பேச வேண்டும் - என்றார். (அ-சி)

## அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டுஉரையாற்றியஜே.வி.பியின்எம்.பி.சுனில் ஹந்துன்நெத்தியே இதைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

2009ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் 26 முக்கிய அமைச்சுகளுக்கான நிதி பெருமளவு குறைக்கப்பட்டு அந்நிதி ஜனாதிபதியின் செலவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி, அரச ஊழியர்கள் வாழ்க்கைச் செலவின கொடுப்பனவுக்கு ஒதுக்கப்பட்ட பணத் தொகையை விடவும் 10 மடங்கு தொகை ஜனாதிபதியின் செலவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கவே இறக்குமதி வரியை அதிகரிக்கிறோம் என்று ஜனாதிபதி சொல்கிறார்.

ஆனால், உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான எந்தவொரு ஏற்பாடும் செய்யப்படவில்லை. அவ்வாறு செய்யாமல் வரியை அதிகரித்தால் எப்படி மக்களால் வாழ முடியும்?

இந்த மாதிரியான ஒரு வரவு - செலவுத் திட்டத்திற்கு நாம் எமது ஆதரவைத் தரமாட்டோம். இதை நாம் கடுமையாக எதிர்க்கிறோம் - என்றார். (அ-சி)

## அம்பாறையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் ஒருவர் படுகாயமடைந்தார் என்றும் பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

குறித்த பகுதியில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்த விவசாயிகளுக்குப் பாதுகாப்பு வழங்கியவர்கள் மீது விடுதலைப் புலிகளின் அணியொன்று மறைந்திருந்து தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது என்று பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது.

இச்சம்பவத்தையடுத்து அப்பகுதியை விசேட அதிரடிப் படையினர் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர் என்றும் மத்திய நிலையம் மேலும் தெரிவித்தது. (அ-சி)

## படையினர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1.2 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள விடுதலைப்புலிகளின் தாக்குதல் பிரிவுக்கு எதிராக விமானப்படையினர்தாக்குதல் நடத்தியுள்ளனர் அந்தத் தாக்குதல் வெற்றியளித்துள்ளது அதனால் விடுதலைப்புலிகள் பின்வாங்கி விட்டனர்.

தரைப் படையினர் பூநகரி நோக்கி முன்னேறுகின்றனர்.

பரந்தனில் உள்ள விடுதலைப்புலிகளின் விநியோக முகாமும் தாக்கி அழிக்கப்பட்டுள்ளது - என்றும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார். (அ-1)

## வன்னிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வத்தினர் இவ்வாறு மருத்துவப் பொருள் களைக் கொண்டுசெல்லும் லொறிகளைத் தாமதப்படுத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வகையான மருந்துப் பொருள்களைக் கொண்டு செல்வதற்கு இதுவரை காலமும் ஒருவருடத்திற்கு ஒருமுறை மட்டுமே பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டு வந்தது. ஆனால் தற்போது ஒவ்வொரு தடவையும் அனுமதிப்பத்திரம் பெறவேண்டும் என இராணுவத்தினர் அழுத்தம் கொடுத்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)


## பணியாள் தேவை

கொக்குவிலில் இயங்கும் புத்தகக் கடைக்கு பெண் பணியாளர் தேவை. உடன் வரவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (ஞாயிறு சந்திக்கலாம்),

தொடர்பு:
பாக்யா காகிதாதிகள்,
இல:- 121, K.K.S.வீதி,
கொக்குவில்.


## வீட்டுக்காரர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலைக்குச் சென்ற இளைஞர்கள் தத்தம் வீடு வந்து சேர்ந்ததும் ஆயுததாரிகள் அவர்களைக் கடத்திச் சென்றனர்.

கூலித்தொழிலாளர்களான எம். நிமலராஜ், ஆர். ஞானராசா ஆகியோர் கடத்திச் செல்லப்பட்டது குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## பலத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களால் குடாநாடு அதிர்ந்த வண்ணம் இருந்தது. மற்றைய நாள்களை விட நேற்றிரவு ஷெல் வீச்சு அகோரமாக இருந்தது. திடீர் திடீர் என ஏவப்பட்ட இந்த ஷெல் வீச்சுக்களால் இருதயநோயாளர்கள் பாதிக்கப்பட்டனர். திடீர் திடீர் என ஏவப்படும் ஷெல்களின் அதிர்ச்சியினால் தாம் பெரிதும் பாதிக்கப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர். (அ-1)

## பஸ் கட்டணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளார். வேண்டுமானால் பஸ் கட்டணங்களை 9 சதவீதத்தினால் குறைக்க முடியுமெனவும் கெமுனு விஜேரத்ன கூறினார்.

இதேவேளை, அரசு எரிபொருள் விலையைக் குறைத்து, ஏனைய வரிகளை அதிகரித்துள்ளதாகவும், இதனால் வாகன உதிரிப்பாகங்களுக்கான செலவு அதிகரித்துள்ளது என்றும், இதனால் பஸ் கட்டணங்களைக் குறைப்பதில் நடைமுறைச் சிக்கல் காணப்படுவதாகவும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (அ-சி)

## தொடர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேசியபோது அவர் இதைத் தெரிவித்தார்.

இம்மாதம் 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை மாநிலம் முழுவதும் பொதுக்கூட்டங்கள், உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டங்கள் போன்ற போராட்டங்களை நடத்தப் போகிறோம் என்றும் -

இலங்கையில் உடனடியாக போர்நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்பதை இப் போராட்டங்கள் வலியுறுத்தும் என்றும் வைகோ குறிப்பிட்டார்.

## தமிழகத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் இருந்து கொழும்புத் துறைமுகத்திற்கு அனுப்பிவைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்திலிருந்து அனுப்பிவைக்கப் படவுள்ள உணவுப் பொருள்களை தமிழக முதல்வர் கருணாநிதி நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

தமிழகத்தில் இருந்து வரும் உணவுப் பொருள்கள் இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தில் ஒப்படைக்கப்படும். பின்னர் அவை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஊடாக வன்னி மக்களுக்கு விநியோகிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த உணவு விநியோகத்தை இந்தியத் தூதரகம் மேற்கொள்ளும். அதனைக் கண்காணிக்கும் நடவடிக்கையை இந்திய மத்திய அரசு மேற்கொள்ளும் என்றும் கூறப்பட்டது. (அ-சி)

## தமிழர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய கூட்டமைப்பு எம்.பி. சுரேஷ் பிரேமச்சந்திரனே இதனைக் கூறினார். அவர் தொடர்ந்தும் கூறியவை வருமாறு:-

பயங்கரவாதத்தை அழிக்கிறோம் என்று கூறிக்கொண்டு இலங்கை அரசு தமிழ் மக்களைக் கொன்றொழிக்கின்றது. தமிழனைத் தோற்கடித்த தலைவர் என்ற பெயரைச் சிங்கள மக்களிடமிருந்து கறக்க அவர் முயற்சிக்கிறார்.

இந்த வருடம் யுத்தம் முடியும் என்று அரசு ஒவ்வொரு வருடமும் சொல்கிறது. அப்படிச் சொல்லிச் சொல்லியே 30 வருடங்களாக யுத்தம் நடக்கிறது.

### தமிழர்களை அழிக்கத் திட்டமிட்ட சதி

6 ஆயிரம் தடவைகள் இலங்கை விமானப் படையினரின் விமானங்கள் வடக்கில் தாக்குதல் நடத்தியுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய சொல்கிறார்.

அப்படியாயின் எத்தனை மக்கள் கொல்லப்பட்டிருப்பர். எத்தனை மக்கள் இடம் பெயர்ந்திருப்பார்கள். எத்தனை வீடுகள் அழிந்திருக்கும் என்பது இதன் மூலம் எமக்குத் தெரிகிறது.

இலங்கை சிங்களவர்களுக்கு மட்டும்தான் சொந்தம் என்று இராணுவத் தளபதி கூறியுள்ளார். ஜனாதிபதி இது தொடர்பாக எதையும் தெரிவிக்கவில்லை. அப்படியாயின் தமிழர்களை அழிக்கத் திட்டமிட்ட நடவடிக்கை ஒன்று இடம்பெறுகிறது என்பது உண்மை.

தமிழ் மக்களை கொலை செய்வதற்காக முப்படையினருக்கும் தினமும் 45 கோடி 60 லட்சம் ரூபாவை அரசு செலவு செய்கிறது.

நாம் சிங்களவர்களுடன் சேர்ந்து வாழ விரும்புகிறோம். நீங்கள் விரும்புகிறீர்களா? இல்லையா? இல்லையென்றால், நாம் பிரித்து செயற்படுவதைத் தவிர வேறு வழியில்லை - என்றார். (அ-சி)

## முதல்வர் கருணா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் எவ்வாறான தியாகங்களையும் செய்வதற்குத் தயாராக இருக்கின்றோம். எமது இயக்கம் ஓர் விடுதலை இயக்கம். அரச படைகளுக்கு எதிராகப் போராடுகின்றோம். காலநேரம் வரும்போது சரியான பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

கே - பேச்சு மூலம் தீர்வு காணலாம் என்ற இந்தியாவின் கோரிக்கைக்குப் பிறகு, இலங்கை இராணுவத்தின் குண்டுவீச்சு குறைந்திருக்கிறதா?

கே - மாறாக தொடர்ந்தும் கிளிநொச்சிப் பிரதேசத்திலுள்ள குடிமனைகள் மீது சரமாரியான பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏராளமான வீடுகள் அழிந்து நாசமாகியுள்ளன. ஒரு குடும்பத்தில் தந்தையும் தனயனும் அவ்விடத்திலேயே பலியாகியுள்ளனர்.

கே - இந்தச் சூழலில் இந்தியாவிடம் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?

ப - இலங்கைக்கான இராணுவ உதவிகளை நிறுத்தி, எமது இயக்கத்தின் மீதான தடையை நீக்கி, அதனை அங்கீகரிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கே - ஈழப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் இருந்ததைப் போன்ற ஓர் ஆதரவு நிலை இப்பொழுது மீண்டும் தமிழகத்தில் உருவாகியுள்ளதா?

ப - தமிழீழ மக்களும் தமிழக மக்களும் ஒரே குடும்பத்தவர்கள். தொப்புள் கொடி உறவுகள் போன்றவர்கள். எமக்கொன்றென்றால் தமிழகம் கொதித்தெழும். இன உணர்வு தமிழகத்தில் நீறுபூத்த நெருப்பாக இருந்து வருகின்றது. இன்று ஈழத்தில் இலங்கை அரச படைகள் தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்புப்போரை மேற்கொள்ளும்போது அதற்கு எதிராக தமிழக மக்கள் கொதித்தெழுந்துள்ளார்கள். இதுவே யதார்த்தம்.

### எமக்கு ஆதரவாக வருவார்கள்

கே - தமிழகத்தில் உருவாகியுள்ள இந்த ஆதரவு நிலை ஈழப் போராட்டத்துக்கு எந்த வகையில் உதவியாக இருக்கும்?

ப - தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளை முழு இந்திய மக்களும் அரசியல் தலைமைகளும் புரிந்துகொண்டு எமக்கு ஆதரவாக வருவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

கே - வைகோ, அமீர், சீமான் ஆகியோர் உங்களை ஆதரித்ததற்காக கைது செய்யப்பட்டிருக்கிறார்களே. ஈழ ஆதரவு நிலைப்பாடு தமிழக கூட்டணி அரசியலில் மாற்றங்களை உருவாக்கும் போலிருக்கிறதே?

ப-தமிழர்கள் எல்லோரும் ஒற்றுமையாக ஒரே அணியின் கீழ் அணி திரள்வதையே நாம் விரும்புகின்றோம். தமிழக உள்ளூர் அரசியலுக்குள் தலையிடாமல் இருப்பதே எமது கொள்கையாகும். தமிழர்கள் என்ற ரீதியில் எல்லோரையும் அரவணைத்துச் செல்வதையே நாம் விரும்புகின்றோம்.

கே- மூத்த தமிழ் அரசியல்வாதியாகவும் தமிழக முதல்வராகவும் ஈழப் போராட்டத்தில் கலைஞரின் செயற்பாடுகள் குறித்த உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப- கலைஞர் எமக்குத் தந்தை போன்றவர். இன உணர்வு மிக்கவர். தமிழர்கள் எல்லோரும் சுயமரியாதையோடு வாழ வேண்டும் என்பதில் அக்கறையுள்ளவர். ஈழத் தமிழர்களுக்கு இன்னல்கள் ஏற்பட்ட போதெல்லாம் என்னென்ன செய்யவேண்டுமோ அத்தனை பணிகளையும் ஜனநாயக வழியில் செய்து வருகிறார்.

கே - நீங்கள் ஜெயலலிதாவை கொலை செய்யக் குறி வைத்திருக்கிறீர்கள் எனவும், அதனால்தான் அவருக்கு 'இசட்' பிரிவு பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது எனவும் அவர் கூறியிருக்கிறாரே?

ப- இவ்வாறான கருத்துகளும் பிரசாரங்களும் எமக்கெதிரான சக்திகளால், தமிழக அரசியல் தலைமைகளை எமக்கெதிராக திருப்பிவிடும் நோக்கில் உருவாக்கப்பட்ட கட்டுக்கதையாகும். இவ்வாறான புனை கதைகளை கேட்கும்பொழுது எமக்கு மிகவும் வேதனையாகவும், துன்பமாகவும் இருக்கின்றது. இவ்வாறான புனை கதைகளை உருவாக்க வேண்டாமென சம்பந்தப்பட்ட தீரப்பினரை மிகவும் அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.'' - என்றார் பா.நடேசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.11.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.